# அரங்கம்
செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்








வார இதழ் – இலவசம் | www.arangamnews.com | வெள்ளி, வைகாசி 25, 2018. இதழ் - 14




## வெள்ளத்தில் மூழ்கும் நாடாளுமன்றம்?


மழை வெள்ளம் உட்பட சீரற்ற காலநிலை தொடர்ந்தும் நீடித்துவரும் நிலையில் நாடாளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் அமைந்துள்ள தியவன்னா ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்து வரும் நிலையில் வெள்ள அபாயம் ஒருபுறம் இருக்க, முதலைகளின் அச்சுறுத்தலும் தற்போது ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒருவாரமாக நாடு முழுவதிலும் கடும் மழை, காற்றுடன் கூடிய காலநிலை நிலவிவருகின்ற அதேவேளை மப்பும் மந்தாரமுமாக வானம் காணப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் 18 மாவட்டங்களில் சீரற்ற காலநிலை நிலவிவருவதோடு அதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வியாழக்கிழமை 11ஆக அதிகரித்திருப்பதோடு ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 840 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.
இடம்பெயர்ந்தவர்கள் 229 தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கொழும்பு மாவட்டத்திலும் கடும் மழை பெய்து வருவதோடு நாடளுமன்றம் அமைந்துள்ள பகுதியிலுள்ள தியவன்னா ஓயாவின் நீர்மட்டமும் அதிகரித்து வருகின்றது.
இதன் காரணமாக நாடாளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக தெரிவித்த மெகா பொலிஸ், மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இது குறித்து சபாநாயகர் கரு ஜயசூரியவின் கவனத்திற்கு கொண்டுவந்திருப்பதாகவும் கூறினார்.
நாடாளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கினால் அந்த சந்தர்ப்பத்தை எதிர்கொள்வதற்காக மீட்புப் பணியாளர்கள், அனர்த்த அவசர பணியாளர்கள் உட்பட இராணுவத்தினரும் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.
இலங்கை நாடாளுமன்றம் இதற்கு முன்னர் வெள்ளத்தில் மூழ்கிய மிகப்பெரிய 3 சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.
இதற்கமைய கடந்த 2010, 2012 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## இலங்கைக்கு உதவியது குறித்த ஆவணங்களை பிரித்தானியா அழித்தது

விடுதலைப்புலிகளின் ஆரம்பக் காலப்பகுதியில், பிரிட்டன், இலங்கைப் படையினருக்கு வழங்கிய உதவிகள் தொடர்பான சுமார் 200 ஆவணங்களை பிரித்தானிய வெளியுறவு அலுவலகம் அழித்துவிட்டதாக பிரிட்டனின் த கார்டியன் சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி... (பக்கம் -08 )






## 'ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன் : தமிழரின் வாக்கும் கிடைக்கும்' - கோட்டாபய

2020ஆம் ஆண்டில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராக இருப்பதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ச பகிரங்கமாக அறிவித்துள்ளார்.


சிங்கள வானொலி ஒன்றின் அரசியல் நிகழ்ச்சி ஒன்றில் புதன் இரவு கலந்துகொண்ட அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
எனினும் தாம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தனது சகோதரரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்சவின் அனுமதி



தேவைப்படுகிறது என்பதையும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் தாம் போட்டியிட்டால் தனது மற்றுமொரு சகோதரர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவின் உதவியும் அதிகமாக கிடைக்கும் என்று நம்பிக்கை வெளியிட்ட அவர், இதற்காக

தொடர்ச்சி... (பக்கம் -22 )



# தூத்துக்குடி பலி 13 ஆக உயர்வு: போக்குவரத்து, இணையம், கடைகள், வங்கிகள் இல்லை



தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் தாமிர உருக்காலைக்கு எதிராக நடந்த போராட்டத்தில் நடத்தப்பட்ட போலீஸ் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 13ஆக உயர்ந்துள்ளது.

செவ்வாய்க்கிழமை முதலில் துப்பாக்கிச்சூடு நடந்தவுடன் 9 பேர் உயிரிழந்ததாக அரசுத் தரப்பில் கூறப்பட்டது.

மறுநாளான புதன்கிழமை இறந்தவர்கள் உடலைப் பெற மறுத்து அவர்களது உறவினர்கள் மருத்துவமனையில் போராட்டம் நடத்தினர். இதையடுத்து, இரண்டாவது முறையாக போலீஸார் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டனர்.

இதையடுத்து உயிரிழந்தோர் எண்ணிக்கை புதன்கிழமை 11 ஆக உயர்ந்தது. இந்நிலையில், மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் ஆகியோரை மாற்றி அரசு உத்தரவிட்டதுடன், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இணைய சேவையை ஐந்து நாட்கள் துண்டித்தும் உத்தரவிட்டது.

இதனிடையே போராட்டம் தொடர்பான நிகழ்வில் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த செல்வகுமார், உசிலம்பட்டியைச் சேர்ந்த ஜெயராஜ் (42) ஆகியோர் வியாழக்கிழமை உயிரிழந்தனர். இதனால், இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது.சம்பவம் நடந்து மூன்றாவது நாளான வியாழக்கிழமை காலை வரை தூத்துக்குடி நகரத்தின் இயல்புநிலை திரும்பவில்லை என்று அங்குள்ள செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

ஏற்கெனவே நிலவும் பதற்றம் காரணமாகவே வங்கிகள் மூடப்பட்டுள்ளன, கடைகள் திறக்கப்படவில்லை, சாலையில் இருசக்கர வாகனப் போக்குவரத்து இருந்தாலும், அரசுப் பேருந்துகளைக் காண முடியவில்லை, இணைய சேவைகளும் முடக்கப்பட்டுள்ளன. எனவே நகரத்தின் இயல்புவாழ்க்கை முற்றாக முடங்கியுள்ளது என்கிறார் அவர்.

# கூட்டு எதிரணியில் இணைய ஒப்புதல்

எதிர்வரும் காலத்தில் அரசாங்கத்திற்கு எதிராக கூட்டு எதிர்கட்சியுடன் ஒன்றிணைந்து செயற்பட அரசாங்கத்தில் இருந்து விலகிய 16 பாராளுமன்ற உறுப்பினர்களும் தீர்மானித்துள்ளதாக சுசில் பிரேம ஜயந்த கூறியுள்ளார்.

அரசாங்கத்தில் இருந்து விலகிய 16 ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் புதனன்று (23) முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர்.

இதன்போது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

# ‘கருணா அம்மானின் பெயரைப் பயன்படுத்தி நிதி மோசடி’

கருணா அம்மானின் கட்சிக்காக, இனந்தெரியாதவார்கள் மக்களிடம் பணம் பெறுவதாகவும், வேலை வாங்கித் தருவதாகக் கூறுவதாகவும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் வருண் கமலதாஸ் தெரிவித்தார்.

தம்முடைய கட்சியினுடைய அடையாள அட்டை என்று போலியானவற்றை மக்களிடம் காட்டி மக்களைக் குழப்புகின்ற செயற்பாடுகளில் சிலர் ஈடுபட்டு வருவதாகவும் மட்டக்களப்பிலுள்ள அவர்களுடைய கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கூறினார்.

நிதி சேகரிப்பது மக்களைக் குழப்புகின்ற செயற்பாடுகள் நடைபெறுவதாக அறிகிறோம். இது பற்றி பொலிசாருக்கு முறையிடுவதற்கு முன்னர் மக்களுக்கு ஒரு தெளிவூட்டலை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# தூத்துக்குடி விவகாரம்: போராட்டம் நடத்திய ஸ்டானின் கைதானார்

தூத்துக்குடி: தூத்துக்குடி படுகொலைக்கு பொறுப்பேற்று தமிழக முதல்வர் பதவி விலகும் வரை திமுகவின் போராட்டம் தொடரும் என்று திமுக செயல்தலைவர் ஸ்டாலின் பேட்டியளித்துள்ளார்.




மக்களின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் ஸ்டெர்லைட் ஆலையை இழுத்து மூட கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்க அமைதிப் பேரணியை நடத்திய பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மீது போலீஸ் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளது.

தூத்துக்குடி படுகொலையை தொடர்ந்து சட்டசபையின் அலுவல் ஆய்வு கூட்டத்தை திமுக மற்றும் அதன் தோழமை கட்சிகள் புறக்கணித்துள்ளன. தூத்துக்குடியில் இவ்வளவு பெரிய பிரச்சனை நடக்கும் போது இந்த கூட்டம் தேவையா என்று புறக்கணித்துள்ளனர். அவர் அவையில் இருந்த வெளியே வந்த பின் சட்டசபையில் உள்ள முதல்வர் அறைக்கு வெளியே போராட்டம் செய்தனர். இதையடுத்து போலீஸ் அவர்களை குண்டுக்கட்டாக தூக்கி சென்று கைது செய்ய முயற்சித்தது. பின் பெரிய தள்ளுமுள்ளுவிற்கு இடையில் போலீஸ் அவர்களை கைது செய்தது. இதனால் அங்கே பதட்டமான சூழ்நிலை நிலவியது. போலீஸ் வாகனத்தில் இருந்தபடியே ஸ்டாலின் பத்திரிக்கையாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

முதல்வர் பதவி விலகும் வரை போராட்டம் தொடரும். தூத்துக்குடி சம்பவத்திற்கு தார்மீக பொறுப்பேற்று முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி பதவி விலக வேண்டும். முதல்வர் மட்டுமில்லாமல் அவர்களுடன் துணை முதல்வர் அமைச்சர்களும் பதவி விலக வேண்டும். சென்னை டிஜிபி, தூத்துக்குடி சம்பவத்திற்கு பொறுப்பேற்று பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். அவர்கள் எல்லோரும் பதவி விலகும் வரை எண்களின் போராட்டம் தொடரும். என் மீது என்ன வழக்கு பாய்ந்தாலும் போராட்டம் தொடரும். எல்லா விதமான வழக்கையும் சந்திக்க தயார், என்று ஸ்டாலின் பேட்டியளித்துள்ளார்.

# சிட்னியில் “மட்டக்களப்பு தந்த கவிதைகள்” நூல் வெளியீடு




மட்டக்களப்பில் ஆனைப்பந்தி இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் உயர் பாடசாலையில் 1950-60களில் அதிபராகக் கடமையாற்றிய அமரர் கமலபூஷணி திருநாவுக்கரசு அவர்கள்

எழுதிய பல்சுவைக் கவிதைகள் அடங்கிய நூல் ஒன்று அன்னாருடைய மகள் திருமதி மல்லிகா சின்னையாவினால்,

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் “மட்டக்களப்பு தந்த கவிதகள்’ என்னும் பெயரில், 27. 5. 18 ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படுகிறது.

மிகுந்த புலமை வாய்ந்த கமலபூஷணி அவர்கள் சிறுவருக்கும், மற்றும் பெரியோருக்கும் உகந்த பல் சுவைப் பாடல்களையும், கவிதை நாடகம், நாட்டிய நாடகங்கள் என 30 க்குமேற்பட்ட தலைப்புகளில் எழுதியுள்ளார்.

175 பக்கங்கள் கொண்ட இந்த நூலில் திருமதி மல்லிகா சின்னையாவின் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்கிறது.

“பாடசாலை மாணவர்களுக்குப் பயனுள்ள நூலாக இந்த நூல் அமைவதோடு, எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய சிறப்பு இந்த நூலுக்கு உண்டு என்றும் தாயாரின் நினைவு நூலாக இருந்தாலும்,

மட்டக்களப்பின் சிறப்பையும் நாட்டின் வளங்களையும் இது எடுத்துக் காட்டுகின்றது என்றும் பாடல்கள் மிகவும் இனிமையாகவும், கருத்தாழமானவையாகவும் இருக்கின்றன என்றும்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டத்தின் முன்னாள் வானொலி மாமாவாகப் புகழ்பெற்ற ஒலிபாப்பாளர் நா.மகேசன் தெரிவித்துள்ளார்.



# ‘தமிழர்களை பகடைக்காயாக்கி அரசாங்கத்தை பாதுகாக்கிறது இந்தியா‘ – தருமலிங்கம் சுரேஸ்



தமிழர்களுடைய நலன்கருதி இந்தியா எந்த நிலையிலும் செயற்படவில்லை அதேவேளை தெற்காசிய பிராந்தியத்தில் தன்னை நிலைநிறுத்தி வல்லரசு என சீனாவுடன் போட்டியிடுவதற்காகவும் தங்களுடைய நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்குமாக தமிழர்களை பகடைக்காயாக வைத்து இலங்கை அரசாங்கத்தை பாதுகாத்துக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மட்டு அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தாமரைக்கேணியில் உள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“பெரும்பாலான படித்த புத்திஜீவிகள் சிலர் தங்களுடைய சுயநலத்திற்காகவும் பதவி நிலைகளை தக்கவைத்துக் கொள்வதற்;காகவும் பிழையான கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பிக் கொண்டுவருகின்றனர். இதற்குப் பின்னால் பல துரோகக் கும்பல்கள் தங்களுடைய செயற்பாடுகளை மிகவும் வெற்றிகரமாக செய்து கொண்டுவருவதை நாங்கள் அண்மைக்காலமாக காணக்கூடியதாக இருக்கின்றது” என்றும் அவர் கூறினார்.

“தமிழ் மக்களுடைய போராட்டம் என்பது கடந்த 70 வருடங்களாக எந்த தனி நல சுயநலத்திற்காக இந்த இனத்தை விற்றுப் பிழைக்கின்ற எந்த ஒரு செயற்பாட்டிற்கும் எங்களுடைய



போராட்டம் இருந்ததில்லை. அவ்வாறு இருந்ததனால் பலர் தங்களுடைய தண்டனைகளையும் அதற்குரிய பரிகாரங்களையும் கண்டதுதான் எங்களுடைய தமிழ் மக்களுடைய கடந்தகால அரசியல் வரலாறாக இருக்கின்றது

எங்களுடைய போராட்டம் என்பது ஒரு புனிதமான போராட்டம் சிங்கள பேரினவாதம் எங்கள் மக்களை அடக்கி ஒடுக்கி வந்த காலப்பகுதியில் அவ்வப்போது மக்கள் எதிர்ப்பையும் தங்களுடைய அரசியல் அபிலாஷை களையும் மிக வலிமையாக எதிர்த்து காட்டினார்கள்

இருந்தும் அந்த காலப்பகுதியில் இருந்த அரசாங்கங்கள் அந்த எதிர்ப்புகளை தங்களுடைய ஆதரவை முழுமையாக பயன்படுத்தி சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் பல கட்டங்களில் அடக்கி ஒடுக்கி வந்தார்கள். அந்த நிலைதான் முள்ளிவாய்க்கால் பேரவலம் வரைக்கும் வந்தது.” என்றார் அவர்

# ஐரோப்பிய ஒன்றியத்தின் 46 கோடி உதவியுடன் ஐநா நிறுவனத்தால் மட்டக்களப்பில் வறுமையை ஒழிக்கும் திட்டம்





ஐரோப்பிய ஒன்றியத்தின் 46 கோடி ரூபா நிதியுதவியில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய ஸ்தாபனத்தின் உணவு விவசாய நிறுவனத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட விவசாயத்தினூடாக வறுமையை ஒழிக்கும் அபிவிருத்தி திட்டத்தின் முன்னேற்றங்களை பகிர்ந்து கொள்ளும் விசேட நிகழ்வு செவ்வாய்க்கிழமை (22) மட்டக்களப்பு ஈஸ்ட் லங்கா சுற்றுலா விடுதியில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இத்திட்டத்துடன் சார்ந்த அரச திணைக்களங்கள் பிரதேச செயலாளர்கள், இத்திட்டத்தில் பயன் அடைந்த பயனாளிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த ஐந்து வருடமாக அமுல்படுத்தப்பட்ட இந்த விசேட திட்டத்தில் விவசாயம், கால்நடை உற்பத்தி, நன்னீர்மீன் வளர்ப்பு, சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி, உட்பட பல துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும், வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களில் சுமார் 7000 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார் உலக விவசாய நிறுவன திட்ட முகாமையாளர் திருமதி ரோகினி சிங்கராயர், கிழக்கு மாகாணப் பணிப்பாளர் கபில விக்ரமசிங்க, இந்நிறுவனத்தின் விவசாய அபிவிருத்தி அதிகாரி ஜூட் கிரிசாந், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் உட்பட பல பிரமுகர்கள் பிரசன்னமாகியிருந்தனர்.

# ஒரு மாதத்திற்கான விசேட பொலிஸ் காவல் அரண்கள்





இலங்கை பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைவாக சமூக சேவைகளுக்காக நாடளாவிய ரீதியில் அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் ஒரு மாதத்திற்கான விசேட பொலிஸ் காவல் அரண்கள் (நடமாடும் சேவை) திறந்து வைக்கப்பட்டுவருகின்றன.

இதன் அடிப்படையில், மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருதயபுரம் கிழக்கு, ஜெயந்திபுரம் பௌத்த விகாரையில் மக்கள் ஒன்று கூடும் மண்டபத்தில் கிராமத்துக்கு பொலிஸ் எனும் தலைப்பின் கீழ் ஒரு மாதத்திற்கான பொலிஸ் நடமாடும் சேவை (பொலிஸ் காவல் அரண்) மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி எல்.ஆர்.குமாரசிறியால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த பொலிஸ் நடமாடும் சேவை காவலரணை திறந்து வைத்து உரையாற்றிய போது மட்டக்களப்பு உதவி பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, இலங்கை பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாகவும் பொதுமக்களும் பொலிசாரும் ஒன்றிணைந்த சமூகத்தில் சிறந்த நல்லுறவையும் சிறந்த சமூக செயல்பாட்டையும் கொண்டு செல்லும் நோக்கில் இந்த பொலிஸ் நடமாடும் சேவை (பொலிஸ் காவல் அரண்கள்) நாடளாவிய ரீதியில் நடத்தப்படுகின்றது என்றார்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தீகா வதுற ஒழுங்கமைப்பில் மட்டக்களப்பு உதவி பொலிஸ் அத்தியட்சகர் எல். ஆர்.குமாரசிறி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மத தலைவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# கிண்ணையடி பெயர்ப்பலகையை நிறுவக் கோரி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு கிண்ணையடி கிரமத்தின் பெயர் பலகையை நிறுவுவதற்கு அனுமதி வழங்குமாறு கோரி புதன்கிழமை (23) பிரதேச மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு – திருமலை வீதியில் கிண்ணையடி சந்தியில் ஒன்றுகூடிய சுங்காங்கேணி, கிண்ணையடி, முருக்கன்தீவு மற்றும் பிரம்படித்தீவு கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தமது கோரிக்கைகளை அடங்கிய பதாதைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களையெழுப்பினர்.

கடந்த 30 வருடங்களுக்கு முன்பு கிண்ணையடி கிரமத்தினை அடையாதளப்படுத்தும் வகையில் கிராமத்தின் பெயர் பலகை அமைக்கப்பட்டிருந்து. குறித்த பலகையானது கடந்த ஒரு மாத்திற்கு முன்பு இனந்தெரியாதவர்களினால் சேதமாக்கப்பட்டிருந்து. இது தொடர்பாக வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில் கிண்ணையடி கிராமத்தின் புதிய பெயர்ப் பலகை நிர்மாணிக்க அப்பிரதேசத்தில் இயங்கிவரும் மில்லர் விளையாட்டுக் கழகத்தினர் கோறளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேச சபையில் அனுமதி பெறப்பட்டு கோறளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அனுமதி வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளனர். பெயர்ப் பலகை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரி ஆர்ப்பட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், “தடுக்காதே தடுக்காதே மில்லரின் உரிமையைத் தடுகாதே, கிராமத்துக்கு கிராமம் சட்டம் வேறுபடுகிறதா?, எமது பெயர்



பதாதையைத் தடுக்காதே, பெயர் பதாதையை புதிப்பிக்க அதிகாரசபை அனுமதி மறுப்பது ஏன், மிரட்டாதே மிரட்டாதே பிரதேச சபை உறுப்பினரை மிரட்டாதே, உடைக்காதே உடைக்காதே எங்கள் அடையாளங்களை உடைக்காதே, நீங்கள் உடைக்க நினைப்பது சீமேந்து தூண் அல்ல எங்கள் உரிமைகளையும் உணர்வுகளையும்” என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

# இது விளையாட்டல்ல இயற்கையுடனான மோதல்! ஜாக்கிரதை!

பூபாலரட்ணம் சீவகன்

இது ஒரு வழமையான கருத்துக்கூறல்தான். வருடாவருடம் வந்து போகின்ற ஒரு பிரச்சினை குறித்து, வருடா வருடம் பலரும் எழுதுகின்ற கட்டுரைகளில் இதுவும் ஒன்றுதான்.

உண்மைதான் மழையும், அதனால் ஏற்படும் வெள்ளமும் மண்சரிவும் இப்போது வருடா வருடம் நடக்கும் நிகழ்வாகத்தானே இருக்கின்றன.

ஆனால், இதனை எழுதாமலும் விட்டுவிட முடியாது. இருந்தபோதிலும், அழிவைத் தடுக்க எதுவுமே நடக்கவில்லை என்பதுதான் மிகப்பெரிய கவலை.

**நாமும் ஒட்டுப் பெருக்கிகளாக கத்துவதை நிறுத்த முடியாது**

மழை பெய்தது, அதுவும் எதிர்பார்த்த பருவ மழைதான். கனத்த வெள்ளமும் வந்தது. சொத்துக்கள் அழிந்தன. எல்லாவற்றையும்விட மக்களும் பலியாகியுள்ளனர். பலி எண்ணிக்கை இரட்டை இலக்கத்தில்...

ஆனால், இந்த மழை வழமையானதுதான். சராசரியாக பல பத்து ஆண்டுகளாக இந்த அளவுக்குத்தான் மழை பெய்கிறது என்கிறனர், வானிலை ஆய்வு நிலைய பணியாளர்கள். ஆனால், ஆண்டுக்கு ஆண்டு வெள்ளமும் அதன் அழிவும் அதிகரித்து வருகின்றது.

புவி வெப்பமடைதல் போன்ற வானிலை சம்பந்தப்பட்ட சர்வதேச அம்சங்கள் இந்த மழையின் அளவு சற்றாவது அதிகரிக்க காரணந்தான். எல்லினோ போன்ற மாறிவரும் காலநிலைக் கோலங்களும் காலம் மாறி மழை பெய்வதற்கு காரணம். இந்த விடயத்தில் நம்கையில் பொறுப்பு கொஞ்சம் குறைவு. இருந்தாலும் தற்போதைய மழை வழமையான பருவ மழை மாத்திரமே.

அதுவும், இந்த பலத்த வெள்ளத்துக்கும் அதன் அழிவுகளுக்கும் நாம் காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

நகர அபிவிருத்திகளின்போது, சுற்றாடல் பாதுகாப்பு குறித்து கணிசமான கவனம் செலுத்தப்படாமை, அழிவுகளுக்கு மிகப்பெரிய காரணம் என்கின்றனர் சுற்றுச்சூழல் நிபுணர்கள்.

நகரங்களில் மாத்திரமல்லாது, தூரப் பகுதிகளிலும், சிறு அல்லது பெரிய ஊர்களிலும் நீர் வடிந்து ஓடும் வழிகள் நகர அபிவிருத்தி என்ற பெயரில் தடுக்கப்படுகின்றன. அதுவே ஓடிவரும் வெள்ளம் வடிந்து போகாமல் தேங்கவும், சொத்துக்களுக்கும் உயிர்களுக்கும் அது பாதிப்பு ஏற்படுத்தவும் பெருமளவில் காரணமாகின்றது.

**போர் அழிவைவிட இது பெரிய அழிவுக்குக் காரணமாகலாம்**

அதுபோலவே மலையகத்தில் காடுகள் அழிக்கப்படுவதால், மலைகள் பாதுகாப்பற்றவையாக மாறுகின்றன. சில சூழல் பாதுகாப்பு பற்றி திட்டமிடப்படாத வீதியமைப்புத் திட்டங்கள் உட்பட பல விடயங்கள் இதற்கு காரணமாக கூறப்படுகின்றது. மண்சரிகள் வருடா வருடம் செய்தியாகின்றன.

ஆனால், அழிவுகளைப் பார்த்து நாம் திருந்தியதாகத் தெரியவில்லை. அதே பாணியில், அதேவேகத்தில் சூழல் பாதுகாப்புக்கு பொருத்தமற்ற எமது அபிவிருத்தி(?) நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

இதில் அரசாங்கத்தின் பங்கு ஓரளவு என்றால், பொதுமக்களின் விழிப்புணர்வற்ற, பொறுப்புணர்வற்ற நடவடிக்கைகள் அடுத்த பெரும் பங்கை வகிக்கின்றன. அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும் பெருமளவில் விழிப்புணர்வுக்கு முயற்சிக்கின்றன. ஆனால், எவருக்கும் எதுவும் காதில் ஏறியதாக தெரியவில்லை.

அதனால், செய்தியாளர்கள் ஆகிய நாமும் ஒட்டுப் பெருக்கிகளாக வருடாவருடம் கத்திக்கொண்டிருக்கவே வேண்டியிருக்கிறது. ஏதாவது ஒன்று சரியாக நடக்கும் வரை, பெய்யும் மழை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாகவாறு சரியாக தேக்கி வைக்கப்படும் வரை, அல்லது உரிய வகையில் வடிந்தோட வழி கிடைக்கும் வரை நாமும் கத்தித்தான் ஆகவேண்டும்.

நமக்குள் வேண்டுமானால், வெவ்வேறு பொய்யான காரணங்களை கூறி இனப்பிரச்சினை போல விடயத்தை இழுத்தடித்து, அரசியல் லாபம் தேட முனையலாம், ஆனால் இது இயற்கை. பொறுப்பற்ற நடவடிக்கை பெருத்த அழிவையே இறுதியில் தரும். செயற்கையாக நாம் போரில் அழித்ததை விட இந்த அழிவு அதிகமாகப் போவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இது ஒரு சிவப்பு எச்சரிக்கை!


## முதலாம் ஆண்டு நினைவு



பிறப்பு
23.10.1932

இறப்பு
07.06.2017

**அமரர் பொன்னுத்துரை காந்தியடியான்**

(உதவி அதிபர் - மட். இந்துக்கல்லூரி, சமாதான நீதவான்)

**நினைவு தினம்**
**26.05.2018**

எமது குடும்பத்தின் தீப ஒளியாய் விளங்கி, எம்மை அன்பு பண்புடன் சான்றோன் ஆக்கி, அமரத்துவம் அடைந்த எங்கள் அன்பு தெய்வத்தின் முதலாமாண்டு நினைவு அஞ்சலி.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்

மனைவி, மகன்மார், மகள்மார், மருமக்கள்மார், பேரப்பிள்ளைகள்.

தகவல் :- குடும்பத்தினர்

அதிகார் வீதி மட்டக்களப்பு.

தொலைபேசி இல :- 0652222906



A அரங்கம் செய்திகள்
தொடர்புகளுக்கு
ஆசிரியர்- பூ.சீவகன்
227, பார் வீதி, மட்டக்களப்பு

அரங்கம் பத்திரிகை நிறுவனத்தின் விளம்பர முகவர்கள்

| மட்டக்களப்பு | கொழும்பு |
|---|---|
| ARANGAM 071 399 9091 070 300 9001 | ARANGAM arangamads@gmail.com 070 345 6800 071 399 9091 |
| EAST LINK AGENCY POST OFFICE 077 180 1400 196,TRINCO ROAD,BATTICALOA | |
| SHALOM DIGITAL STUDIO 077 632 1079 63,ST ANTONIS LANE,BATTICALOA | |
| DINA ADVERTISING 077 712 0809 183/1,NEW KALMUNAI ROAD, KALLADY,BATTICALOA | |
| ST.ANTONY 077 470 1373 MAIN STREET, VALAICHCHENAI | SIVA 077 503 8997 077 721 7341 |
| TERRY 077 618 5 209 | S.K. RAMESH 077 360 0161 65,MANNING PLACE WELLAWATTA |

UK +44 776 935 409 +44 208 422 5917
67,KEMPTON AVENUE NORTHOLT,UB5 4HG,UK






# கடுமையான விமர்சனங்களை எதிர்நோக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

கருணாகரன்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வோடு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கடுமையான விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. நினைவேந்தல் நிகழ்வில் பெற்றிருக்க வேண்டிய நன்மதிப்புக்கு - மதிப்பேற்றத்துக்கு மாறாக கடுமையான குற்றச்சாட்டுகள் – மதிப்பிறக்கம் - அதன் மீது சுமத்தப்பட்டுள்ளன. இந்த விமர்சனங்கள், குற்றச்சாட்டுகளில் மாணவர் ஒன்றியத்துக்கு எந்தளவுக்குப் பொறுப்புகளுண்டு என்று சரியாகத் தெரியவில்லை. ஆனாலும் இன்னும் அது தன் மீது முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் விமர்சனங்களுக்கும் 22.05.2018 இரவு வரையில் பதிலளிக்கவில்லை.

இதில் சில குற்றச்சாட்டுகள் மிகப் பாரதூரமானவை. அதிலொன்று முள்ளிவாய்க்கால் – மே 18 நினைவேந்தலின்போது கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் சுடரேற்றக் கூடாது என்று மாணவர் ஒன்றியத்தின் சார்பில் கூறப்பட்டதாக வெளிப்பட்டிருக்கும் தகவலாகும். இந்தத் தகவல் உண்மையானதா? அல்லது வேறு சக்திகளால் திட்டமிட்டுப் பரப்பப்பட்டதா என்று உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனாலும் இதற்கான பதிலை – மறுப்பையோ மன்னிப்பையோ - மாணவர் ஒன்றியம் விடுக்கவில்லை. தொடர்ந்து கனத்த மௌனம் காக்கப்படுகிறது. பாராதூரமான விடயமொன்றில் பொறுப்பான தரப்பொன்று இப்படிக் கனத்த மௌனமாக இருக்க முடியாது. பதில் சொல்லியே ஆக வேண்டும். அந்தப் பதிலே குழப்பங்களைத் தடுக்கும்.

இன்னொன்று, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாடுகளைச் செய்வதற்காக முள்ளிவாய்க்காலில் தங்கியிருந்த மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள், அங்கே நடந்து கொண்ட முறைமை தொடர்பானது. மாணவர் பிரதிநிதிகள் தங்கியிருந்த விடுதியில் மதுப் போத்தல்கள் உட்பட மதிப்பிறக்கத்துக்குரிய பொருட்கள் நினைவேந்தல் முடிந்த பிறகு அந்தப் பகுதி மக்களால் காணப்பட்டுள்ளன. இதுவும் மாணவர்களின் மீதான கேள்வியை எழுப்பியிருக்கிறது. இதற்கும் மாணவர்களிடத்தில் பதில் இல்லை.

மதிப்பும் மாண்பும் மிக்க நிகழ்வொன்றை ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்ற மாணவர்கள், அந்த நிகழ்வு நடக்கும் இடத்தில் தரக்குறைவாக நடந்து கொள்ளலாமா? என்ற கேள்வி இந்த இடத்தில் கூராகியிருக்கிறது.

இதைவிட மாணவர் ஒன்றியத்தின் நடவடிக்கைகள் பற்றி பொதுவாகவே நல்ல அபிப்பிராயம் இப்பொழுது பொது வெளியில் இல்லை. “மாணவர் ஒன்றியமானது, வரவர பல்வேறு தரப்புகளின் நிகழ்ச்சி நிரலுக்குட்பட்டுச் செயற்பட முனைகிறது. இதனால் அதற்குள் பல அணிகள் உருவாகியுள்ளன. இதன் விளைவாகக் கூட்டுத்தீர்மானத்துக்கும் கூட்டுச்செயற்பாட்டுக்குமான சந்தர்ப்பங்கள் குறைந்துவிட்டன. ஆகவே ஒரு தரப்பு சீராகச் செயற்படும்போது இன்னொரு தரப்பு அதற்கு மாறாகச் செயற்படும். இந்த நிலையே வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை நீடிக்குமானால் மேலும் மேலும் தவறுகள் கூடும். நல்ல செயற்பாடுகள் குறைவடையும்” என்கிறார் பெயர் குறிப்பிடத் தயங்கும் ஒரு மூத்த மாணவர்.

பெயரைக் குறிப்பிடுவதில் அவருக்குள்ள தயக்கம், பின்னர், பல்கலைக்கழகச் சூழலில் தான் தனிமைப்படுத்தப்படுவேன் என்ற அச்சமாகும். இது ஒரு வகையில் விமர்சனமின்மையும் ஜனநாயக மறுப்பும் உச்சமடைந்து கொண்டிருப்பதன் அடையாளமாகும்..
இந்த நிலையில் இந்த மாணவர் கூறிய அபிப்பிராயத்தை நாம்



பொருட்படுத்தியே ஆக வேண்டும். அண்மைய ஆண்டுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிலைப்பாடுகளும் செயற்பாடுகளும் இதையே நிருபிக்கின்றன. குறிப்பாகத் தேர்தல் காலங்களில் அது வெளியிட முனையும் அரசியல் நிலைப்பாடு பற்றிய அறிக்கைகள். இந்த அறிக்கைகளுக்கு ஒரு காலத்தில் மக்கள் மத்தியில் வரவேற்பிருந்தது. இதனால் எப்படியாவது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைத் தங்கள் கைகளுக்குள் போட்டுக் கொள்ள வேண்டும் என்ற முனைப்புப் பல அரசியற் கட்சிகளிடத்திலும் இருந்தது.

இருந்தாலும் மாணவர் ஒன்றியமானது எல்லா நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தன்னை தமிழ்த்தேசியவாதத்தின் பக்கம் நிற்பதாகவே காட்டிக் கொண்டது. “இது பக்கச் சார்பானது, ஜனநாயகத்துக்கு எதிரானது. ஒரு பொது நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் இப்படி ஒரு பக்க அரசியல் சாய்வு கொண்டு செயற்பட முடியாது” என்ற விமர்சனங்கள் ஏனைய தரப்பினரால் முன்வைக்கப்பட்டபோதும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமோ சமூகத்தின் பிற சக்திகளோ, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் புத்திஜீவிகளோ இதைப் பொருட்படுத்தவில்லை.

“போரினால் தோற்கடிக்கப்பட்ட நிலையில் அந்த இனத்தின் அடையாளமாகவும் அதனுடைய உணர்விற்குக் கவசமாகவும் மாணவர் ஒன்றியம் செயற்பட வேண்டும். தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தும் பொறுப்பு மாணவர் அமைப்புக்கும் உள்ளது” என இதற்குப் பதிலளிக்கப்பட்டது.

இந்த அடிப்படையிலேயே மாணவர்கள் தமிழ்த்தேசிய உணர்வோடு மாவீரர் நாள், திலீபன் நினைவு நாள், கரும்புலிகள் நாள், முள்ளிவாய்க்கால் நினைவு நாள் போன்றவற்றை அனுஷ்டிக்க முற்பட்டனர். இதற்குக் கடுமையான நெருக்கடிகளும் அச்சுறுத்தல்களும் வந்தபோதும் அவற்றை எல்லாம் எதிர்கொண்டு அவர்கள் இதிலே ஈடுபட்டனர். ஏறக்குறைய இதை அவர்கள் ஒரு வீர சாகஸ நடவடிக்கையாகவே செய்தனர். அப்படியே கருதினார்கள். அதாவது படையினரின் பலத்த கண்காணிப்பு, கெடுபிடிகள், அரசின் தடைகளுக்கு மத்தியில் மேற்கொள்ளப்படும் “இரகசிய நடவடிக்கை” என்ற அளவில் இந்தச் செயற்பாடுகளை வீர தீர சாகஸ நடவடிக்கை என்றே அவர்கள் உணர்ந்தனர்.

இது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தை வீரமிக்கதொரு தரப்பாக உணர வைத்தது. ஆனால், நடைமுறைச் சூழலும் யதார்த்தமும் வேறாக உள்ளது என்பதை மாணவர்களும் புரிந்து கொள்ளவில்லை. அவர்களை வழி நடத்துவோரும் உணரவில்லை. அல்லது அதைப்பற்றி மாணவர்களோடு அவர்கள் பேச முற்படவில்லை.

உண்மையில் ஒரு பொது அமைப்பின் பலம் என்பது அது தன்னுள்ளே கொண்டிருக்கும் ஜனநாயக அடிப்படைகளால்தான் உருவாகிறது. மாணவர் அமைப்பு அத்தகைய ஜனநாயக அடிப்படைகளையும் உள்ளடக்கத்தையும் கொண்டிருந்திருக்குமானால் அது உட்சுருங்கி, இன்றைய நெருக்கடி நிலையை எட்டியிருக்காது. ஜனநாயக அடிப்படை வலுக்கும்போது பன்மைத்துவத்துவத்திற்கான இடம் உருவாகி விடும். அங்கே



விமர்சனம், மறுபார்வை, பல்வேறு தரப்புகளினதும் பல சிந்தனைகளினதும் ஊடாட்டத்துக்கான ஏது நிலை ஏற்படும். இது அந்த அமைப்பைச் செழுமையடையச் செய்து வலுப்படுத்தும்.

இத்தகைய நிலை இதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிகச் செழிப்பாக இருந்தது. 1970, 1980 களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆற்றிய பணிகள் இதற்குப் பெரும் சான்று. 1977 இல் கிழக்கில் ஏற்பட்ட சூறாவளிப் பாதிப்பை நிவரத்தி செய்ததில் யாழ் – பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் பணி வரலாற்றுச் சிறப்பிற்குரியது. அதைப்போல 1977 இலும் 1983 இலும் தென்னிலங்கையிலிருந்து இன வன்முறையினால் பாதிக்கப்பட்டு வந்தோரைப் பொறுப்பேற்றுப் பராமரித்தது பல்கலைக்கழக மாணவர்களே!

இவை இடர்காலப் பணிகள் என்றால் யாழ்ப்பாணச் சூழலில் நடந்த சாதியப் போராட்டத்திலும் மாணவர்கள் தீர்க்கமான நிலைப்பாட்டை எடுத்து அதற்கான பங்களிப்புகளைச் செய்திருந்தார்கள். வறிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு 100 க்கு மேற்பட்ட கிணறுகளை அமைத்துக் கொடுத்தனர். மிருசுவில் பகுதியில் சாதி ரீதியாக பாரபட்சப்படுத்தப்பட்டு பனை மரத்தோடு தறித்து வீழ்த்தப்பட்டவர்களுக்கு ஆதரவாகவும் தறித்தவர்களுக்கு எதிராகவும் மாணவர்கள் திரண்டெழுந்து போராட்டம் நடத்தினார்கள். அப்போது இந்த நிகழ்வுக்காக எழுதப்பட்ட கவிஞர் சேரனின் கவிதை இன்றும் கவனத்திற்குரியது.

## மேல்மாகாணத்தில் தமிழ் குழந்தைகளின் கல்வி புறக்கணிக்கப்படுகின்றதா?

# ஏன் இந்த ஓரவஞ்சனை?



அமிர்தசன்

கொழும்பில் வாழும் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழர்கள் இந்த அரசாங்க பள்ளிக்கூட விடயத்தில் அக்கறை செலுத்துவதாக இல்லை. ஏனெனில் அவர்களின் பிள்ளைகள் தனியார் பாடசாலைகளில் கற்கின்றனர்.

கொழும்பை மையப்படுத்திய மேல் மாகாண சபையின் கீழ் 52 தமிழ் பாடசாலைகள் உள்ளன. கல்விச்சேவை தொடர்பான உதவிப் பணிப்பாளர்களில் ஒருவர் கூட தமிழர் இல்லை. கடந்த 20 ஆண்டுகளாக பதவி வகித்த ஒருவர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு

**கொழும்பில் உள்ள வசதி படைத்த தமிழர்களின் குழந்தைகள் தனியார் பள்ளிகளில் படிப்பதால், அவர்கள் இது குறித்து அலட்டிக் கொள்வதில்லை**

முன்னர் ஓய்வு பெற்றுள்ளார். ஆனால் இதுவரையும் எவரும் அந்த இடத்திற்கு நியமிக்கப்படவில்லை.

இது தொடர்பாக மேல் மாகாண சபையில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்கள் கோரிக்கை



விடுத்தபோதும், முதலமைச்சர் செவிசாய்க்கவில்லை. மத்திய அரசின் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவன்சவிடம் பெற்றோர் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனாலும் இதுவரை நியமனம் இல்லை. மேல் மாகாண கல்வி விவகாரங்களில் அரசாங்கம் சிங்கள மாணவர்கள் என்ற உணர்வுடன் செயற்படுவதாக மாகாண சபை உறுப்பினர் ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேல் மாகாணத்தில் வாழும் சுமார் மூன்று இலட்சம் வரையான தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார உரிமைகள் விடயத்திலும் அடிப்படை உரிமைகளிலும் வெளிப்படையான புறக்கணிப்பு இருந்தும், கொழும்பை மையப்படுத்தி அரசியலில் ஈடுபடும் தமிழ் அரசியல் கட்சிகள் அதனை பெரியளவில் வெளிப்படுத்தவில்லை.

மனோ கணேசன் எதிர்க்கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது எழுப்பிய குரல் ஆளும்தரப்பில் அமைச்சரான பின்னர் குறைவடைந்துள்ளதாக ஏனைய தமிழ் அரசியல்வாதிகள் குற்றம் சுமத்துகின்றனர். அதேவேளை கொழும்பில் வாழும் பெரும்பான்மையான தமிழர்கள் கூட இந்த புறக்கணிப்புகள் பற்றி பெரியளவில் அலட்டிக் கொள்ளவதும் இல்லையென குற்றச்சாட்டுக்கள் உண்டு.

மேல் மாகாணத்தில் வாழும் தமிழர்களின் அரசியல் பொருளாதார பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கு கொழும்பில் வாழும் வசதிபடைத்த தமிழர்கள் முன்வருவதில்லை என அமைச்சர் மனோ கணேசன் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது சுட்டிக்காட்டியிருந்தார். தேர்தலில் வாக்களிப்பதுடன் அவர்கள் நின்றுவிடுகின்றனர். வாக்களிப்பதிலும் கூட அசமந்தபோக்கு கொழும்பில் வாழும் வசதி படைத்த தமிழர்களிடம் இருப்பதாகவும் அவர் பல சந்தர்ப்பங்களில் ஆவேசமாக கூறியிருந்தார்.

ஆகவே மக்களின் அழுத்தங்கள், போராட்டங்கள் இல்லாமல் மேல்மாகாணத்தில் வாழும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு குறைந்த பட்ச தீர்வைக் கூட காண முடியாது. குறைந்த பட்சம் மேல் மாகாணத்தில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் கல்வியில் கூட அக்கறை செலுத்த வேண்டிய தேவை இருப்பதாக உணரப்படவில்லை. 24 உதவி கல்விப் பணிப்பாளர்களில் ஒருவர் கூட தமிழர் இல்லை என்று வடக்கு கிழக்கை சேராத தமிழர்கள்தான் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏனெனில் அவர்களின் பிள்ளைகள்

**வசதி இல்லாத, கொழும்பின் பிந்தங்கிய பகுதிகளில் வசிக்கும் தமிழ் குழந்தைகளே இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்**

வசதி குறைவடைந்த அரசாங்க பாடசாலைகளில் கற்கின்றனர். கொழும்பில் உள்ள உள்ள சில குறிப்பிட்ட தமிழ் அரச



பாடசாலைகளைத் தவிர ஏனைய தமிழ் அரச பாடசாலைகள் அனைத்திலும் குறைபாடுகளும் ஆசிரியர் பற்றாக்குறைகளும் உண்டு. அத்துடன் இந்த பாடசாலைகளின் பெற்றோர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் கூட வலுவானதாக இல்லை. ஏனெனில் அந்த பெற்றோர் வசதி குறைந்தவர்கள், அரசியல் ரிதியாகவும் செல்வாக்கு பெற்றவர்கள் அல்ல. ஆகவே பாரிய அளவிலான அழுத்தங்களை அவர்களினால் முன்வைக்க முடியாது என மேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார்.

கொழும்பில் வாழும் வடக்கு கிழக்கு குறிப்பாக வடபகுதி தமிழர்களின் வசதி படைத்த போக்குகள் அல்லது இது எமது பிரதேசம் அல்ல என்ற உணர்வுகள்தான்; இந்த பின்னடைவுக்கான பிரதான காரணியாகின்றது. அவர்களின் பிள்ளைகளும் தனியார் பாடசாலைகளில் அல்லது கொழும்பில் வசதியுள்ள அரசாங்க பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர்.

இதனால்தான் அரசாங்கமும் அக்கறை செலுத்துவதில்லை. அத்துடன் மேல்மாகண தமிழர்களின் அரசியல் பொருளாதார உரிமைகளை உறுதிப்படுத்துவது என்ற போர்வையில், கொழும்பில் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு தமிழர்களின் கைகளை ஏன் பலப்படுத்த வேண்டும் என்ற உணர்வும் சிங்கள அரசியல்வாதிகளிடம் உண்டு.

ஆனால், கிழக்கு மாகாணத்தில் ஐந்து சதவீதமாக உள்ள சிங்கள மாணவர்களுக்காக தனியான சிங்கள கல்வி அமைச்சும் அதன் கீழான சிங்கள கல்வி பணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாண சபையின் கீழ் அங்குள்ள சிங்கள மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் இல்லை. அவை அனைத்தும் அனுராதபுரம் மாவட்ட கல்வி அமைச்சின் ஊடாக கொழும்பு நிர்வாகம் நேராடியாக கையாளுவதாக தகவல். அதேபோன்று வவுனியாவில் உள்ள சிங்கள பாடசாலைகளின் நிர்வாகமும் கொழும்பு ஊடாகவே இடம்பெறுவதாக தகவல். (இவை வெளிப்படையாகத் தெரிவதில்லை)

ஆனால் இந்த விடயம் தொடர்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் ஒருபோதும் மத்திய அரசை கேள்வி கேட்கவில்லை. எவ்வாறாயினும் சிங்கள மக்களுக்கு ஒரு நீதியும் தமிழ் மக்களுக்கு வேறு நீதியும் என்பதற்கு இந்த ஒரு விடயம் மாத்திரம் உதாரணமாகும். ஆனால் கேட்கப்போவது யார்?









# எரிபொருள் விலையேற்றம்

## போவோம் நடைபயணம் ... காண்போம் புது உலகம்

ஹரேந்திரன் கிருஷ்ணசாமி




எரிபொருள் விலை ஏற்றத்துடன் சைக்கிளில் போகலாம் என்ற ஒரு கேலிச் சித்திரத்தை முகநூலில் பார்க்கக் கிடைத்தது. “இது எல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமா, நகைச்சுவைக்கு மட்டும் தான் பொருந்தும்” என்று நிறையப் பேர் நினைத்திருக்கலாம். ஆனால், அப்படித்தான் வளர்ச்சியடைந்த ஏராளமான நாடுகளில் நடக்கின்றது.

**அரசும் மக்களும் கைகோர்த்துத் தீர்வு காணவேண்டிய பிரச்சினை**

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட பின்னர் பொருட்களின் விலைகளும் மெல்ல அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. பேருந்துக் கட்டணங்களையும் உயர்த்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது. பேருந்து முதல் நாம் உண்ணும் வாழைப்பழம் வரையில் விலைகள் உயர ஆரம்பித்துவிட்டன.

டொலருக்கு எதிரான பெறுமதியும் 160 ரூபாவை அண்மித்துள்ளது. இது இலங்கையின் பொருளாதாரத்தின் மந்த நிலையைக் காட்டுகிறது. இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகளும் வெகுவாக அதிரித்துள்ளன. இப்படி இருக்கும்போதுதான், எரிபொருள் விலையும் அதிகரித்துள்ளது.

அன்றாட வாழ்க்கைச் செலவைக் குறைப்பதாகவே ஒவ்வொரு முறை தேர்தல் மேடைகளிலும் பிரதான கட்சிகள் கோசமிடுகின்றன. தற்போதைய ஆளும் கட்சியும் இதே கோசத்தை தேர்தல் மேடைகளில் இஸ்டத்திற்கு வழங்கியிருந்தது. ஆனால் எரிபொருள் விலை வெகுவாக உயர்த்தப்பட்டுவிட்டது. அநீதியான முறையில் உயர்த்தப்பட்ட எரிபொருள் விலையை உடனடியாக குறைத்துவிடு! என்ற சுவரொட்டிகளை தற்போது நாடு முழுவதும் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணி இதற்கு எதிராக சுவரொட்டி பிரசாரத்தை முன்னெடுத்து வருகிறது.

எரிபொருள் விலை குறையாது. விலையைக் குறைப்பதாக ஒப்புக்குக் கூறினாலும் உலக அரசியலில் சிக்கியுள்ள இந்த கறுப்புத் தங்கத்தின் பெறுமதி குறையாது. தேவையெனில் சில ரூபா குறைத்து விட்டு, பின்னர் கொஞ்சம் நாட்களில் பல மடங்கு மீண்டும் அதிகரிக்கப்படும். வீதிகளில் கார்கள் வழிந்து காணப்படுகின்றன. கொழும்பு நகரின் வீதிகளில் சாராசரியாக ஐந்து பேர் பயணிக்கக் கூடிய வாகனங்களில் பெரும்பாலும் ஒருவர் அல்லது இருவரே பயணிக்கின்றனர். வீதிகளில் கவனித்தால் 90 வீதமான வாகனங்களில் இந்த நிலையே காணப்படுகிறது.

எத்தனை வகையான வீண் விரயம் இதில் இருக்கிறது என்பதை நினைத்தால் வியப்பாக இருக்கிறது. வாகனம் சொகுசு வாழ்க்கை என்பதைத் தாண்டி, அத்தியாவசிய தேவையாக தற்போது மாறிவருகிறது. சலுகைக் கொடுப்பனவு முறையில் கார் வாங்கலாம் வாருங்கள் என்ற கவர்ச்சியான விளம்பரங்களைப் பார்த்து, நாமும் ஒரு காரில் பயணிக்க விரும்புகிறோம். குறுகிய வீதிகளில் மணித்தியாலக் கணக்கில் வீதிகளில் நிற்கின்றோம். உடம்பைக் குறைப்பதற்கு உடற்பயற்சி நிலையங்களில் சைக்கிள் ஓடுகிறோம்.

சீனாவைப் பார், ஜப்பானைப் பார் என்று எது எதுற்கோ ஒப்பீட்டுப் பேசும் நாம், இன்னும் சில அழகான விசயங்களை அவர்களிடம் இருந்தும் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. எரிபொருள் விசயத்தில் மட்டும் மேற்கத்தேய நாடுகளைப் பார்ப்பது நல்லது. நாம் ஜப்பானைப் பார்ப்பது இன்னும் நல்லது.

ஆனால் இங்கு அடிக்கும் 32 பாகை வெயிலுக்கு எப்படி சைக்கிள் மிதிப்பது என்று கடிந்துகொள்ளலாம். ஆனால், நாம் கடைக்குப் போவதற்கும் இப்போது கார் சாவியைத்தான் தேடுகிறோம். இதனை வாசிக்க நன்றாக இருந்தாலும், நடைமுறை என்று வரும் போது சலிப்பாகவே இருக்கிறது. நோர்வே, ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளில் சைக்கிளைக் காதலியுங்கள் என்ற கோசம் வலுக்க ஆரம்பித்துள்ளது. இது சுற்றாடலுக்கும் நல்லது உடலுக்கும் நல்லது கையிலுள்ள பணத்திற்கும் நல்லதாகவே தோன்றுகிறது.




“சைக்கிளில் காதல் கொள்வோம்” என்பது வெறும் வாசகமாக எடுத்துக்கொள்ளாது வளர்ந்த நாடுகள் அதனை நடைமுறைக்கு கொண்டுவந்துள்ளன. பிரச்சினை ஒன்று இருந்தால் அதற்கு நிச்சயம் தீர்வொன்று இருக்கும் என்ற விதிப்படி, எரிபொருள் விலையேற்றம், வாகன நெரிசல் என்பவற்றுக்கும் தீர்வுகளைத் தேட வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்.

சைக்கிள் ஓட்டும் திட்டங்களை வளர்ந்த நாடுகள் கவர்ச்சிகரமாக முன்னெடுக்கின்றன. இந்தக் கவர்ச்சித் திட்டங்களில் பொதுமக்களும் கவர்ந்திழுக்கப்படுகின்றனர். அவ்வாறான திட்டங்களே கொழும்பு மாநகரத்திற்கும் தற்போது தேவைப்படுகிறது. எரிபொருள் விலையேற்றத்தை எம்மால் தவிர்க்க



முடியாது. அதனால் ஏற்படும் வாழ்க்கைச் செலவும் தற்போது கையை மீறிப் போய்க்கொண்டிருக்கிறது.

**சைக்கிள் சவாரியை காதலிப்போம்**

ஆனால், நல்ல அரசாங்கமாக, மக்களுக்கு நல்ல திட்டங்களை செய்ய வேண்டிய தேவைகள் அதிகாரிகளுக்கும், ஆட்சியாளர்களுக்கும் இருக்கிறது. அதற்கு ஒத்துழைத்து, ஆதரவு தரும் கடமையும் பொதுமக்களுக்கு இருக்கிறது.

# "கல்முனை தமிழ்ப்பிரதேச செயலக தரமுயர்த்தலைச் செய்யாமல் கூட்டமைப்பு என்று கூறிக்கொண்டு யாரும் வரவேண்டாம்!"

## கல்முனை 12ஆம் வட்டாரக் கூட்டத்தில் சலசலப்பு

"எமது அடிப்படைக்கோரிக்கையான தமிழ்ப்பிரதேச செயலக தரமுயர்த்தலைச் செய்யாமல் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினரோ வேறு யாரோ எமது பகுதிக்குள் வரவும் வேண்டாம், கூட்டம் நடாத்தவும் வேண்டாம். உங்களது கதைகளைக் கேட்கவும் தயாரில்லை."

இவ்வாறு கல்முனை 12ஆம் வட்டார மக்களுடனான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்ட மக்கள் ஆக்ரோசமாகத் தெரிவித்துவிட்டு வெளியேறினர்.

அதனால் கூட்டம் நடாத்தமுடியாமல் இடைநடுவில் கலைந்தது. செயற்குழுவோ உபகுழுக்களோ தெரிவுசெய்யப்படவுமில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் கல்முனை 12ஆம்வட்டார மக்களுடனான சந்திப்பொன்றை நடாத்துவதற்கும் செயற்குழு மற்றும் உபகுழுக்களை அமைப்பதற்குமாக அழைத்திருந்தார்.

கூடவே சக மாநகரசபை உறுப்பினர்களான ஹென்றி மகேந்திரன், வி. சிவலிங்கம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.
தேர்தலுக்குப் பின்னரான நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தைக்கூட்டிய கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் விளக்கமாக விபரித்துக்கொண்டிருக்கையில் சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

ராஜன் பேசுகையில்: "கல்முனை மாநகரசபைக்கான சகல வளங்களும் தமிழ்ப் பிரதேசத்தில்தானுள்ளன. ஆனால் வளமுள்ள பிரதேசத்தை புறக்கணித்துவிட்டு முஸ்லிம் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது ஏனென்று மேயரிடம் கேட்டதற்கு உங்களது எம்.பிதான் அதைச்செய்யவேண்டும் என்று பதிலளித்தார். அப்படியென்றால் மேயர் அமைச்சர் எல்லாம் ஒரு இனத்திற்கு மட்டும்தானா? என்று கேட்டேன்" என்றார்.

அந்த இடத்தில் இப்படிப்பட்டவர்களுடன்தானா கூட்டுவைத்துள்ளீர்கள்? என்று கேட்டு மக்கள் குழம்ப ஆரம்பித்தனர்.

அங்கு மக்கள் ஒரே குரலில் கூறியதாவது:

"தேர்தல் பிரசாரத்திற்கு கல்முனைக்குவந்த எமது சம்பந்தர் ஜயா தேர்தல் முடிந்து 10 நாட்களுள் கல்முனை தமிழ்ப்பிரதேச செயலகத்தை தரமுயர்த்தித் தருவதாகக் கூறிவிட்டுச் சென்றார்.




இன்று 3மாதங்கள் ஆகின்றன. ஒன்றையும் காணோம்.
இலங்கையில் பிரதமருக்கு சமானமான அதிகாரத்துடனான பதவியைக் கொண்டிருக்கின்ற சம்பந்தர் ஜயா இதைக்கூடச் செய்யவில்லையென்றால் எமக்கு இந்தக்கட்சி எதற்காக? இவரது காலத்தில் இதைனைச் செய்யவில்லையென்றால் பிறகு எப்போது செய்வது?

இதுவரை சம்பந்தர் ஜயா இந்தக் கல்முனைக்குச் செய்தது என்ன? அம்பாறை மாவட்டத் தமிழருக்குச் செய்த அபிவிருத்திதான் என்ன?

எம்மைப் பொறுத்தவரையில் எம் பி யுமில்லை மாகாணசபை உறுப்பினருமில்லை. மாநகரசபை உறுப்பினர்களாகவுள்ள 7 உறுப்பினர்களை மாத்திரமே நம்பியுள்ளோம். நீங்கள் எந்த வழியிலாவது சென்று எமது அடிப்படைக் கோரிக்கையை நிறைவேற்றுங்கள்.

இதைவிடுத்து வேறெந்தக் கதையையும் அளக்கவேண்டாம். நாம் ஏமாந்துகொண்டிருக்கின்றோம். வடக்கிற்கு ஒரு நீதி கிழக்கிற்கு அதுவும் அம்பாறை மாவட்டத்திற்கு ஒரு நீதியா?

இந்தப் பாணியில் நின்றால் சாய்ந்தமருது சகோதரர்கள் போல சுயேச்சையில் நின்று செயற்படவேண்டிவரும். த.தே.கூட்டமைப்பினராகிய நீங்கள் இனநல்லுறவு என்ற போர்வையில் கிழக்கை தாரை வார்த்தீர்கள். சகலவற்றுக்கும் முஸ்லிம்காங்கிரசுக்கு ஒத்துழைக்கிறீர்கள். முஸ்லிம்களுக்காக சம்பந்தர் ஜயா 100வீதம் ஒத்துழைக்கிறார்.

ஆனால் கேவலம் எமக்கான தமிழ்பிரதேச செயலக விடயத்தில் முட்டுக்கட்டையாக உள்ளனர்.

இதனைச் செய்வதால் அவர்களுக்கு என்ன குறை? என்ன நட்டம்? நாம் ஒன்றும் புதிதாகக்கேட்கவில்லையே. இருக்கின்ற எமக்கான செயலகத்தை அதிகாரபூர்வமாக மாற்றவே கோருகின்றோம்.

இதனால் முஸ்லிம்களுக்கு என்ன பாதிப்புவரப்போகின்றது?அப்படிப்பட்டவர்களுடன் கூட்டுச்சேர்வது எதற்காக? நாம் இனியும் ஏமாறத் தயாரில்லை." என்றனர். அதன் பிறகு கூட்டம் எவ்வித முடிவும் எடுக்காமல் கலைந்து சென்றது.



## இலங்கைக்கு உதவியது குறித்த ஆவணங்களை பிரித்தானியா அழித்தது



தொடர்ச்சி...

விடுதலைப் புலிகள் அமைப்பு கட்டியெழுப்பப்பட்ட காலப்பகுதியில், அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு, பிரித்தானியாவின் எம்.ஐ 5 (இராணுவ புலனாய்வு பிரிவு - 5) மற்றும் எஸ்.ஏ.எஸ் (விசேட வான் சேவை) ஆகிய அமைப்புகள், நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவற்காக இலங்கைக்கு அனுப்பப்பட்டமை உள்ளிட்ட தகவல்களும் இதில் அடங்குவதாக அது கூறுகின்றது.

இந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டதால், இலங்கையில் நடைபெற்ற மிகக் கொடூரமான யுத்தத்தின் ஆரம்ப காலத்தில், பிரித்தானியா, இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றியமை தொடர்பான, எந்தவொரு பதிவுகளும் இல்லாமல் போயுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரித்தானிய பொது ஆவணங்கள் சட்டத்தின்படி, அரச திணைக்களங்கள், வரலாற்று ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளபோதிலும், இந்த ஆவணங்கள் பாதுகாக்கத் தேவையற்றவை என பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கைத் தொடர்பிலான 195 கோப்புகள் அழிக்கப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ள பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம், குறித்த கோப்புகள் 1978 க்கும் 1980 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், அதாவது இலங்கை பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்று மூன்று தசாப்தங்களின் பின்னரான காலப்பகுதிக்குரியது எனவும் குறிப்பிட்டுள்ளது.

எனினும் அந்த கோப்புகள் எங்கு? யாரால்? எப்படி அழிக்கப்பட்டன என்பது தொடர்பிலான தகவல்களை வெளியிடவில்லை எனவும் கார்டியன் குறிப்பிட்டுள்ளது.

## வந்தாறுமூலை கண்ணகி அம்பாள் திருக்குளிர்த்தி



மட்டக்களப்பு வந்தாறுமூலை ஸ்ரீ கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த திருக்குளிர்த்திப் பெருவிழா வைகாசி 24 வியாழக்கிழமை அம்பாளின் கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி வைகாசித் திங்கள் 14ம் நாள் (28.05.2018) திங்கட்கிழமை பி.ப 05.00 மணிக்கு திருக்குளிர்த்தியுடன் இனிதே நிறைவுறும்






# நடந்தாய் வாழி களனிகங்கை...... அங்கம் - 03

## களனி தொகுதி பிரதிநிதி மற்றும் ஒரு 'நாயகன்' 'நீங்கள் நல்லவரா..? கெட்டவரா...?

"ஆத்தோரம் மணல் எடுத்து அழகழகாய் வீடு கட்டி, தோட்டம் இட்டு செடிவளர்த்து, ஜோராக குடியிருப்போம்"
என்ற திரைப்படப் பாடல் உங்களுக்கு நினைவிருக்கிறதா?



அரைநூற்றாண்டுக்கு முன்னர் (1964 இல்) வெளிவந்த வாழ்க்கை வாழ்வதற்கே என்ற திரைப்படத்தில் இரண்டு குழந்தை நட்சத்திரங்கள் வாயசைக்கும் இந்தப்பாடலை கவியரசு கண்ணதாசன் இயற்றியிருந்தார்.



இக்காலத்தில் இத்தகைய பாடல்கள் வெளியாவது அபூர்வம். இயற்கையையும் அதனோடு இணைந்த வாழ்க்கையையும் அழகியலோடு சித்திரித்தன அக்காலத் திரைப்படப்பாடல்கள்.

இன்று பெண்ணின் உடலை ஆணும், ஆணின் உடலை பெண்ணும் வர்ணிக்கும் காதல் களியாட்ட பாடல்களும் குத்தாட்டப் பாடல்களும்தான் திரைப்படம் முதல் சுப்பர் சிங்கர் வரையில் நீட்சி பெற்றுள்ளன.

ஆற்று மணல்தான் வீடு கட்டுவதற்கும் இதரகட்டுமான வேலைகளுக்கும் உகந்தது. கடற்கரையோர மணல் பொன்னிறமாகத்தான் இருக்கும். ஆனால், அது உகந்தது அல்ல! சிறுவயதில் எங்கள் வீட்டருகிலிருந்த கடற்கரையிலிருந்து மணல் அள்ளிவந்து எங்கள் வீட்டு முற்றத்தில் தூவிவிடுவோம். சில நாட்களில் அந்த மணல் கறுத்துப்போகும். காரணம் அதன் உவர்ப்புத்தன்மைதான்.

அதேசமயம் வீட்டருகிலிருந்த புத்தளம் வெட்டு வாய்க்காலின் ( மகா ஓயா நதியின் கிளை) அருகிலிருந்து களிமண் எடுத்துவந்து எங்கள் வீட்டு சமையல் கூடத்தில் எங்கள் பாட்டி, அழகான அடுப்படி அமைப்பார்கள். விறாந்தாவுடன் சேர்த்து அழகான திண்ணையும் உருவாக்குவார்கள்.

களனி கங்கையிலிருந்து மணல் அள்ளி, பெரிய படகுகளில் ஏற்றி கரைக்கு எடுத்துவந்து விற்பனை செய்யும் காட்சிகளை பார்த்திருப்பீர்கள்.

இந்தத்தொழில் இலங்கையில் மாத்திரமின்றி அயல் நாடுகளிலும் நடைபெறுகிறது. தமிழக எழுத்தாளர் ஆ. மாதவன் மணலும் புனலும் என்ற நாவலில் நதிகளில் மணல் எடுக்கும் தொழிலாளர்களின் வாழ்வை சித்திரித்துள்ளார்.

சுரங்கத்தொழிலாளர்களின் வாழ்வில் வரும் சோதனைகள் வேதனைகள் ஆற்று மணல் அள்ளும் தொழிலாளர்களுக்கும் இருக்கின்றன. களனி கங்கையில் மூங்கில்களை பிணைத்துக்கட்டி எடுத்துச்செல்வதையும் அவதானித்திருப்பீர்கள்.

மூங்கில்களும் கட்டுமானப்பணிகளுக்கும் குடிசை வீடுகளுக்கும் உதவும். மூங்கில் இலை மேலே தூங்கும் பனி நீரே என்றும் ஒரு பாடல் இருக்கிறது. கங்கைக்கரைகளில் செழித்து வளரும்



தாவரம்தான் மூங்கில். புல்லாங்குழல் இசைக்கருவியின் தாயும் இந்த கங்கைகரைகளில் வளரும் மூங்கில்தான். குடிசைக்கைத்தொழிலுக்கு பெரிதும் உதவும் மூங்கிலை நம்பி வாழும் ஏழைக்குடும்பங்களை பார்த்திருப்பீர்கள். கங்கைக்கரைகளில் வளரும் மூங்கில்கள் பற்றியே விரிவாக எழுதுவதற்கு ஏராளமான தகவல்கள் இருக்கின்றன. இவ்வாறு எங்கள் களனி கங்கை எமது தேசத்திற்கும் மக்களுக்கும் பலவழிகளில் உதவி வந்தாலும், களனி என்ற பெயரில் இந்த கங்கையின் அருகிலிருக்கும் பிரதேசம் அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தத் தொகுதிக்கு ஒரு முக்கியமான இலட்சணமும் உண்டு. அங்கிருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகும் வேட்பாளர்கள் ஏதோ ஒருவகையில் விவகாரக்கிற்குரியவர்கள்கான்.



கடந்த அங்கத்தில் இந்தத் தொகுதியிலிருந்து தெரிவான விமலா விஜயவர்தனா, ஜே.ஆர். ஜெயவர்தனா, சிறில் மத்தியூ பற்றி சொல்லியிருந்தோம்.

அவர்கள் மூவரும் மேல் உலகம் சென்றுவிட்டனர். தற்போது இவ்வுலகில் இருக்கும் மோர்வின் சில்வா பற்றியும் தெரிந்துகொள்ளுங்கள்.

இவரும் களனி தொகுதியிலிருந்துதான் தெரிவானவர். சிங்களத் தலைவர்களினால், ஏற்கவும் முடியாத இழக்கவும் முடியாத ஒரு வேட்பாளர்தான் இந்த மேர்வின் சில்வா!

கமல் நடித்து மணிரத்தினம் இயக்கிய நாயகன் படத்தில், அண்மையில் சென்னையில் மறைந்த எழுத்தாளர் பாலகுமாரன் வசனம் எழுதியிருக்கிறார்.

அதில், ஒரு குழந்தை தனது தாத்தாவான வேலுநாயக்கரிடம் (கமலிடம்) " நீங்கள் நல்லவரா...? கெட்டவரா...? " என்று கேள்வி கேட்கும். ஏனென்றால் அந்த வேலுநாயக்கர் நல்லதும் செய்வார். கெட்டதும் செய்வார்.

களனி மேர்வின் சில்வா, வாயைத்திறந்தால் என்ன பேசுவார் என்ன பேசமாட்டார் என்பதும் சுற்றியிருப்பவர்களுக்குத் தெரியாது. ஒரு தடவை தேர்தல் காலத்தில் கிளிநொச்சிக்கு சென்ற மேர்வின் சில்வா, அங்கு தமிழர்களைப்பார்த்ததும், " வாங்க மச்சான் வாங்க..." என்று தமிழிலேயே பாடத்தொடங்கிவிட்டார்.

நல்லவேளை அதனைக்கேட்ட எவரும், அந்தப்பாடலின் அடுத்த வரியான "... வந்த வழியப்பார்த்துப் போங்க..." எனப்பாடவில்லை.

ஐ.நா. சபையின் பிரதிநிதி நவநீதம்பிள்ளை இலங்கை வந்தசமயத்தில், அவரை திருமணம் செய்ய விரும்புவதாக ஒரு பெரிய குண்டையும் தூக்கிப்போட்டு, இலங்கை வெளிவிவகார அமைச்சிற்கு சிக்கலை ஏற்படுத்தியவர்தான் இந்த மேர்வின் சில்வா. மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பிரதேசத்திற்கு இவர் அமைச்சராகச் சென்றபோது, ஒரு அதிகாரி அவ்விடத்திற்கு உரிய நேரத்திற்கு வராமல் தாமதித்தமைக்காக ஒரு மரத்தில் கட்டி வைத்து அவமானப்படுத்தியுமிருக்கிறார்.

இவ்வாறு பல விவகாரமான பக்கங்கள் இவருக்கிருந்தாலும் இயல்பில் சில முன்னுதாரண குணங்களுக்கும் சொந்தக்காரர்தான் இந்த களனி தொகுதி பிரதிநிதி.

முன்னேஸ்வரம் பத்திரகாளியம்மன் ஆலயத்தில் வருடாந்தம் நடந்துவந்த வேள்வித்திருவிழாவில் ஆடுகள் பலியிடப்பட்டுவந்ததை நாம் அனைவரும் அறிவோம். அதற்கு எதிராக குரல் கொடுத்து ஆலயமுன்றலில் ஆர்ப்பாட்டம் செய்தவரும் மேர்வின் சில்வாதான்.

யாழ்ப்பாணத்தில் நீதிபதியாக பணியாற்றும் திரு. இளஞ்செழியன், ஆலயங்களில் இனிமேல் மிருக பலி நடக்க அனுமதிக்கலாகாது என்று தீர்ப்பளித்தபோது, அதனை வரவேற்று, நீதிபதி இளஞ்செழியனுக்கு புகழாரம் சூட்டியவரும் மேர்வின் சில்வாதான்.

ஒரு அரச பொது நிகழ்ச்சிக்கு சென்று திரும்பும்போது இவரது வாகனம் வருவதற்கு தாமதமானதும், உடனடியாக ஒரு பஸ்ஸில் ஏறி பயணத்தை தொடர்ந்தவரும் இவர்தான்.

மக்களுடன் எளிமையாக பழகும் இவர், சில சமயங்களில் எல்லைமீறியும் தன்னை தாழ்த்திக்கொள்வதுண்டு. ஒரு சமயம் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ஷவின் காலடியிலும் அமர்ந்து பேசியிருக்கிறார்.

அவருடன் முரண்பட்ட பின்னர், அவரது பதவிக்காலத்தில் இடம்பெற்ற வெள்ளை வான் கடத்தல் தொடர்பாக சாட்சியமளிக்க கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்திலும் ஆஜரானார் இந்த முன்னாள் அமைச்சர்.

**ரஸஞானி**

ஓராண்டுக்கு முன்னர் தாம் ஒரு புதிய கட்சியை தொடங்கவிருப்பதாகவும், அநீதிக்கு ஆளாகியிருக்கும் தன்னைப்போன்ற எவரும் தனது புதிய கட்சியில் இணையலாம் எனவும், தனது கட்சியின் ஊடாக நாடாளுமன்றம் செல்லும் எவரும் தீர்வையற்ற வாகனங்களை பெறமுடியாது என்றும், அவர்களை வி.ஐ.பி (Very Important Person) என அழைக்க அனுமதிக்கமாட்டேன் என்றும் அவர்கள் மந்திரிகள் அல்ல மக்கள் சேவகர் என்ற பெயரே அவர்களுக்கு சூட்டப்படும் எனவும் தெரிவித்தவர்தான் இந்த மேர்வின் சில்வா.

"அநுராதபுரத்திலிருக்கும் வரலாற்றுச்சிறப்புமிக்க விஜிதபுர கோட்டையை எவரும் அழிக்க முனைந்தால், அதற்கு எதிராக சாகும்வரையில் உண்ணாவிரதப்போராட்டம் நடத்துவேன்" எனவும் சூழுரைத்துள்ளார்.

"சிங்கள பௌத்த மதத்தை பாதுகாப்போம்" என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாகக் கூறினால், அந்தக் கட்சியில் எந்தவித பதவியையும் எதிர்பாராமல் இணைந்துகொள்ளவும் தயார் என்றும் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடிக்கடி அதிரடியாக கருத்து தெரிவிக்கும் இவர் முன்னைய மகிந்தரின் ஆட்சியில் மக்கள் தொடர்பாளர் அமைச்சராகவும் இருந்தவர். இவரது பேச்சுக்களும் செயற்பாடுகளும் எமக்கு சில சந்தர்ப்பங்களில் இந்திய அரசியல்வாதி சுப்பிரமணிய சுவாமியை நினைவுபடுத்தும்.

இனிச்சொல்லுங்கள், "இவர் நல்லவரா..? கெட்டவரா..?"

(தொடரும்)

# ஒரு முழுக்கிராமத்து மக்களின் பற்களில் காவிபடிந்த வேதனை
## நீரினால் ஏற்பட்ட விபரிதமோ? பரிசோதிக்க முன்வருவார்களோ??

“குளத்தில், ஆற்றில் குளித்த காலமும், கிணற்றில் தண்ணீர் அள்ளி குளித்த, குடித்த காலமும் நீங்கி குழாயில் குளிக்கும், குடிக்கும் காலமாகிவிட்டது. தண்ணீர் காசுக்கு வாங்கவேண்டிய காலமொன்று உருவாகும் என்று கூறியபோது சிரித்தார்கள். குடிநீருக்கான போராட்டமொன்று ஏற்படுமென்று கூறியபோதும் நகைத்தார்கள். இன்று அவையெல்லாம் கண்முன்னே நடந்தேறுகின்றது. ஆற்று மண் என்ற போர்வையில் ஆற்றோரங்களில் உள்ள மண்களை களவாடுகின்றனர். நாலுபேர் நல்லா இருப்பதற்காக ஊரையே அழிக்கும் செயல்கள்தான் நடைபெறுகின்றன. வில்லங்கமான உலகில் எதைப் பேசினாலும் வில்லங்கம்தான், ஆனாலும் நாட்டில் நடைபெறும் அநியாயங்களையும் பார்த்துக்கொண்டும் இருக்கமுடியவில்லை. அப்படி இந்த உலகில் இருப்பதென்றால் குருடனாகவும், செவிடனாகவும், ஊமையனாகவும் இருந்தால்தான் அநியாங்களை காணாமல் இருந்துவிடலாம். நமக்கு மனவிரக்தியும் ஏற்படாது.” என பெரியகாலபோட்டமடு சந்திக்கு அண்மையில் உள்ள கிணறொன்றில் குடிப்பதற்காக நீர் அள்ளிக்கொண்டிருந்த தங்கம்மா பக்கத்தில் முட்டியுடன் தண்ணீர் அள்ளுவதற்காக நின்றுகொண்டிருந்த சந்தனப்பிள்ளையுடன் பேசிக்கொண்டிருந்தார்.

ஏன் இவர்கள் பேசியதை இங்கு சொல்கின்றேன் என்று சிலர் சிந்திக்கலாம். இவர்களது பேச்சு இத்தோடு நிறைவுபெறவில்லை. இன்னும் பல முக்கிய விடயங்களை கிணற்றடியில் நின்று கிணற்றைப் பார்த்து பேசிக்கொண்டனர். அவ்வாறு என்ன விடயத்தைத்தான் பேசினார்கள்?, தண்ணீர் அள்ளுவதற்காக வந்தவர்கள், தண்ணீரைப்பற்றிதான் பேசினார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரிவுள்ளது. என்பது பலருக்கு தெரியும். ஆனால் அப்பிரதேசத்தில் உள்ள பல ஊர்களை பலருக்கு தெரியாது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியுமா? என்பதும் சந்தேகம்தான். அவ்வாறு பலருக்கு தெரியாத இடங்களில் ஒன்றுதான் பெரியகாலபோட்டமடு கிராம பிரதான வீதிக்கும், கொல்லநுலை பன்சேனை பிரதான வீதிக்கும், சாமாந்தியாற்றிற்கும், பெரியகாலபோட்டமடு சில்லிக்கொடியாறு பிரதான வீதிக்கும் இடையில் உள்ள உப்புக்குளம் என்ற கிராமம். இக்கிராமத்தில் அண்ணளவாக 50 குடும்பங்கள் உள்ளன. இங்குள்ள மக்கள் அன்றாடம் கூலிவேலை செய்து வாழ்க்கையினை நடத்துகின்றார்கள். இங்கு குடிநீர் பிரச்சினையும் பாரிய பிரச்சினையேயாகும். இக்கிராமத்தின் குடிநீர் பிரச்சினை தொடர்பில்தான் தங்கம்மாவும், சந்தனப்பிள்ளையும் கிணற்றடியில் நின்று பேசிக்கொண்டிருந்தனர். கிட்டித்த மண்ணும், மேடும்,

படுவான் பாலகன்

மலைக்கற்களும் உள்ள இப்பிரதேசத்தில் குடிநீருக்காக கிணறு அமைப்பதென்பதும், குறைந்த செலவுடன் செய்து முடிக்கலாம் என்பதும் கடினமானதே. வீடுதோறும் கிணறு அமைப்பதென்பதும்



சவாலானதே. இதனால்தான் குடிநீர் எந்நேரமும் கிடைக்ககூடிய, கிணறு அமைப்பதற்கேற்ற இடங்களை தேடி பொருத்தமான இடங்களில் குறிப்பாக பள்ளங்களில் கிணற்றினை அமைப்பதனையே இப்பிரதேசத்தில் காணமுடிகின்றது. அந்நிலையில்தான் பள்ளங்களையும், நீர் அதிகம் கிடைக்ககூடிய இடங்களையும் தெரிவு செய்தே உப்புக்குளப்பகுதியில் கிணறு அமைக்கப்பட்டுள்ளதாக தங்கம்மா கூறுகின்றார். ஏழுக்கும் குறைவான கிணறுகள் அமைந்துள்ள இப்பகுதியில் மூன்றுக்கும் குறைவான கிணறுகளில் கிடைக்கும் நீரையே இங்குள்ள மக்கள் அதிகம் பயன்படுத்துகின்றனர். சிலருக்கு வீட்டுக்கு அண்மையில், பலருக்கு வீட்டில் இருந்து தூரமான பகுதியிலேயே கிணறு அமைந்துள்ளது. “இதனால் காலைவேளையில் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் காலையில் 5.30மணிக்கு முதல் எழுந்து வயல், வரம்புகளின் ஊடாக கிணற்றினை அடைந்து தாம் ஒவ்வொருவரும் கொண்டு செல்லும் வாளிகளின்



ஊடாக நீரினை அள்ளி பலர் சேர்ந்து குளிப்பது சாதாரணமாகிவிட்டது” என சந்ததனப்பிள்ளையும் சாதாரணமாக சொல்லிக்கொண்டிருந்தார். குடிநீரின் தேவை பெரிதாக தற்போதைய மாதச்சூழலில் ஏற்படாதுவிட்டாலும், ஆடி மாதத்தின் பின்னர் தண்ணீருக்கான தேவையிருக்கின்றது. கிணறுகளின் நீர்மட்டம் குறைவடைந்து செல்வதினாலே இந்நிலையேற்படுகின்றது. குளங்களோ, ஆறுகளோ தோண்டப்படுகின்ற போது, நீரினது நீர்மட்டமும் குறைவடைந்து செல்கின்றதாக கூறப்படுகின்ற சூழலில் ஆற்றுமணலின் அகழ்வும் குடிநீர் தேவை தற்காலத்தில் அதிகரிப்பதற்கான காரணமேயாகும்.

படுவான்கரையிலே உன்னிச்சைக்குளம் அமைந்திருந்தாலும், எழுவான்கரையில் உள்ள மக்களே உன்னிச்சைக்குளத்து நீரினை குடிநீராகப்பயன்படுத்துகின்றனர். இவ்வாறான சூழலில் கிணற்றை அமைத்து குடிநீரை இங்குள்ள மக்கள் பெற்று வாழ்க்கை நடத்தினாலும், இங்குள்ள கிணற்றினூடான குடிநீரின் தாக்கம் உப்புக்குள கிராமத்து மக்களின் உடல்களில் வெளிப்பட்டு நிற்கின்றமை வேதனையே. பிறந்த பின் பிள்ளைகளுக்கு வளரும் பற்கள் வெள்ளைநிறமாக காட்சியளிக்க நாளடைவில் காவிபோன்ற நிறத்தில் பற்கள் மாற்றமடைகின்ற வேதனையான சம்பவமும் நடந்தேறுகின்றது. இதைத்தான் சந்தனப்பிள்ளையும் “பளபளண்ட பற்கள் காவிநிறத்தில் காட்சியளிக்கின்றதே“. இங்குள்ள பிள்ளைகளுக்கு என்ன? என்ன? நோய்கள் ஏற்படுமோ? ஏற்பட்டிருக்கின்றதோ? தெரியவில்லை. தண்ணீர் தேவையான போது, ஆற்றுக்கருகே, சிறுமடுவினை தோண்டி நீரினை அள்ளிக்குடித்த, தற்போதும் குடிக்கின்ற மக்கள் உள்ளபகுதிகளில், உவரின்றியும், நிறமின்றியும் இருந்துவிட்டால் குடிநீருக்கு ஏற்ற நீர் என்ற எண்ணத்தில் நீரைக்குடிக்கும் மக்கள், நீரின் தன்மையை அறிய முயலமாட்டார்கள். அதேபோன்றுதான் பற்களில் காவிபடிகின்றமையும் அங்குள்ள மக்களுக்கு சாதாரணமாகிவிட்டது. ஆனால் புதிதாக பார்ப்பவதற்களுக்கே அது கவலையளிக்கும் விடயமாகின்றது. அன்றாடம் வியர்வை சிந்தி உழைக்கின்றபோது அவன் செய்கின்ற காரியங்கள் அனைத்துமே சாதனைகள்தான், ஆனால் அவனுக்கு அவ்விடயம் சாதாரணமானதே. அதேபோலதான் பற்களில் காவியேற்படுவதும் இங்குள்ள மக்களுக்கு சாதாரணமானவிடயமென்பதினால் இதுதொடர்பில் அதிகம் சிந்திப்பதில்லை. அவர்கள் சிந்திக்கவில்லையென்பதற்காக பக்கத்து கிராமத்தில் உள்ள சந்தனப்பிள்ளையும், தங்கம்மாவும் சிந்திக்காமால், கவலையுறாமல்விடவில்லை. இவர்களில் தொடர்பில் அக்கறை கொண்டமையினால்தான், அவர்களைப்பற்றி கிணற்றடியில் பேசிக்கொண்டிருந்தனர். பேசிக்கொண்டிருக்கின்ற போது, இருவரின் முட்டிகளிலும் நீர் நிரம்பியதும் இடுப்பில் முட்டிகளை வைத்துக்கொண்டு கிணற்றடியினை விட்டகன்றனர். பற்களில் காவிபடிவதென்பது சாதாரணவிடயமல்ல, பரிசோதிக்கவேண்டிய விடயமே. மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள் செயற்பாட்டை துரிதமாக முன்னெடுப்பார்கள் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

# தேசிய ஹொக்கிப்போட்டிக்கு கிழக்குமாகாணத்தில் சாம்பியனான அம்பாறை (காரைதீவு) அணி தெரிவு!

தேசிய ஹொக்கி போட்டிக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறை (காரைதீவு) மாவட்ட அணி தெரிவாகியுள்ளது.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் (19)சனிக்கிழமை காரைதீவில் மாகாணமட்ட ஹொக்கி மற்றும் பீச் கபடிப்போட்டிகளை நடாத்தியிருந்தது. கிழக்குமாகாண விளையாட்டுத்துறைப்பணிப்பாளர் கே.மணிவண்ணன் அம்பாறை மாவட்ட விளையாட்டதிகாரி எம்.. அமீர்அலி ஆகியோரின் கண்காணிப்பில் இப்போட்டிகள் சிறப்பாக விபுலாநந்த மத்தியகல்லூரி மைதானத்திலும் காரைதீவுக்கடற்கரையிலும் நடைபெற்றன.

இதில் மாகாணமட்ட ஹொக்கிப் போட்டியில் முதற்றடவையாக அம்பாறை



காரைதீவு நிருபர் சகா

அணி வெற்றிவாகை சூடியது.

கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்ட அணிகள் களத்தில் மோதின. கடந்தவருட சாம்பியனான திருமலை அணியினர் பை முறையில் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியிருந்தனர்.

அதனால் முதல் போட்டியில் அம்பாறை மட்டக்களப்பு அணிகள் மோதியபோது 1-0 என்ற அடிப்படையில் அம்பாறை அணி வெற்றிபெற்றது.

இறுதிப்போட்டியில் அம்பாறையுடன் திருமலை மோதியது. அதில் 2-1 என்ற புள்ளி அடிப்படையில் அம்பாறை அணி வெற்றிவாகைசூடி இவ்வருடத்திற்கான மாகாண சாம்பியனானது.

அம்பாறை அணியில் உள்ள 18வீரர்களுள் 16பேர் காரைதீவு ஹொக்கிலயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த வீரர்களாவர்.

காரைதீவு ஹொக்கிலயன்ஸ் கழகத்தலைவரும் வவுனியா பொலிஸ் போக்குவரத்துப்பிரிவு உத்தியோகத்தருமான தவராசா லவன் கடந்த 5வருடங்களாக இந்த வீரர்களுக்கு பயிற்சியளித்து இந்த வெற்றியைச் சாதித்துள்ளார்.

இவ்வருட அணிக்கு கே.நதீஸ்தரன் தலைமைதாங்க த.லவன் உள்ளிட்ட 18வீரர்கள் இறுதிவரை போராடி இந்தச் சாதனையை நிலைநாட்டினர்.

கிழக்கு மாகாண சாம்பியனான அம்பாறை அணி எதிர்வரும் யூலை மாதம் 5, 6, 7, 8 ஆகிய திகதிகளில் மாத்தளையில் நடைபெறவிருக்கும் தேசியமட்ட ஹொக்கிபோட்டியில் கலந்துகொள்ளவுள்ளது.



# மலைகளைப் பேசவிடுங்கள் 1
## ஜனாதிபதி ஆணைக்குழு



மலையக மக்களின் பிரச்சினைகளை பதிவு செய்ய ‘ஜனாதிபதி ஆணைக்குழு’ ஒன்று அமைக்கப்படல் வேண்டும் என்பது எனது அண்மைக்கால கோரிக்கைகளில் ஒன்று. உண்மையில் இது அண்மைக்கால கோரிக்கை என்று கூட சொல்ல முடியாது. 2016 ஆண்டிலேயே இந்த கோரிக்கையை விடுத்திருந்தேன்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் தொடர்பில் சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என்பது ஒவ்வொரு ஆண்டும் ஜெனீவா மனித உரிமை கூட்டத் தொடரின் போது இலங்கை அரசியல் நிகழ்ச்சி நிரல்களில் சேர்ந்து விடும் ஒன்று. 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் வந்ததும், ‘இந்த முறை சர்வதேச நீதி விசாரணையும் வந்தே தீரும்’ என்ற நம்பிக்கையும் பலருக்கு இருந்தது.

அந்த எதிர்பார்ப்பைப் போலவே 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதியும் சின்னதாக ஒரு சர்வகட்சி மாநாடு போன்ற ஒன்றை நடாத்தி சர்வதேச நீதிமன்ற விசாரணை அல்லது அப்போது பேசப்பட்ட ‘ஹைபிரிட்’ நீதிமன்ற விசாரணைகள் தொடர்பில் ஒவ்வொரு கட்சியினதும் நிலைப்பாடுகளைக் கேட்டறிந்தார். வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், தென்னிலங்கை சிங்கள கட்சிகள், பெருந்தேசிய கட்சிகள் என்பவற்றோடு மலையகக் கட்சிகளும் பிரசன்னமாகி கருத்துக்களைத் தெரிவித்தன.

சிங்களக் கட்சிகள் சர்வதேச நீதிமன்ற விசாரணையை அனுமதிக்க முடியாது என்ற கருத்தையே பரவலாக தெரிவித்த நிலையில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் விசாரணை வேண்டும் என்ற தோரணையில் கருத்துக்களைப் பகிர்ந்தன. குறிப்பாக வடக்கு கிழக்கு



சார்ந்த தமிழ்க் கட்சிகள் 2009 இறுதி யுத்தம் தொடர்பில் சர்வதேச நீதிமன்ற விசாரணை வேண்டும் என்ற கருத்தை பரவலாக முன்வைத்தன. அப்போது முஸ்லிம் கட்சிகள் அத்தகைய விசாரணையானது 1990 களில் வடக்கில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட காலத்தில் இருந்தே நடாத்தப்படல் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தின.

மலையக அரசியல் கட்சியொன்றின் செயலாளர் என்ற வகையில் நானும் எனது கருத்துக்களைப்பதிவு செய்தேன். அப்போது நான் முன்வைத்த கோரிக்கைதான் இந்த ‘ஜனாதிபதி ஆணைக்குழு’.

இலங்கையில் மலையகத் தமிழ் மக்கள் என அழைக்கப்படுவோர் இன்னும் இந்தியத் தமிழர் என்றே சட்ட ரீதியாக பதிவு செய்யப்படுகின்றனர். அதாவது சனத்தொகை கணக்கெடுப்பின்போது, இலங்கையில் வாழும் சனத்தொகையை இன அடிப்படையில் மத அடிப்படையில் கணக்கெடுப்பு செய்கிறார்கள். அப்போது மலையகப் பெருந்தோட்டத் தொழில் துறையை மையப்படுத்திய தமிழ் மக்களை இந்தியத் தமிழர் (இந்தியானு தெமல) என்ற வகையறாவில் கணக்கெடுக்கிறார்கள். அவர்களைப் (அரசை) பொறுத்தவரையில் ‘இலங்கைத் தமிழர்’ என்போர் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களை மையப்படுத்தி வாழும் பூர்விகத் தமிழர்கள். இந்திய தமிழர் என்போர் இந்தியாவில் இருந்து பெருந்தோட்டக் கைத்தொழிலுக்காக அழைத்து வரப்பட்டவர்கள். மற்றப்படி இலங்கைத தமிழர்கள் தங்களை ‘ஈழத் தமிழர்கள்’ என அழைத்துக்கொள்வதோ, இந்தியத் தமிழர்கள் தங்களை ‘மலையகத் தமிழர்கள்’ என அழைத்துக்கொள்வதோ அரசியல், பண்பாட்டு நிலையிலானது. சட்ட பதிவுகளுடனானது அல்ல. மலையகத் தமிழரை ‘இந்திய வம்சாவளி தமிழர்’ என்பதும் கூட ஒரு சமூகச் சொல்லாடல் மட்டுமே.

இனி இவர்களை மலையகத் தமிழர் என்றே இந்தப் பத்தியில் விளித்துக் கொள்வோம்.

இந்த மலையகத் தமிழர்களுக்கு பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் வழங்கியிருந்த இலங்கைக் குடியுரிமையை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதும் சுதேச அரசாங்கம் பறித்தது முதலே இவர்களின் அடையாளம் மாத்திரமல்ல அரசியல் இருப்பே கேள்விக்குறியானது. அப்படியே ஒரு 15 வருடங்கள் கழிந்து 1964 ஆம் ஆண்டு ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இந்த நாடற்ற மக்களை அவர்களின் பூர்விக நாடான இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப வேண்டும் எனத் தீர்மானம் போட்டதும், ஒரு பகுதி அனுப்பப்பட்டதும் மலையகத் தமிழ் மக்களுக்கு இலங்கையில் இழைக்கப்பட்ட பெரு அநீதி.

இந்த அநீதிகளின் விளைவாக இடம்பெற்றதெல்லாம் அவர்கள் இந்த நாட்டுக்கு உரியவர்கள் அல்லாது போனார்கள். இந்த நாட்டின் நிர்வாக முறைமையில் இருந்து நீக்கம் செய்யப்பட்டார்கள். இந்த மக்களின் சரிபாதி இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டதால் இலங்கை சனத்தொகையில் இரண்டாம் நிலையில்



இருந்தவர்கள் நான்காம் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள், அதனால் இன்றைய நிலையில் இவர்களின் அரசியல் பலம் குறைக்கப்பட்டுள்ளது. இனி, இவற்றைப் பேசுவதனால், திருப்பி அனுப்பப்பட்ட மக்களை மீள அழைக்கப்போதில்லை. அவர்கள் இப்போதும் ‘தமிழ்நாட்டின் சிலோன்காரர்களாக’ வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்கிருப்போர் இலங்கையில் ‘இந்திய தமிழர்களாக’ வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இலங்கையில் மலையகத் தமிழர் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கை என்பது அவர்கள் வாழ்ந்திருக்கவேண்டிய வாழ்க்கை அல்ல. இவ்வாறு இந்த வாழ்க்கை ஏனைய மக்களிடம் இருந்து திரிபுபட்டிருப்பதற்கு, அவர்கள் விருப்பத்திற்கு மாறாக நிறைவேற்றப்பட்ட மேற்படி அரசியல் தீர்மானங்களே காரணம் என்பதுதான் உண்மை. இதற்கிடையில் இலங்கையில் அவ்வப்போது இடம்பெறும் இனவன்முறைகளில் இவர்கள் தாக்கப்படுவதும் இந்த நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்த்தில் குறிப்பாக இறுதி யுத்தத்தில் இந்த மலையக மக்கள் பாதிப்படைந்துள்ளார்கள்; என்பதனால் அது சர்வதேச நீதிமன்றமாக இருந்தால் என்ன? ஹைபிரிட் நீதிமன்றமாக இருந்தால் என்ன அங்கே பேசப்படல் வேண்டும் என்பது எனது வாதமாக அமைந்தது. அமைகிறது.

திம்பு பேச்சுவார்த்தை முதல் 2002 சமாதான பேச்சுவார்த்தை வரை இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காண சர்வதேச நாடுகளுக்கு (நோர்வே, ஜப்பான், இப்படி..பல) தூக்கிக்கொண்டுபோன வரலாறு நம்முடையது. அதில் இலங்கை அரசும், தமிழர் தரப்பும் இணைந்தே செயற்பட்டு இருக்கிறது. எனவே, இலங்கை நீதிமன்ற முறைமையும் சர்வதேச நீதி விசாரணையும் அல்லது மேற்பார்வையும் இணைந்த ‘ஹைபிரிட்’ முறைமை ஒன்றும் ஆச்சரியமான ஒன்று அல்ல. அதற்கு நாம் போகலாம் என்றே அன்று என் கருத்தைச் சொன்னேன்.

மேலதிகமாக, இந்த ஹைபிரிட் அமையுதோ இல்லையோ எங்கள் மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசியே ஆக வேண்டும். அதற்கு உள்ளூரில் ஒரு ஆணைக்குழு அமைத்தல் அவசியம் அது ஜனாதிபதி ஆணைக்குழுவாக இருப்பது சிறப்பு எனவும் வேண்டுகோளை முன்வைத்தேன். அந்த ஜனாதிபதி ஆணைக்குழு சுதந்திர இலங்கையான 1948 ல் இருந்தே ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்றேன்.

1990, 2009 கோரிக்கை வைத்த தலைவர்கள் என்னைக் கொஞ்சமாக எட்டிப்பார்த்தார்கள். ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டம் நிறைவடைந்ததும் என்னைப் பார்த்த பெரிய அரசியல் தலைவர்கள் எல்லாம் ‘தம்பி’ என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். நான் நுவரெலியா ‘எம்பி’யாக இருக்கிறேன் என்றேன். ஓ.. அப்படியா என்றார்கள் அந்த இந்நாள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள்.

எனது கோரிக்கை ஒரு வாய்மொழி மூலமானது என்கின்றதன் அடிப்படையில் உடனே அதனை எழுத்துமூல கோரிக்கையாகவும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தேன். அதற்கு அவரும் உங்கள் கோரிக்கை கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது என பதில் அனுப்பியிருந்தார். இவரது இரண்டாவது கொள்கை விளக்கவுரையில் அவரது கவனம் ஏதும் சென்றிருக்கிறதா என்ற எதிர்பார்ப்பில் அதனை வாசித்தபோது அது பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தல் என்ற ஒற்றை வரிக்குள் சுருங்கியிருந்தது. எனவே விவாதத்தில் கலந்துகொண்டு

திலகர்

ஹன்சாட் பதிவுகளுக்காக முன்னைய ‘மலையக மக்களின் பிரச்சினைகளைப் பதிவு செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு அவசியம்’ என்ற கருத்தை வலியுறுத்தினேன். அதில் ஒரு வரி இப்படி வந்து விழுந்தது.... மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பது பற்றி பின்னர் யோசிக்கலாம்.


இப்போதைக்கு அவர்களின் பிரச்சினைகளை உத்தியோகபூர்வமாக பதிவு செய்ய ஒரு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமியுங்கள் என்பதுதான் அந்த கோரிக்கை.

ஏனெனில் மலையக மக்களின் பேசப்படாத பிரச்சினைகள் பல பேச வேண்டியுள்ளது. அதனை அந்த மக்களே பேச அனுமதி வழங்கப்படல் வேண்டும். மலைகளின் மௌனத்துக்கு கீழே பல குமுறல்கள் புதைந்து கிடக்கின்றன. மலைகளைப் பேசவிடுங்கள்.


(தொடரும்)

வெள்ளி, வைகாசி 25, 2018.
இதழ் – 14

# எங்கள் தேசம் எங்கும் சிலம்பின் ஒலி இசைக்கும் மாதம் இது கண்ணகி எங்கள் மரபு







## கண்ணகி வழிபாடு



வைகாசித் திங்கள் கண்ணகிக்கு மட்டக்களப்பில் விழா எடுக்கும் மாதம். வைகாசிப் பூரணையையொட்டிய எட்டு நாட்கள் இங்கு ஊர்களெல்லாம் விழாக்கோலம் பூணும். அம்மன் கோயிலில் திருவிழா. ஊரிலே பெருவிழா. மக்களின் உள்ளங்களில் மகிழ்ச்சி உலா.

கிழக்கிலங்கையில் சிறப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்ணகிவழிபாடு மிகவும் பிரசித்திவாய்ந்ததும், பக்திமயமானதுமான வழிபாடாகக் காலம்காலமாக நிலவிவருகின்றது. கண்ணகி வழிபாடு தோன்றிய வரலாறு பற்றிச் சிலவிபரங்களைத் தருவது இங்கு பொருத்தம்.

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

### வழிபாடு தோன்றிய வரலாறு

கண்ணகி சிலப்பதிகாரத்தின் நாயகி என்பதும், கோவலனின் மனைவி என்பதும், பாண்டிய மன்னனுடைய கவலையீனமான தீர்ப்பினால் கோவலன் கொலையுண்டான் என்பதும், கணவன் அநீதியாகக் கொல்லப்பட்டதால் துடித்தெழுந்த கண்ணகி பாண்டியனிடம் நீதிகேட்டு வாதாடி, கோவலன் குற்றமற்றவன் என்பதை நிரூபித்தாள் என்பதும். மறுகணமே, தான் தவறிழைத்தமையைத் தாங்கிக்கொள்ள முடியாத பாண்டிய மன்னன் அரியணையிலிருந்து மயங்கி வீழ்ந்து இறந்தான் என்பதும், அதுகண்ட பாண்டிமாதேவியும் அக்கணமே உயிரைவிட்டாள் என்பதும், இவ்வளவிற்குப் பிறகும் கோபம் தணியாத கண்ணகி மதுரையை எரித்தாள் என்பதும் பெரும்பாலும் எல்லோரும் அறிந்த பொதுவான விடயங்கள்.

பாண்டியனைத் தொடர்ந்து பாண்டிமாதேவி இறந்ததைக் கண்ணுற்ற கண்ணகி இறந்து கிடக்கும் பாண்டிமாதேவியை நோக்கிப் பின்வருமாறு கூறினாள். "கற்புள்ள பெண்கள் பிறந்த பூம்புகார் நகரிலேதான் நானும் பிறந்தேன். பாண்டிமாதேவியே! உண்மையில் நானும் ஒரு பத்தினியானால், உன்னைப்போல இப்போதே கணவனுடன் இறந்துவிட மாட்டேன். அரசை மட்டுமல்ல இந்த மதுரையையும் அழிப்பேன். எனது வஞ்சினத்தின் தன்மையை நீ காண்பாய்!" என்று கூறி அரண்மனையை விட்டு வெளியேறினாள். வேகமாக நடந்தாள். மதுரையை மூன்றுமுறை வலம் வந்தாள். தனது இடது மார்பைத் திருகி வீசி எறிந்தாள். மதுரை நகர் எரிந்தது. " பார்ப்பார். அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி என்னும் இவரைக் கைவிட்டு தீத்திறத்தார் பக்கமே சேர்க" என்று அக்கினியை ஏவினாள். மதுரை நகரெங்கும் புகை மண்டலம் சூழ்ந்தது. எல்லோரையும் தீ நெருங்கியது.

'இந்த நகருக்குள் கிழக்கு வழியாக என் கணவருடன் வந்தேன். இப்போது மேற்கு வழியாக வெளியேறுகிறேன்' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு கண்ணகி மதுரையை விட்டு வெளியேறினாள். எங்குமே தரித்து நிற்காமல், திருச்செங்குன்றம் என்னும் மலையை அடைந்தாள். அங்கே பூத்துக் குலுங்கிநின்ற வேங்கை மரம் ஒன்றின் அடியிலே அழுதுகொண்டே அமர்ந்தாள். மதுரையை எரித்த நாளிலிருந்த சரியாகப் பதினான்காம் நாள் கண்ணகி இவ்வுலகை நீத்துக் கோவலனுடன் வானுலகம் சென்றாள்.
"தெய்வம் தொழாஅள், கொழுநன் தொழுவாளைத்
தெய்வம் தொழுந்தகைமை
திண்ணியதால் - தெய்வமாய்
மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து" ஆக வானுலகம் சென்றாள்.

திருச்செங்குன்றத்து வேங்கைமர நிழலிலே கண்ணகி அமர்ந்திருந்ததையும், அவள் வானுலகு சென்றதையும் அங்கே வாழ்ந்த குறவர்கள் என்று சொல்லப்படும் குன்றவர்கள் கண்டார்கள். கண்ணகியைக் தெய்வம் என்று போற்றினார்கள்.



மலைவளம் காண்பதற்காக அப்பகுதிக்குச் சென்றிருந்த சேர மன்னன் செங்குட்டுவனிடம் இதுபற்றி அவர்கள் எடுத்துரைத்தார்கள். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை அமைப்பதற்கு எண்ணினான். அந்த எண்ணம் அவனது மனதிலே நிலைபெற்றது.
இப்படியிருக்கையில், ஒரு திருமணவிழாவிலே வடநாட்டு ஆரிய மன்னர்கள் பலர் கூடியிருந்திருக்கிறார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது அவர்களது முன்னைய தலைமுறையினரான வடநாட்டு மன்னர்களைத் தமிழ் மன்னர்கள் போர்களிலே வென்று இமயமலையிலே தங்கள் கொடிகளை நாட்டியமை பற்றிப் பேச்சு எழுந்திருக்கிறது. அப்போது அங்கேயிருந்த கனகன், விஜயன் என்ற ஆரிய மன்னர்கள் இருவர் தமிழ் மன்னர்களைப் பழித்துக் பேசியிருக்கிறார்கள். "தமிழ் மன்னர்கள் இங்குவந்து தமது கொடிகளை நாட்டியபோது. நம்மைப்பொன்ற வீரர்கள் இங்கே இல்லைப்போலும்" என்று சொல்லி நகைத்திருக்கிறார்கள். இந்தவிடயத்தைக் கேள்வியுற்றான் சேரன் செங்குட்டுவன். அவனுக்குக் கடுங்கோபம் வந்தது. தமிழ் மன்னர்களை இழிவாகப் பேசிய அவர்களைத் தோற்கடித்து, இமயமலையிலே கண்ணகிக்குச் சிலைவடித்து, அதனை அந்தப் பகையரசர்களின் தலைகளிலேஏற்றி வருவேன்" என்று சூழுரைத்தான். தமிழ் மன்னர்களைப் பழித்தமை மட்டும் அவனது கோபத்திற்குக் காரணமல்ல. தனது தந்தையின் வீரத்தை அவமதித்துவிட்டானே என்பதுதான் அவனுக்குக் கடும் சினத்தை மூட்டியது.

ஆம்! இமயத்திலே கொடிபதித்த தமிழ் மன்னர்களிலே ஒருவர் அவனது தந்தை. இமய வரம்பன் என்று புகழப்படும் நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவனதும், இளங்கோவடிகளதும் தந்தையல்லவா? அதனால்தான் ஆரிய மன்னர்களுக்குப் பாடம் புகட்டவேண்டும் என்பதிலே அவன் அவ்வளவு தீவிரம் கொண்டான். அவ்வாறே பெரும்படையுடன் சென்று, ஆரிய மன்னர்களை வென்று, கனகன் விஜயன் இரவரையும் சிறைப்பிடித்தான். இமயத்திலேயிருந்து செதுக்கியெடுக்கப்பட்ட கல்லிலே கண்ணகிக்குச் சிலை அமைப்பித்தான். பின்னர் தென்னாடு வந்தான். கண்ணகியின் சிலையைக் கங்கையிலே நீராட்டி, சிறைப்பிடிக்கப்பட்டிருந்த கனகன். விஜயன் என்னும் மன்னர்களின் தலையிலே அதனைச் சுமக்கச்செய்து வஞ்சிமாநகரை அடைந்தான். அங்கே நல்லதொருநாளில், "பத்தினிக்கோட்டத்திலே" கண்ணகியின் சிலையை நிறுவினான். பல்வேறு நாட்டு மன்னர்களும் அந்த விழாவிலே கலந்துகொண்டார்கள். கண்ணகிக்குச் சிலை நிறுவிய விழாவிலே யார்யாரெல்லாம் வந்து கலந்துகொண்டார்கள் என்பதைச் சிலப்பதிகாரம் இப்படிச் சொல்கிறது:

அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கொட்டம் பிரிந்த
மன்னரும் குடகக் கொங்கரும் மாளுவ
வேந்தரும் கடல்சூழ் இலங்கைக்
கயவாகு வேந்தனும்

அப்போது இலங்கையின் மன்னனாக இருந்த கஜபாகு என்பவன் செங்குட்டுவனின் அழைப்பின் பேரில் கண்ணகிக்குச் சிலையமைத்த விழாவிலே கலந்துகொண்டிருக்கிறான். அவன்தான் இலங்கைக்குக் கண்ணகி வழிபாட்டினைக் கொண்டுவந்தவன். கி.பி. 178 இல், கண்ணகி விழாவிலே கலந்துகொண்ட கஜபாகு மன்னன் பொற்சிலம்பு, வெள்ளி மாம்பழம், சந்தனக்கட்டையினாலான கண்ணகி சிலை என்பவற்றைத் தன்னோடு கொண்டு வந்தான். முதன் முதலில், யாழ்ப்பாணத்தில், அங்கொணாமைக்கடவை என்ற இடத்திலே கண்ணகி வழிபாட்டை ஏற்படுத்தினான். அதன் பின்னர் கண்டியிலே பத்தினித் தெய்வத்திற்குக் கோயில் அமைத்தான். அங்கொணாமைக்கடவையைத் தொடர்ந்து வடமாகாணத்தில் பல இடங்களில் கண்ணகிக்குக் கோயில்கள் அமைந்தன. அச்செழு, அல்வாய், ஆனைக்கோட்டை, ஊரெழு, எருவில், எழுதுமட்டுவான், ஓமந்தை, கச்சாய், குடத்தனை, கோப்பாய், கோணவளை, நாவற்குழி, பளை, பன்றித்தலைச்சி, புதுக்குடியிருப்பு, மந்திகை, மட்டுவில், மண்டைதீவு, மயிலிட்டி, மாதளை, மிருசுவில், முகமாலை, வண்ணை, வற்றாப்பழை, வீமன்காமம் ஆகிய இடங்களில் கண்ணகி வழிபாடு நிலவியிருக்கிறது. ஆறுமுக நாவலரின் காலத்தில் சில ஆலயங்களில் கண்ணகி என்றபெயர் நாகபூசணி, நாச்சியம்மன், புவனேஸ்வரி, மீனாட்சி, இராஜராஜேஸ்வரி முதலிய பெயர்களாக மாற்றம்செய்யப்பட்டு வழிபாடு இயற்றப்படுவதாக ஆய்வாளர்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு

சேரநாட்டு மக்களுக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இடையே மிகுந்த தொடர்பு இருந்திருக்கிறது. அதிலும் குறிப்பாகக் கிழக்கிலங்கை மக்களுக்கும், சேரத்தமிழர்களுக்கும் இடையே நெருங்கிய உறவுகள் நிலவியிருக்கின்றன. பண்பாட்டு பரிவர்த்தனைகள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றை உறுதிப்படுத்தக்கூடியவாறாகக் கிழக்கிலங்கை மக்களின் வாழ்க்கை முறையின் சிலகூறுகள் இப்போதும் அமைந்துள்ளதை அறியலாம். வீடு கட்டும் முறைகள், வீட்டைச்சுற்றிவரப் பச்சைப்பசேலென்ற தோட்டம், கிணற்றைச் சுற்றி கமுகுமரங்கள், பேச்சு வழக்கில் உள்ள மலையாளச் சொற்கள், சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் இப்படிப்பல விடயங்களில் கிழக்கிலங்கை மக்களுக்கும் கேரளத்து மக்களுக்கும் இடையே ஒருமைப்பாடு உள்ளது. மலையாளம் மாந்திரீகத்திற்குப் பெயர் பெற்ற இடம். மட்டக்களப்பும் அப்படியே! எனவே, கஜபாகு மன்னன் மூலமாகக் கண்ணகி வழிபாடு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு, ஆரம்பத்தில் இலங்கையின் எல்லாப் பாகத்திலும் நடைபெற்றிருந்தாலும், சேரத்தமிழ் நாட்டுக்கும், கிழக்கிலங்கைக்கும் இடையே நிலவிய பண்பாட்டுத் தொடர்பு காரணமாகக் கிழக்கிலங்கையில் அந்த வழிபாடு நிலைபெற்றுப்பரவி, வழக்கத்திற்கு வந்துவிட்டது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது கண்ணகி வழிபாடு. அதே காலப்பகுதியில் இலங்கையிலும் பரவியது. திருகோணமலை மாவட்டத்தில் பறையன்குளம், பாலம்போட்டாறு, நீலாப்பழை,



மலைமுத்தல், கந்தளாய் ஆகிய இடங்களில் அமைந்திருந்த கண்ணகிகோவில்கள் பின்னர் பத்தினிக்கோவில்கள் என்ற பெயரிலே மாற்றம் பெற்றன. இதனைப்போலவே பொலனறுவை மாவட்டத்தில் உள்ள தம்பன்கடவையில் இருக்கும் கண்ணகிகோயிலும் கண்ணகியை விட்டுவிட்டுப் பத்தினிக்கோவில் என்ற பெயரிலேயே வழிபாடியற்றப்படுகின்றது.

அம்பாறையும் இணைந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் தம்பிலுவில், பட்டிமேடு, காரைதீவு. பாணமை, வீரமுனை, அக்கரைப்பற்று, கல்முனை, துறைநீலாவணை, கோட்டைக்கல்லாறு, களுவாஞ்சிக்குடி, மகிழூர், எருவில், போரதீவு, மகிழடித்தீவு, ஈச்சந்தீவு, முனைக்காடு, கன்னங்குடா, செட்டிபாளையம். புதுக்குடியிருப்பு, தாளங்குடா, ஆரையம்பதி, மட்டுநகர், பட்டிப்பளை, விடத்தல்முனை, வந்தாறுமூலை, வாழைச்சேனை முதலிய இடங்களிலே கண்ணகை அம்மன் ஆலயங்கள் உள்ளன. இந்த ஆலயங்கள் வருடத்தில் ஒருமுறை மாத்திரம் திறக்கப்பட்டு பூசைகள் நடாத்தப்படும்.

வைகாசி மாதத்தில் வரும் பூரணை நாளையொட்டி ஆலயம் திறக்கப்பட்டு எட்டு நாட்கள் முதல் பத்து நாட்கள்வரை விழா நடைபெறும். கண்ணகை அம்மன் கோயில்களில் நடைபெறும் பூசைகளையோ விழாக்களையோ திருவிழா என்ற சொல்லதில்லை. "சடங்கு" என்றுதான் சொல்வார்கள். சடங்கு நடைபெறும் காலங்கள் தவிர வருடம் முழுவதும் ஆலயம் பூட்டப்பட்டிருந்தாலும், மக்கள் ஆலயத்திற்குச் சென்று வெளிமண்டபத்தில் நின்று வழிபடுவார்கள்.

அக்காலங்களில் நேர்த்திக் கடன்செலுத்திப் பொங்கலிடுவதும் உண்டு.

ஒவ்வொரு வைகாசிப் பூரணை தினமன்றும் நடைபெறும் "குளுர்த்தி" எனப்படும் சடங்குதான் உச்சக்கட்ட விழாவாக இருக்கும். கோபங்கொண்ட கண்ணகியம்மனைக் குளிச்சிப்படுத்தவதாக அந்தச் சடங்கு அமைகின்றது. கண்ணகை அம்மன் கோயில்கள் எல்லாவற்றிலும் குளுர்த்திச் சடங்கு நடைபெறும். குளுர்த்தியின்போது குளுர்த்திப்பாடல் பாடப்படும். இனிமையான அந்தப்பாடலின் முற்பகுதி கண்ணகை அம்மனின் வரலாறு கூறும். பிற்பகுதி கோபம் தணிந்து குளிர்ந்தருளுமாறு அம்மனை வேண்டும்.

இந்த ஆலயங்களில் சடங்குகள் எனப்படும் விழாக்களை நடாத்துவதற்கான பொதுவான நடைமுறை ஒன்று எல்லா ஊர்களிலும் வழக்கத்தில் உள்ளது.

அதாவது ஊர்மக்கள் பல குடிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள். வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்தே வழிவழியாக வந்துகொண்டிருக்கும் அந்த ஒழுங்கின்படி ஒவ்வொரு குடிமக்களுக்குமென ஒதுக்கப்பட்ட சடங்குகளை அவ்வந்தக் குடிமக்கள் செய்வார்கள்.

இவ்வாறு காலங்காலமாகப் பேணப்பட்டுவரும் எத்தனையோ விடயங்கள் உள்ளன. அம்மன் கோவில் திறந்திருக்கும் காலம் அவ்வந்த ஊர்களுக்கு புதுவருடப் பிறப்பைப் போல ஒவ்வொரு வருடமும் மகிழ்ச்சியோடு எதிர்பார்த்து வரவேற்றுப் பக்தியோடு கொண்டாடப்படும் ஒரு பண்டிகைக் காலம்.

உண்மையில் அது ஒரு பண்பாட்டுக் கோலம்.

## பொற்புறா அன்னை!



கிழக்குக்கரையோரம் முழுவதும் இப்போது விழாக்கோலம் பூண்டிருக்கிறது. ஊரெல்லாம் இவ்வாண்டுக்கான கண்ணகியின் நாட்கள் கழிந்துகொண்டிருக்கின்றன.


சிவாகமவிதிக்கு உட்பட்டு, மேல்நிலையாக்கத்துக்கு ஆளான

**தமிழ் - சிங்கள இனங்களை இணைக்கும் புறாவாக கண்ணகை இலங்கை மண்ணில் சிறகடித்து எழவேண்டும்**

எல்லாக் கண்ணகி ஆலயங்களிலும் சிங்கமே அவள் வாகனமாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அரிதாக நந்தியும் வாகனமாகச் சொல்லப்படும். ஆனால், கிழக்கிலங்கை மரபில் கண்ணகியின் ஊர்தி எது தெரியுமா? புறா, பொன்னிறப் புறா, பொற்புறா!

கிழக்கிலங்கையின் மிகப்பழையவையாக இனங்காணப்படும் கண்ணகி ஆலயங்கள், பட்டிமேடு, தம்பிலுவில் மற்றும் காரைதீவுக் கோவில்கள். அவற்றில் முதல் இரண்டிலும், கண்ணகிக்கும் புறாவுக்கும் உள்ள உறவு இன்றும் விசேடமாக நினைவுகூரப்படுகிறது.

தம்பிலுவில் அம்மன் கோயிலின்



தோற்றம் தொடர்பான ஒரு கதையில் புறா இணைத்துச் சொல்லப்படுகிறது. பெண்கள் விறகு பொறுக்க வந்தபோது அவர்களை அலைக்கழித்த ஒரு வினோதமான புறா, "கண்ணகி!" என்று குனுகியதாகவும், அது மறைந்த இடத்தில், இங்குள்ள அம்மன் சிலை கண்டெடுக்கப்பட்டதாகவும், அக்கதை செல்லும்.

பட்டிமேட்டின் மீது பாடப்பட்ட ஒரு கண்ணகி இலக்கியத்தின் பெயரே □பொற்புறா வந்த காவியம்" என்பது தான். பட்டிமேட்டின் தலபுராணம் என்று சொல்லத்தக்க இக்காவியம், ஒரே காலத்தில், அல்லது ஒன்றன் பின் ஒன்றாக, தம்பிலுவில், இறக்காமம், காரைதீவு, பட்டிமேடு ஆகிய இடங்களில் கண்ணகிக்கு ஆலயங்கள் எழுந்ததைப் பாடுகின்றது. அப்படி ஆலயங்கள் எழுவதற்குக் காரணம் ஒரு புறா. பொற்புறா. பொற்புறா வடிவில் கண்ணகி பறந்து வந்ததாகவும், அப்புறா மூலமே இங்கு கண்ணகி வழிபாடு நிலைபெற்றதாகவும் இக்காவியம் பாடும். பொற்புறா வந்த காவியத்தின் காலத்தை சரியாகக் கணிக்கமுடியவில்லை. பொற்புறாவாகக் கண்ணகி வந்தது கலி பிறந்து 3300இல் (கி.பி 198) என்று இக்காவியம் சொல்வதை உறுதிப்படுத்த வேறு எந்தச் சான்றுகளும் நமக்குக் கிடைக்கவில்லை. வாய்மொழிக் கதை ஒன்றின் படி, சீதாவாக்கையிலிருந்து பொற்புறா பறந்து வந்தது என்கிறார்கள்.

கண்ணகியைப் புறாவோடு இணைக்கும் தொன்மம், பட்டிமேடு மற்றும் தம்பிலுவில் என்னும் கிழக்கின் இரு ஆதிக்கண்ணகித்தலங்களிலுமே விசேடமாக நினைவுகூரப்பட்டு வருகின்றது. கிழக்கில் ஊர்தோறும் குளிர்த்திச்சடங்கில் பாடப்படும் அம்மன் குளிர்த்திப் பாடல்களிலும் ""ஓதாய் புறாவே, கோலப்புறாவே" என்றெல்லாம் புறா பாடப்படுவது, கண்ணகி வழிபாட்டில் அப்பறவைக்கு இருக்கும் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுவது தான்.

புறாவை கண்ணகியோடு இணைத்துப் பார்க்கும் வழக்கத்துக்கு எது மூலமாக இருந்திருக்கக்கூடும்? அதை உறுதியாகக் கூற முடியவில்லை. புவியியல் ரீதியில் இங்கு நிறைந்து வாழும் புறாக்கள் இயல்பாகவே தெய்வநிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கலாம். மாட்டிலிருந்து சுண்டெலி வரை நம் தெய்வங்களோடு இணைத்துச்சொல்லப்படும் எல்லாமே புவியியல் ரீதியில் நமக்கு நெருக்கமான விலங்குகள் தானே? எங்காவது கங்காருவோ தீக்கோழியோ இந்தியத் துணைக்கண்ட வழிபாட்டு மரபுகளில் இணைத்துச் சொல்லப்பட்டுள்ளனவா?

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வாய்ச்சொல்லாக ஓரிடத்தில் வரும் புறா கவனிக்கத்தக்கது. "இமையவர் வியப்ப புள்ளுறு புன்கண் தீர்த்தோன்" என்று புறாவைக் காத்த சிபிச்சோழனின் நாட்டவள் நான் என்றே பாண்டியனிடம் தன்னை அறிமுகப்படுத்துகிறாள் கண்ணகி.



மைங்கணான் மகிழறிவன்


சிபிச்சக்கரவர்த்தி புறாவுக்காக கழுகுக்கு உடல் கொடுத்த இப்புராணக்கதை புகழ்பெற்ற ஒன்று. சிபியைச் சோதிக்க புறாவாக வந்தவன் அக்கினி தேவன் என்று இக்கதை நீளும். நெருப்புக்கும் கண்ணகிக்கும் இடையே உள்ள உறவை இணைத்து, சிபிச்சோழன் கதையில் வரும் அக்கினிப்புறாவே பின்பு கண்ணகியையும் புறாவாகவே காண நாட்டார் மனதைத் தூண்டியதா என்று சிந்திக்கலாம்.

தூதுப்பறவையாகவும் செல்லப்பிராணியாகவும் புறா நீடித்தாலும், சைவ – வைணவத் தொன்மங்களில், பொதுவாக, புறாவை இறையூர்தியாகவோ இறையம்சமாகவோ சொல்லும் வழக்கம் இல்லை அல்லது மிகக்குறைவு. சில பௌத்த ஜாதகக் கதைகள் தவிர, சிங்களப்பண்பாட்டில் கூட புறாவுக்கு இத்தனை முக்கியத்துவம் வழங்கப்படுவதாகத் தெரியவில்லை. பத்தினியும் புறாவும் தொடர்பான வேறேதும் தொன்மங்கள் கிடைத்தாலன்றி, இந்த மர்மத்தைத் துலக்குவது எளிய காரியம் அல்ல. புறாவை இறையம்சமாகச் சொல்வது, இலங்கைத் தமிழர்க்கே – குறிப்பாக கிழக்குத் தமிழர்க்கே உரித்தான பண்பாட்டுத்தனித்துவம் எனலாம்.

புறா என்பது சமகாலத்தில், உலகெங்கும், அமைதிக்கும் சமாதானத்துக்குமான அடையாளமாக பரவலாக எடுத்தாளப்படும் குறியீடு. புறாவை கண்ணகியோடு இணைக்கும் கிழக்கிலங்கைத் தொன்மத்தை இந்த நவீன நோக்குநிலையில் அணுகும் போது நமக்கு மிகப்பெரிய தரிசனமொன்று கிட்டுகின்றது. ஒன்றோடொன்று முட்டிமோதும் சிங்கள – தமிழ் இனங்கள் பேதமின்றிக் கைகூப்பி நிற்கும் பொதுவான அன்னை பத்தினி கண்ணகி. இரு இனங்களையும் இணைக்கும் புறாவாக அவள் இலங்கை மண்ணில் சிறகடித்து எழவேண்டும், குருதி ஈரம் காயாத ஈழதேசத்தில், அந்தப் பொற்புறாவின் நிழல் விழுந்து புதிய பொற்காலம் ஒன்று பிறக்கவேண்டும். பொற்புறவு அன்னையிடம் அப்படி வேண்டுவது தவிர, நாம் செய்யக்கூடுவது தான் யாது?

**புறாவை இறையம்சமாகச் சொல்வது, இலங்கைத் தமிழர்க்கே – குறிப்பாக கிழக்குத் தமிழர்க்கே உரித்தான பண்பாட்டுத்தனித்துவம்**

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 03



**தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்**

1959ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது முன்பு பட்டிருப்புத் தொகுதியில் அடங்கியிருந்த பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை போன்ற கிராமங்கள் புதிய கல்முனைத் தொகுதியின் கீழும், முன்பு கல்முனைத் தொகுதியில் அடங்கியிருந்த காரைதீவு புதிய நிந்தவூர்த் தொகுதியின் கீழும் உள்ளடங்கப் பெற்றன. அதே போல் முன்பு பட்டிருப்புத் தொகுதியில் அடங்கியிருந்த சவளக்கடை, சொறிக்கல்முனை, அன்னமலை, நாவிதன்வெளி, 6ம் கொலணி போன்ற தமிழ்க் கிராமங்கள் புதிய பொத்துவில் தொகுதியின் கீழ் உள்வாங்கப் பெற்றன. முன்பு கல்முனைத் தொகுதியில் அடங்கியிருந்த சம்மாந்துறை புதிய பொத்துவில் தொகுதியின் கீழ் இருந்த அக்கரைப்பற்று புதிய நிந்தவூர்த் தொகுதியின் கீழ் கொண்டுவரப் பெற்றது.

இவ்வாறு வெட்டியும் கொத்தியும் புதிய கல்முனை, நிந்தவூர், பொத்துவில் மற்றும் பட்டிருப்பு தொகுதிகளை உருவாக்கக் காரணம் எதிர்காலத்தில் புதிய பட்டிருப்புத் தொகுதியில் எம். எஸ் காரியப்பர் தனது தேர்தல் வெற்றியை உறுதி செய்வதற்குமாகும். அதேவேளை அப்போதைய அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் தமிழ்ப் பெரும்பான்மைத் தொகுதியொன்று எதிர்காலத்தில் ஏற்படுவதைத் தவிர்ப்பதும் இத் தமிழ் மக்கள் வாழ்ந்த கல்முனை, நிந்தவூர், பொத்துவில் தொகுதி மக்களில் தமிழர் எவரேனும் போட்டியிட்டாலும் கூட அவர்கள் வெல்ல முடியாதவாறு தமிழர்களை மேற்கூறப்பெற்ற கல்முனை, நிந்தவூர், பொத்துவில் ஆகிய மூன்று தொகுதிகளிலும் சிறுபான்மையினராக்கிச் சிதறடிப்பதாகும்.

இதன் மூலம் 1959ம் ஆண்டின் தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் உருவான அம்பாறைத் தொகுதி சிங்களப் பெரும்பான்மையாகவும் ஏனைய பொத்துவில், நிந்தவூர், கல்முனை ஆகிய மூன்று தொகுதிகளும் முஸ்லிம் பெரும்பான்மையாகவும் வருமாறு ஆக்கப்பெற்றது. இதனால் இப்பிரதேசத்தை சேர்ந்த தமிழர்கள் (அம்பாறைத் தமிழர்கள்) மேற்கூறப்பெற்ற சகல தொகுதிகளிலும் சிறுபான்மையினராக்கப்பெற்றுத் தேர்தலின் போது அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ளாதவாறு அரசியல் அனாதைகள் ஆக்கப்பெற்றனர்.

இப்பிரதேசத் தமிழர்களுக்கு வரக்கூடிய இந்த அரசியல் ஆபத்தைத் தனது கட்சி அரசியல் நலன்களுக்காகத் தமிழரசுக்கட்சி கண்டும் காணாததும் போல் இருந்துவிட்டது. அதன் பாதகமான விளைவுகளை அம்பாறை மாவட்டத் தமிழர்கள் இன்னும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். 1959ல் எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பெற்ற தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் நடைபெற்ற 1960 மார்ச், 1960 யூலை, 1965,1968 கல்முனைத் தொகுதி இடைத் தேர்தல், 1970 ஆகிய பாராளுமன்றப் பொதுத் தேர்தல்களில் தெரிவு செய்யப்பெற்ற பிரதிநிதிகளின் பெயர் விபரங்கள் கீழே காட்டப்பெற்றுள்ளன.

| தேர்தல் ஆண்டு | பொத்துவில் தொகுதி | நிந்தவூர் தொகுதி | கல்முனை தொகுதி | அம்பாறை தொகுதி |
|---|---|---|---|---|
| 1960 மார்ச் | எம்.ஏ.அப்துல்மஜீத் (சுயேச்சை) | எம்.ஏ.அப்துல்மஜீத் (சுயேச்சை) | எம்.எஸ்.காரியப்பர் (எல்.பி.பி) | விஜயபாகு விஜயசிங்க (ஸ்ரீ.ல.சு.க) |
| 1960 யூலை | எம்.ஏ.அப்துல்மஜீத் (சுயேச்சை) | எம்.ஏ.அப்துல்மஜீத் (சுயேச்சை) | எம்.சி. அகமட் (தமிழரசுக்கட்சி) | இந்திரசேன டி சொய்சா (ஸ்ரீ.ல.சு.க) |
| 1965 | எம்.ஏ.அப்துல்மஜீத் (சுயேச்சை) | எம்.எம். முஸ்தபா (ஐ.தே.க) | எம்.எஸ்.காரியப்பர் (சுயேச்சை) | செனரத் சோமரட்ன (ஸ்ரீ.ல.சு.க) |
| 1968கல்முனை இடைத்தேர்தல் | | | எம்.சி. அகமட் (ஸ்ரீ.ல.சு.க) | |
| 1970 | எம்.ஏ.அப்துல்மஜீத் (சுயேச்சை) | எம்.எம். முஸ்தபா (ஐ.தே.க) | எம்.சி. அகமட் (ஸ்ரீ.ல.சு.க) | செனரத் சோமரட்ன (ஸ்ரீ.ல.சு.க) |

1946ல் நடைபெற்ற தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போதும் பின் 1959ல் நடைபெற்ற தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போதும் தமிழ் மக்களுக்குப் பாரபட்சம் இழைக்கப் பெற்ற காரணத்தினால் 1947-1977 வரை 30 ஆண்டுகள் அம்பாறைத் தமிழர்கள் தங்களுக்கென பிரதிநிதித்துவம் இன்றி இருக்க நேரிட்டது. 1947ல் இருந்து 1970 வரை நடைபெற்ற தேர்தல்களில் தமிழ் வேட்பாளர்கள் பலர் இப்பிரதேசத்தில் போட்டியிட்ட போதிலும் தமிழர் எவரும் வெற்றி பெறவில்லை.

1947ம் ஆண்டு கல்முனைத் தொகுதியில் சுயேட்சையாக போட்டியிட்ட காரைதீவைச் சேர்ந்த கே. கணபதிப்பிள்ளை என்பவர் (அப்போது காரைதீவு கல்முனைத் தொகுதியிலிருந்து) பதிவான 13863 வாக்குகளில் 3592 வாக்குகளைப் பெற்று தோல்வியுற்றார். ஐ.தே.க வேட்பாளர் எம்.எஸ் காரியப்பர் வென்றார்.



1956ம் ஆண்டு கல்முனைத் தொகுதியில் லங்கா சமஜமாஜக் கட்சியில் போட்டியிட்ட என்.ரி. பிரான்சிஸ் சேவியர் என்பவர் பதிவான 19984 வாக்குகளில் 4242 வாக்குகள் பெற்றுத் தோல்வியுற்றார். தமிழர்களுடைய வாக்குகள் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் எம்.எஸ்.காரியப்பருக்கு அளிக்கப்பெற்று அவரே வெற்றியீட்டினார்.

1960 மார்ச் தேர்தலில் பொத்துவில் தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்ட வீ.சந்திரசேகரம் பதிவானை 14103 வாக்குகளில் 1910 வாக்குகளைப் பெற்றுத் தோல்வியுற்றார். சுயேச்சை வேட்பாளர் எம்.ஏ. அப்துள்மஜித் வெற்றி பெற்றார்.

1965ம் ஆண்டு தேர்தல் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்ட என். தருமலிங்கம் பதிவானை 19401 வாக்குகளில் 5296 வாக்குகளைப் பெற்று தோல்வியுற்றார்.

இத் தேர்தலில் பொத்துவில் தொகுதியில் தமிழரசுக் கட்சி கொழும்பைச் சேர்ந்த காதர் எனும் முஸ்லிம் ஒருவரைக் களமிறக்கியிருந்தது. பொத்துவில் தொகுதியைச் சேர்ந்தவரும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் அக்கரைப்பற்று தெற்கு (திருக்கோவில்) கிராம சேவைத் தலைவருமான அறப்பேரணித் தலைவர் ஆர்.டபிள்யூ.அரியநாயகம் அவர்கள் இத்தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் ஜகுப் காதர் அவர்களையோ அல்லது தமிழரான சுயேச்சை வேட்பாளர் தம்பிலுவில் கிராமத்தை சேர்ந்த என்.தருமலிங்கம் அவர்களையோ ஆதரிக்காமல் ஐ.தே.க கட்சி சார்புச் சுயேச்சை வேட்பாளர் சம்மாந்துறையைச் சேர்ந்த எம்.ஏ.அப்துல்மஜித் அவர்களை ஆதரித்துப் பிரச்சாரங்களை மேற்கொண்டார். அப்துல்மஜித்தே வெற்றியீட்டினார்.

1968ம் ஆண்டு கல்முனைத் தொகுதியில் ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி வேட்பாளராகப் போட்டியிட்ட எம்.மாணிக்கம் (முன்னால் செனட்டர், கலாமாணிக்கம் திருமதி சாம் தம்பிமுத்து அவர்களின் தந்தையார்) அவர்கள் பதிவான 21731 வாக்குகளில் 431 வாக்குகள் பெற்று தோல்வியுற்றார்.

1970 தேர்தலில் பொத்துவில் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட என். தருமலிங்கம் பதிவான 25309 வாக்குகளில் 9335 வாக்குகள் பெற்று வெற்றியீட்டிய ஐ.தே.க வேட்பாளர் எம்.ஏ அப்துல்மஜித்திடம் 1275 வாக்கு வித்தியாசத்திலேயே தோல்வியுற்றார். இத் தேர்தலிலும் தமிழரசுக் கட்சி முக்கியஸ்தரான அறப்போர் அரியநாயகம் அவர்கள் தமிழரான தருமலிங்கம் அவர்களை ஆதரிக்காமல் ஐ.தே.க வேட்பாளர் எம்.ஏ.அப்துல் மஜித் அவர்களையே ஆதரித்துப் பிரச்சாரங்களை மேற்கொண்டார். இதனாலேயே இத் தேர்தலில் என்.தருமலிங்கம் அவர்கள் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வியுற நேர்ந்தது. தருமலிங்கம் அவர்கள் இத் தேர்தலில் வென்றிருந்தால் சுதந்திர இலங்கையில் முதன் முதலாக அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு 1970 களிலேயே ஒரு தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

இத்தேர்தலில் என்.தர்லிங்கம் அவர்ளை எப்படியாவது வெற்றியீட்டப் பண்ணுவதன் மூலம் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு ஒரு தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்றுவிட வேண்டுமென்று பொத்துவில் தொகுதி வாழ் தமிழ் மக்கள் ஒற்றுமையாக நின்று பகீரதப் பிரயத்தனம் செய்தவேளை, உள்ளூர் அரசியல் பகைமை காரணமாக தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான ஆர்.டபிள்யூ.அரியநாயகம் அவர்கள் தருமலிங்கத்தை எதிர்த்து ஐ.தே.க வேட்பாளர் எம்.ஏ.அப்துல்மஜித் அவர்களை ஆதரித்துத் தேர்தல் வேலைகளில் ஈடுபட்டமை வரலாற்றில் ஒரு “வடு“ வாகப் பதிவுசெய்யப்பெற வேண்டிய விடயமாகும்.

அரியநாயகம் அவர்களின் இந்த எதிர்மறைச் செயற்பாட்டைத் தடுக்காமல் தமிழரசுக் கட்சி அன்று புதினம் பார்த்து கொண்டிருந்தது. இதன் காரணமாக தமிழரசுக் கட்சி மீது ஏற்பட்ட அரசியல் பகைமை உணர்வே பின்னாளில் 1977ல் பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் எம். கனகரட்ணத்தை எதிர்த்து தருமலிங்கம் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடக் காரணமாக அமைந்தது. இத் தேர்தலில் பொத்துவில் தொகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பெற்ற எம். கனகரட்ணம் மூன்றாவது இடத்தில் வந்த எம். எம்.முஸ்தபாவைச் சொற்ப வாக்கு வித்தியாசத்தில்தான் (1672) தோற்கடிக்க முடிந்தது. தருமலிங்கம் அவர்கள் இன்னும் கொஞ்ச வாக்குகளைப் பிரித்திருந்தால் பொத்துவில் தொகுதியின் இரண்டு அங்கத்தவர்களுமே (ஜனப் ஜலால்டீன் மற்றும் முஸ்தபா) முஸ்லிம்களாக வந்திருப்பார்கள். அப்படி நடந்திருந்தால் 1976ம் ஆண்டின் தேர்தல் எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது முஸ்லிம் ஒருவரும் தமிழர் ஒருவரும் பாராளுமன்ற உறுப்பினர்களாக வரும் வண்ணம் பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கப் பெற்ற நோக்கமே நிறைவேறாமல் போயிருக்கும். அது மட்டுமல்ல அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குச் சுதந்திர இலங்கையில் 1947ல் இருந்து 1989 வரை 42 ஆண்டுகள் தமிழர் ஒருவர் பாராளுமன்றத்தில் தங்களைப் பிரதிநிதித்துவம் செய்ய முடியாத துர்பாக்கிய நிலை தோன்றியிருக்கும். அதிஸ்டவசாக அம்பாறை மாவட்டத் தமிழர்கள் 1977 தேர்தலில் காப்பாற்றப் பெற்றார்கள்.

இத் தமிழர் பிரதிநிதித்துவம் அன்று 1970 தேர்தலில் என். தர்மலிங்கம் அவர்களின் வெற்றியின் மூலம் எய்தப் பெற்றிருந்தால் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் பல சமூக, பொருளாதார, அரசியல் அனுகூலங்களை அன்றே பெற்றிருப்பார்கள். இதற்குத் தடையாயிருந்த தமிழரசுக் கட்சிப் பிரமுகரான அரியநாயகம் போன்றோரின் புத்திசாலித்தனமற்ற, மக்கள் நலனை முதன்மைப்படுத்தாத அரசியல் செயற்பாடு அம்பாறை மாவட்டத் தமிழருக்குத் தவறிழைத்தது. அரியநாயகம் அவர்களின் மீது அபிமானமும், அவரின் குடும்பத்துடன் அந்நியோன்யமான உறவும் இக்கட்டுரை ஆசிரியருக்கு உண்டெனினும் அம்பாறை மாவட்டத் தமிழர்களுடன் சம்பந்தப் பெற்ற அரசியல் நிகழ்வுகளைக் காய்தல் உவத்திலின்றி ஆய்வு நோக்கில் பதிவு செய்ய வேண்டிய தேவை உள்ளது.

(தொடரும்...)



# இந்துப் பண்பாட்டில் கவனிக்கப் பட வேண்டிய பக்கம்-3

## (மட்டக்களப்பின் இந்துத் தெய்வங்களையும் வழிபாட்டினையும் மையப் படுத்திய சில சிந்தனைகள்)






பெரும் தெய்வ வழிபாட்டில் பக்தர்களையும் கடவுளரையும், கடவுளருக்கும் பக்தருக்குமிடையே தரகராக நிற்கும் பிராமணக் குருக்கள் பிரித்துவிடுகிறார். அங்கு சுலோகங்களாகக் கூறப்படும் சமஸ்கிருத மொழி மக்களைத் தெய்வத்தினின்றும் அந்நியப்படுத்திவிடுகிறது. கருவறைக்குள்ளே வெகு தொலைவிலேயே ஆண்டவனின் விக்கிரகம் இருந்து விடுகிறது. (எழுந்தருளி; விக்கிரகம் வெளியே கொண்டு வரப்படினும் கருவறைக்குள் இருக்கும் இருந்தருளி பக்தர்களின் அருகில் வருவதில்லை.)

**மட்டக்களப்பு இந்துமத வழிபாட்டில் 90 வீதமான வணக்க முறை சிறுதெய்வ வணக்க முறை**

மட்டக்களப்பில் சிறுதெய்வ வழிபாட்டில் இத்தடைகள் மீறப்படுகின்றன. இங்கு சிறுதெய்வச் சடங்கு மக்களுக்குள்ளேயே தெய்வம் வரும் விழாவாக, தெய்வத்தோடு மக்கள் பேசி மகிழ்ந்து உறவாடி அதனைத் தொட்டு அழைந்து திருப்தியுறும் விழாவாக நெருங்கிய வகையில் மக்களும் தெய்வமும் இணையும் விழாவாக பேதங்கள் அற்ற பெரு நெறியாக இங்கு சிறுதெய்வ வழிபாடு அமைந்துவிடுகிறது.



மட்டக்களப்பில் ஏறத்தாழ 200 சிறுதெய்வக் கோயில்கள் இருப்பதாகக் கூறுவர். சாதிக்கு ஒரு தெய்வம், ஊருக்கு ஒரு தெய்வம், தெருவுக்கு ஒரு தெய்வம் என்று சிறுதெய்வங்கள் ஊரெல்லாம் நீக்கமற நிறைந்துள்ளன.



**இந்து கலாச்சாரம் பற்றியும், இந்து பண்பாடு பற்றியும் எழுதுவோர் ‘உயிர்த்துடிப்பு மிக்க சிறுதெய்வ வழிபாடு‘ பற்றி அதிகம் கூறுவதில்லை**

மட்டக்களப்பின் சிறுதெய்வ வழிபாடு பற்றி எழுதிய மகேஸ்வரலிங்கம் இங்கு வணங்கப்படும் 6 பெண் தெய்வங்களையும் 13 ஆண் தெய்வங்களையும் குறிப்பிட்டு அத்தோடு துணைத்தெய்வங்கள், பரிகாலத் தெய்வங்கள் துட்டத் தெய்வங்கள் எனப் பலவகையான சிறு தெய்வங்களை பட்டியலிட்டுள்ளார்.

மட்டக்களப்பு இந்துமத வழிபாட்டில் 90 வீதமான வணக்க முறை சிறுதெய்வ வணக்க முறையே. இன்னொரு வகையில் சொன்னால் மேட்டுக்குடியினரால் தமது பெரும் தெய்வங்களாக எண்ணி வழிபடுகிறார்கள்.

ஆகம முறை சாராத, பக்தி முறை சார்ந்த மக்களை ஈடுபாட்டுடன் பேதா பேதமின்றி உள்ளிழுக்கும் இவ்வழிபாட்டு நெறி மட்டக்களப்பில் மாத்திரமல்ல. மலைநாடு, மல்லிகைதீவு, வற்றாப்பளை, சிலாபம், முதூர், திருமலை ஆகிய தமிழர் வாழ் பிரதேசங்களில் எல்லாம் பெரும் வழிபாட்டு நெறியாகக் காணப்படுகின்றது. யாழ்பாணத்திலும் இவ்வழிபாட்டு நெறி சமூக அமைப்பில் குறைந்தவர்கள் என வகுக்கப்பட்ட சாதியினர் மத்தியில் வழக்கிலுண்டு. உண்மையில் இச்சிறு தெய்வ வழிபாடும் அவ்வழிபாட்டிற்குரிய ஆகமம் சார கிரியை முறைகளும் செயற்பாடுகளும், கோயிலமைப்பும், கோயில் விழாவும், அங்கு பாடப்படும் பாடல்களும், இசையும் இசைக்கருவிகளும் இந்து மதத்தினதும் இந்து கலாச்சாரத்தினதும் உயிர்த்துடிப்புமிக்க ஒரு பகுதியாகும்.

இத்தகைய உயிர்த்துடிப்பு மிக்கதும் பெரும்பான்மை இந்து மக்களை குறிப்பாக கிராமப்புற இந்து மக்களை வெகுவாக ஈர்த்து நிற்கின்றதுமான இப்பெரு நெறி பற்றி இந்து கலாச்சாரம் பற்றியும், இந்து பண்பாடு பற்றியும் எழுதுவோர் அதிகம் கூறுவதில்லை. இந்து கலாச்சார பாடவிதானத்திலும் இதற்குப் பெருமளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

இந்துக் கடவுளுக்குள் சிவன், திருமால், முருகன், பிள்ளையாருக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் மக்கள் கடவுளரான சிறுதெய்வங்களுக்கு அளிக்கப்படுவதில்லை. சாங்கிய தரிசனத்தின் அடியாக எழுந்த தாய்த் தெய்வ வழிபாடும் அம்மன் பக்ததிகளும் பெரிதாக இந்துக் கலாச்சாரத்தில் பேசப்படுவதுமில்லை.

பெரு தெய்வ கோயில் கட்டிடங்களையும், சிற்பங்களையும், தேவார திருவாசங்களையும், கர்நாடக இசையினையும், பரத்ததையும் போற்றும் இந்து கலாச்சார மரபு சிறுதெய்வக் கோயிற் கட்டிடக்கலைகளையும் சிறுதெய்வ விக்கிர வார்ப்பு முறைகளையும் காவியம், அம்மானை, ஊஞ்சல், குளிர்த்திப் பாடல்களையும் குறிப்பிடுவதில்லை.

இந்து மதத்தின் மிக வலிமையான இன்னொரு பக்கத்தை ஏன் நமது இந்து கலாச்சார மரபு பார்க்கவில்லை என்பது பிரதானமானதும் முக்கியமானதுமான ஓர் வினாவாகும்.

இதற்கு விடை தேட வேண்டுமாயின் இந்து மதத்தின் வராலாற்றையும், அதனைக் கட்டியமைத்தவர்களின் கருத்து நிலைமையினையும், சமூகப் பின்னணிகளையும் புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஆரம்பத்தில் சொன்ன பன்முகப்பார்வையும், ஆய்வுமே இதற்கு விடை தரும்.

(தொடரும்)

# மூதாதையரின் காலடிகள்

## சதுர்வேதிமங்கலம் எனும் ராஜேந்திர வள நாடு

தென் ஆசியா தென்கிழக்காசியா என ஒரு பெரும் சாம்ராச்சியத்தை கட்டமைத்தவர்கள் சோழ அரசர்கள். ராஜ ராஜ சோழன், அவன் மகன் ராஜேந்திர சோழன் என அவன் வழி வந்தவர்கள், தமிழன் இருப்பை நாம் இன்று வரை பேசக்கூடிய அளவுக்கு ஒரு பண்பாட்டுப் படர்ச்சியை உருவாக்கியவர்கள்.

ஈழத்தில் தமிழர் தொல்நிலங்கள் இன்று



ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் அவர்களது வரலாற்று இருப்பை பேச நம் மூதாதையர்களின் காலடிகளாக எஞ்சியிருக்கும் தொல்லியல் சான்றுகள் நிறைந்த இடமாய் சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்ட தமிழர் தொல்நிலம் கோயில்புரம் என இன்று அழைக்கப்படுகிறது.

திருகோணமலையிலிருந்து புறப்பட்டு கொழும்பு செல்லும் வழியில் நாற்பது கல் தொலைவில், கந்தளாய் குளத்துக்கு அருகில், அதன் நீர்ப்பாச்சல் வயல் நிலத்து ஓரமாய் இந்த தொல் தமிழ் நகரத்தின் ஒரு வளம் மிகு நாகரிகத்தின் எஞ்சிய பகுதிகள் கல்வெட்டுகளாகவும் உடைந்த தூண்களாகவும் சிலைகள் லிங்க வடிவுகள் என கொட்டிக் கிடக்கும் நம் முன்னோர் அளித்த அருஞ் செல்வமாய் காணக்கிடைக்கிறது.

சதுர்வேதிமங்கலம் எனும் பெயர் தமிழ் நாட்டிலும் சோழர்கள் செல்வாக்கு பெற்ற பழைய நகரங்களுக்கு இடப்பட்டிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.
தமிழ் நாட்டு சதுர்வேதிமங்கலம் பற்றிய பின்வரும் தகவல்கள் கந்தளாய் சதுர்வேதிமங்கலத்தின் ஊர்ச்சபை பற்றிய கல்வெட்டு ஆதாரங்களோடு ஒத்துப்போவதை அவதானிக்க முடியும்.

““உத்திரமேரூரில் முதல் பராந்தகன் சோழன் காலத்தில் வைகுந்தப்பெருமாள் கோவில் கல்வெட்டு
கிபி 919-921இல் வரையப்பெற்று



உத்திரமேரூர் சதுர்வேதிமங்கலத்தில் கிராம நிர்வாகம் குடவோலை முறைப்படி நடைபெற்று வந்ததை உறுதி செய்கின்றது. ஆக குடவோலை முறை ராசராச சோழன் காலத்திற்கு முன்பே இருந்து வந்தது தெளிவாக விளங்குகிறது.
இம்முறை பார்ப்பனர்கள் அதிகம் வசித்த, அவர்களுக்க்கு தானமாக வழங்கப்பட்ட அகரம், சதுர்வேதிமங்கலம், பிரம்மதேயம் ஆகிய இடங்களில் கிராமசபை என்ற பெயரில் வழங்கப்பட்டது. வேளாண் மக்கள் வாழ்ந்து வந்த இடங்கள் ஊர் என்றும் அங்கு இருந்த சபைகள் ஊர்ச்சபை என்றும் வழங்கப்பட்டன.“

சோழ மன்னர்கள் தமிழ் நாட்டில் பிரமோதயங்களை உருவாக்கி தங்கள் நிர்வாக கட்டமைப்பாக அதனை செயற்படுத்தினர். கோயிலும் அதன் சூழலும் என அமைந்த நிர்வாகப் பிரிவுகள் அவை. அதைப்போலவே



கந்தளாய் சதுர்வேதமங்கலமும் ஆட்சி நிர்வாக அலகாக இருந்திருக்கிறது. இதுவே பின்னர் பற்றுக்களாக மாறியிருக்கலாம். வள நாடுகள் பற்றுக்களாக மாறியிருக்கின்றன என்பதை கோணேசர் கல்வெட்டு உணர்த்தி நிற்கிறது.
பண்டைய நாட்களில் கந்தளாயில் “சதுர்வேதிமங்கலம்“ என்றழைக்கப்பட்ட பிரதேசம் இருந்தது. இங்கு நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்த அந்தணர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்களுக்கு இப்பிரதேசம் வரியில்லாமல் வழங்கப்பட்டிருக்கிறது. இங்கிருந்த குடியேற்றம் அளவில் பெரிதானதாகவும், அதிகாரம் கொண்டதாகவும் அமைந்திருந்தது என அறியமுடிகிறது. கி.பி 10 ஆம் நூற்றாண்டில் சோழரது நேரடி ஆட்சி இலங்கையில் ஏற்பட்டபோது நாகநாட்டில் இருந்த (தற்போதைய வடகிழக்கு மாகாணம்) தமிழ் அரசும் அவர்களது ஆதிக்கத்துக்கு உட்பட்டது என வரலாற்றாதாரங்கள் மூலம் அறிய முடிகிறது. சோழப்பேரரசின் படையெடுப்பின் மூலம் இப்பிரதேசம் இராஜராஜனின் (கி.பி 985 - கி.பி 1014) ஆதிக்கத்தின்கீழ் வந்தபின் “இராஜராஜ சதுர்வேதி மங்கலம்“ என்றே அழைக்கப்பட்டிருக்கிறது. (சோழர் ஆட்சியின் கீழ் தமிழ்ப் பௌத்தர்களால் நிர்வகிக்கப்பட்ட விகாரை இராசராசப் பெரும் பள்ளியெனப் பெயர்மாற்றம்

**பாலசுகுமார் சேனையூர்**
**மேனாள் முதன்மையர்**
**கலை கலாசார பீடம்**
**கிழக்குப் பல்கலைக் கழகம்**

செய்யப்பட்டதுபோல்) அதன் பின்னர் அவரது மகன் இராஜேந்திரன் (கி. பி 1012 - கி.பி 1044) காலப்பகுதியில் திருகோணமலை நகரம், இராஜ ராஜ சதுர்வேதிமங்கலம் (கந்தளாய்) என்பவற்றை உள்ளடக்கிய பிரதேசம் “இராஜேந்திர சோழவளநாடு“ என அழைக்கப்பட்டிருக்கிறது.

கி.பி 1010 ஆம் ஆண்டில் இங்கு இராசேந்திர சோழனால் சிவன் கோவில் கட்டப்பட்டது. அப்புராதானக் கோயிலின் சிதைந்த பாகங்களைக்கொண்ட சிவன் பார்வதி சிலை, தூண் சிதைவுகள், ஆவுடையார் போன்றவை இன்றும் அக்கோயிலின் வரலாற்றுத் தொன்மைதனை பறைசாற்றி நிற்கின்றன.

வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில் இங்கிருந்த ஆலயம் பிரசித்தமானதாகவும் பலர் ஒன்றுகூடி அமர்ந்து கலந்துரையாடக்கூடிய மண்டபங்களைக்கொண்ட பிரமாண்டமானதாகவும் இருந்திருக்கவேண்டுமென அறியமுடிகிறது. கந்தளாயிலுள்ள பேராறு எனுமிடத்தில் அமைந்திருக்கும் இவ்வாலயச் சிதைவுகள் 1950ம் ஆண்டு காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் அவ்விடத்தில் ஒரு சிவாலயம் புதிதாக அமைக்கப்பட்டது.

இவ்வாலச் சூழலில் கண்டெடுக்கப்பட்ட பல சாசனங்களில் இருந்து



இவ்வாலயத்தின் சிறப்பையும் இங்குவாழ்ந்த மக்களது சமய, பண்பாட்டு நடமுறைகளையும், இப்பிரதேசத்தில் நிலவிய அரசாட்சி பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறது.

அங்கு கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் சொல்லும் செய்திகளின் சுருக்கம்.

01. இராஜராஜ சதுர்வேதி மங்கலத்தின் ஊராட்சி அமைப்பான பெருங்குறி(மகாசபை) பெருமக்கள் ஒரு இரவு ஒன்றுகூடி விக்கிரம சோழ வாய்க்கால் தொடர்பாக எடுத்த தீர்மானத்தின் பதிவுகளையே ஒரு கல்வெட்டு சொல்கிறது. இதனை ஆராய்ந்த கலாநிதி. கா. இந்திரபாலாவின் கருத்துப்படி கி.பி 1033 மாசி 13ம்



திகதி - கி.பி 1047 மாசி 10 ம் திகதி இம் மகாசபைக்கூட்டம் நிகழ்ந்திருக்க வேண்டுமெனக் கருதுகிறார்.

02. இங்குள்ள இன்னுமொரு சாசனம் முதலாம் விஜயபாகு தேவரின் 42ம் ஆட்சியாண்டிலே எழுதப்பட்டது. (கி.பி 1097) நங்கைசானி என்னும் பிராமணப்பெண் தனது கணவனின் நினைவாக சதுர்வேத மங்கலத்து விஜயராஜ ஈஸ்வரம் என்னும் ஆலயத்தில் ஏற்படுத்திய அறக்கட்டளை பற்றிய விவரங்களை அது வர்ணிக்கிறது.

03.கி.பி 12 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதாவது கி.பி 1103 ஆண்டுக்குரியதான கல்வெட்டில் கந்தளாய் என்றே அக்காலத்தில் இப்பிரதேசம் அழைக்கப்பட்டதாக அறிய முடிகிறது. அத்துடன் பொலநறுவையை ஆட்சி புரிந்த விஜயபாகு தனது 37ம் ஆட்சியாண்டில் தானமளித்தான் என்பதையும் அறியமுடிகிறது.

இதுவரை இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இதில்தான் முதன் முறையாக திருப்பள்ளியெழுச்சி, திருப்போனகம் என்னும் சொற்பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகிறார்.“
ஒரு நன்கு திட்டமிடப்பட்ட அரசும் அதற்கான கட்டமைப்புகளும் இயங்கிய சூழ்நிலையை கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்களும் இடிந்த அழிபாடுகளும் நிருபிக்கின்றன.
இங்கு நமக்கு கிடைத்தவை கொஞ்சமே; கிடைக்காதவை மிக அதிகம். பேராறு, அதனைச் சூழ உள்ள காடுகளை மேலும் ஆய்வுகள் செய்கிற போது மேலும் தகவல்களைப் பெறலாம்.
தமிழர் பகுதிகளில் இன்று கண்டெடுக்கப்படும் புதைபொருள் சின்னங்கள் நம் மூதாதையரின் காலடி சுவடுகளே சுவடுகளின் வழி பயணிக்கும் போது நாம் கடந்து போன வரலாற்றை மீட்டெடுக்க முடியும்.



# டைனோசர்கள் அடைகாத்து குஞ்சு பொரித்தது எப்படி?

## கூடு கட்டி, அடைகாத்த ஒரு இனந்தான் டைனோசர்

எல்லாவற்றையும் விட பெரிய டைனோசர்கள் முட்டையிட்டு அடைகாத்து, குஞ்சுபொரித்து, குடும்பத்தை பெருக்கியிருக்கிறது.

நீங்கள் 1500 கிலோ கனக்கும் போது உங்களால் எப்படி கூட்டில் அமர முடியும்? கடினம் தானே? பின் எப்படி ஆயிரம் கிலோவிற்கு மேல் கனக்கும் டைனோசர்கள் தங்கள் கூட்டில் அமர்ந்து முட்டைகளை அடைக்காத்து இருக்கும்?



இதற்கான விடை அண்மைய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. அந்த ஆய்வு முடிவுகள் மிக சுவாரஸ்யமானவை.

சிக்கலான ஆய்வு
ஆசியா மற்றும் வட அமெரிக்காவை சேர்ந்த பல்வேறு ஆய்வாளர்கள் ஒன்றிணைந்த சர்வதேச ஆய்வுக் குழு ஒன்று இது குறித்து ஆய்வினை




மேற்கொண்டுள்ளது.

டைனோசரின் குழந்தை வளர்ப்பு பண்பு குறித்து ஆய்வு செய்வது என்பது சுலபமான ஒன்றாக இருப்பதில்லை. ஏனெனில், அதன் படிமங்கள் என்பது ஒப்பீட்டு அளவில் மிகவும் குறைவானவையே. ஆனால், ஒரு நீண்ட முயற்சி மற்றும் ஆய்வுக்குப் பின் ஓவிராப்டோரோசர் என்று அழைக்கப்படும் டைனோசரின் ஒரு வகையின் அடைகாக்கும் தன்மை கண்டறியபட்டுள்ளது.

கூடும், முட்டையும்
இந்த டைனோசர்கள் நடுவில் கொஞ்சம் இடம்விட்டு வட்டமாக தங்களது முட்டைகளை கூட்டின் உள்ளே அடுக்கி வைத்து, அந்த வட்டத்தின் நடுவே அமரும்.

அந்த மைய வெளியானது டைனோசரின் எடையை தாங்கும். அதேநேரம், உடல் எடையினால் முட்டை உடையாமல், வெப்பமானது அந்த முட்டையினில்படும். இப்படியாக தனது முட்டைகளை டைனோசர் அடைகாத்து இருக்கிறது என்கிறது ஆய்வு.



இந்த ஆய்வில் பங்கேற்ற கல்கரி பல்கலைக்கழகத்தை சேர்ந்த டர்லா, ”இது ஒரு சுவாரஸ்யமான டைனோசர் குழு” என்கிறார்.

பெரும்பாலான டைனோசர்கள் நூறு கிலோ அல்லது அதற்கு குறைவான எடை உடையவை. பறவை போன்ற உடலும், குறிப்பாக கிளி போன்ற மண்டை ஓடும் உடையவை என்கிறார் அவர்.

நீல - பச்சை நிற முட்டைகள்

இந்த வகை டைனோசரின் முட்டைகள் நீலம் அல்லது பச்சை நிறத்தில் இருக்கும் என்று முன்பே பல ஆய்வுகள் வலியுறுத்தி உள்ளன. பெரிய முட்டையின் எடையே 6 கிலோ வரை இருக்கும்.

இந்த ஆய்வினை `எளிமையானது மற்றும் நேர்த்தியானது` என்று இயற்கை அறிவியலுக்கான வட கரோலினா அருங்காட்சியகத்தை சேர்ந்த ஆய்வாளர் லிண்ட்சே கூறியுள்ளார்.

இந்த ஆய்வானது டைனோசர் எப்படி கூர்ப்படைந்தது என்று புரிந்துக் கொள்ள உதவும் என்கிறார் அவர்.

**நன்றி: பிபிசி**

# பிட்கொயின் (Bitcoin) எனும் சதுரங்கவேட்டை:

பிட்கொயின் (மெய்நிகர் நாணயம் அல்லது எண்மநாணயம்) என்பது முதலீட்டு ஆர்வலர்கள், பொருளியிலாளர்கள் என்பவர்களினது கவனத்தை மட்டுமல்லாமல் சாதாரண மக்களின் கவனத்தையும் தன்பக்கம் திருப்பியுள்ளது.

பிட்கொயின் ஒரு முதலீடா அல்லது ஒரு வகைச் சூதாட்டமா என்ற விவாதம் ஊடகங்களில் முக்கிய இடம்பெறுகிறது. அதன் அலகின் பெறுமதியும் சடுதியாக பரிமாற்றல்களில் அதிகரித்தே காணப்படுகிறது. இவ்வாறான பெறுமதி அதிகரிப்பே பலரின் கவனத்தையும் பிட்கொயின் மீது திருப்பியுள்ளது.
பிட்கொயின் பற்றிய உரையாடல்கள் ஐரோப்பா,அமெரிக்கக் கண்டங்களைக் கடந்து ஆசியாவில் இந்தியா போன்ற நாடுகளையும் அடைந்துள்ளது.
இப்படிப்பட்ட பிட்கொயின் பற்றி அறிமுகமில்லாதவர்களிற்காக ஒரு சிறு விளக்கத்தை முதலில் பார்ப்போம்.
பிட்கொயின் (Bitcoin):
பிட்கொயின் என்பது டிஜிட்டல் நாணயத்தின் ஒரு அலகாகும் (A unit of digital currency).

**இது ஒரு சூதாட்டமோ என்ற சந்தேகமே வலுவாக இருக்கிறது**

இதற்கென ஒரு பௌதீக வடிவம் இல்லை. இது கணனிக்குறியீட்டுத் தொடரிலேயே பேணப்பட்டுவருகின்றது. Satoshi Nakamoto என்பவரினால் (இவர் இன்னமும் முழுமையாக அடையாளங்காணப்படவில்லை) 2009 தை மாதத்தில் பிட்கொயின் வெளியிடப்பட்டது. இந்த பிட்கொயினை இணையத்தில் (Blifinex, Coinbase , etc) வாங்கவும் விற்கவும் முடியும்.

இந்த பிட்கொயினை சாதாரண கோப்பி குடிப்பதற்கு முதல் விடுமுறை கால முன்பதிவு இணையத்தளங்களில் செய்வதற்குவரை பயன்படுத்தலாம். இவ்வாறான செலவீனங்களை மேற்கொள்வதனைக் காட்டிலும் முதலீட்டு நோக்கத்தில் இந்த நாணயத்தை வாங்குவோரே அதிகம்.
பிட்கொயின் முதலீடுகள் பாதுகாப்பானவையா? இந்தக் கேள்விதான் இன்றைய வணிக உலகின் முக்கிய கேள்வியாக எழுப்பப்படுகிறது. இக்கேள்விக்கான பதிலைத் தேடுவதற்கு முன்னர், இக் கேள்வியினையே சரி பார்க்கவேண்டியுள்ளது. அதாவது பிட்கொயினை ஒரு முதலீடாகக் கொள்ளலாமா என ஆய்வு செய்யவேண்டியுள்ளது. என்னைப் பொறுத்தவரையில் அது ஒரு சூதாட்டமேயன்றி, முதலீடல்ல. ஆரம்ப அறிமுகம் முதலே பிட்கொயின் நடைமுறைகளில் ஒரு வெளிப்படைத்தன்மையோ அல்லது பொறுப்புக்கூறும் தன்மையோ காணப்படவில்லை. அதன் ஏற்றம் எவ்வளவு சடுதியானதோ அதன் இறக்கமும் அவ்வாறேயிருக்கும் என பல பொருளியிலாளர்களால் எதிர்வு கூறப்படுகிறது. மேலும் இந்த பிட்கொயின்களை சேமித்துவைக்கும் இணைய பணப்பையும் (online wallets) பாதுகாப்பற்றது, ஏனெனில் இதனை இணைய ஊடுருவலாளர்கள் (hackers) ஊடுருவி திருடிக்கொள்ளும் ஆபத்து எப்போதும் உண்டு. இதே ஆபத்து இணைய வங்கி நடைமுறைகளிலும் (online banking) உண்டாயினும், அங்கு வங்கிகளாலும் அரசாலும் வழங்கப்படும் குறிப்பிடத்தக்களவான பாதுகாப்பு உத்தரவாதங்கள் எதுவும் இங்கில்லை.



மேலும் இதன் ஆதரவாளர்கள் இங்கு ஏற்படும் ஏற்ற இறக்கங்களை பங்குச் சந்தையுடன் ஒப்பிடுகிறார்கள். அந்த ஒப்பீடும் தவறு, ஏனெனில் பங்குகளின் தளம்பல்களை ஓரளவிற்குப் பொருளியல், அரசியல் அறிவுடையோரால் எதிர்வுகூற முடியுமாகக் காணப்பட, மறுபுறத்தே பிட்கொயின் தளம்பல்களை யாராலும் எதிர்வுகூற முடியாதநிலையே காணப்படுகிறது.

இந்த பிட்கொயின் நடைமுறை சற்றுச் சிக்கலானதாயினும் நாம் எளிமையாக விளங்கிக்கொள்ள இதனை நாம் வளர்முக நாடுகளில் காணப்படும் வைப்புக்களிற்கு அதிக வட்டி வழங்கும் தனியார் நிதிக்கம்பனிகளுடன்(finance companies) ஒப்பிட்டு விளங்கிக்கொள்ளலாம். இந்த நிதிக்கம்பனிகள் வங்கிகளைவிட வைப்புக்களிற்கு அதிகவட்டி வழங்குவதால் திடீரென வாடிக்கையாளர்கள் படையெடுப்பர். வைப்புக்கள் அதிகரிக்க அதிகரிக்க வட்டியும் அதிகமாக வழங்கப்படும்.

**வி.இ.குகநாதன்**

வைப்புக்களின் வருகை ஒரு கட்டத்தில் குறைய ஆரம்பிக்க இந்த நிதிநிறுவனங்கள் பிரச்சனைகளைச் சந்திக்கும். வளர்ந்ததை விட பல மடங்கு வேகத்தில் சரிவடையும். இதே நிலமைதான் இந்த பிட்கொயின்களிற்கும் ஏற்படப்போகின்றது.

இந்த பிட்கொயின்களின் பெறுமதியானது எப்போதுமே இன்னொருவரின் வாங்கும் விருப்பத்தில் மட்டுமே தங்கியுள்ளதுடன் இதன் பெறுமதியினை உறுதிப்படுத்துவோரும் யாருமில்லை. ஒரு கட்டத்தில் இதனை வாங்குவோரின் விருப்பம் குறைவடையத்தொடங்கும்போது,இதன் சரிவும் ஆரம்பிக்கும்.

இதிலுள்ள மற்றொரு குறைபாடு யாதெனில் மற்றைய முதலீடுகளில் காணப்படும் வருமானவழிமுறைகள் எதுவுமே இதிலில்லை. அதாவது பங்குமுதலீட்டில் கிடைக்கும் பங்கிலாபம், வீட்டுமனைத்துறை (Real estate) யிலுள்ள வாடகை போன்ற வருமான மூலங்கள் எதுவுமே இங்கில்லை. இந்த பிட்கொயினானது பெறுமதி அதிகரிப்பில் மட்டுமே தங்கியிருப்பதுடன், அதன் பெறுமதிக்கு எந்தவித உத்தரவாதமும் காணப்படவில்லை. மேற்கூறிய காரணங்களாலேயே பிட்கொயினானது ஒரு முதலீடாகவல்லாமல் சூதாட்டமுறையாகவே கருதப்படவேண்டியுள்ளது.

இதுவரை பிட்கொயின் நடைமுறையால் பொதுமக்களிற்கு ஏற்படும் பாதிப்புக்களைப் பார்த்தோம். அரசுகளைப் பொறுத்தவரையில் பிட்கொயினானது ஒரு கறுப்புப்பண முதலீடாகவும், சட்டவிரோத மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளிற்கான பணப்பரிமாற்ற வழியாகவும் இலகுவாக பயன்பட நிறைய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இவ்வளவு ஆபத்துக்கள் காணப்படுகின்றபோதும் இந்த பிட்கொயினை அரசுகள் கண்டுகொள்ளாமலிருப்பதற்கான அரசியல் நுட்பமாக ஆராயப்படவேண்டியுள்ளது.

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 14

இயக்கத்தில் அதிகமாக என்ன பேசினாலும், அது நல்லதில்ல. பொதுவா அதிகம் பேசுறவைய பொறுப்பாளர்களுக்கு பிடிக்காது. அதில அறிவு பூர்வமா பேசிட்டா துலைஞ்சிது. மட்டக்களப்பிலயே போராளியள் இல்லாத அளவுக்கு இஞ்ச நிறைஞ்சிருந்தினம். பயிற்சி முகாமும் இஞ்சயே இருந்துது. சண்டைக்களமும் இஞ்சதான். ஆனா ஒரு வேலை இஞ்ச பள்ளிக்கூடமே போகாத போராளியளுக்கு எழுதப்படிக்க பழக்கவெண்டே சின்ன பள்ளிக்கூடம் ஒன்று கட்டி வைச்சிருக்கினம்.

ஆம்பிளைப்போராளியளுக்கு முள்ளியவளையில ஒண்டும், பொம்பிளைப் பிள்ளையளுக்கு பூதன்வயலுக்க ஒண்டும் இருந்தது. இஞ்ச படிப்பிக்க ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் வந்து போச்சினம். முழு நேரப்பாடசாலை இல்லை. மாலை நேர வகுப்புகள்தான். இதோட பாண்ட் வாத்தியக்குழு ஒண்டும் ஒரு ரீச்சர கொணந்து வந்து பழக்கிச்சினம். இனி நாடகம் வில்லுப்பாட்டுகள் எண்டு நான் பழக்கப்போனன்.

புலியளுக்கு ஆதரவான சனமும் கொஞ்சம் இடம்பெயர்ந்து இஞ்சயே வந்திட்டுதுகள். அந்தச்சனத்துக்கான குடியிருப்புகள் சில பிரதேசங்களில தனியாத்தான் அமைச்சினம். இந்த ஊர்மக்களோட அவை கலந்து குடியிருக்கேல்ல. அதேன் எண்டது எனக்கு விளங்கேல்ல.

ஒவ்வொரு இடப்பெயர்விலயும் நான் அவதானிச்ச விசயம். யாழ்ப்பாண வன்னி மன்னார் இடப்பெயர்வுகளிலயும்தான். ரீச்சர்மார் தங்களப்போல ரீச்சர்மாற்ற வீடுகளுக்கதான் போவினம், சீவல் தொழிலாளருகள் பாத்தா, அவையட சனம் இருக்கிற குறிச்சிக்கதான் போவினம். தோட்டஞ்செய்யிறவை இன்னொரு தோட்டஞ் செய்யக்கூடிய இடத்துக்க போவினம். அதே போல இந்த மட்டக்களப்பு சனமும் உடையார்கட்டுக்க புதுக்காணியளுக்கயும், அதிலயும் மாவீரர் குடும்பங்களுக்கு ஒரு வீடு கட்டிக்கொடுத்த கொலனித்திட்டமும் வேற ஒருபக்கமா தனியாத்தான் அமைஞ்சிருந்திது.

முன்ன பின்ன தெரியாத சனத்துக்க முன்னபின்ன தெரியாத ஊருக்கயும் தங்கட சாதிய தாங்களாவே பிரபலிக்கமாக்கிருவினம் பிறகு தண்ணியள்ள விடுறாங்களில்ல, தள்ளி வைக்கிறாங்கள் எண்டு ஊருப்பட்ட பிராது. நான் சொல்ல வந்ததை சொல்லிறன். எதில விட்டன்...ஙா...

மட்டக்களப்பு தளபதிமார் எல்லாத்தையும் பிள்ளையளுக்குப் பழக்கிப்போட வெகுவாப் பாடுபட்டினம். எண்டாலும் இவையளப்பற்றிய தகவலுகளோ மாவீரருகளின்ர செயற்பாடுகளோ எங்கட இயக்கப்பேப்பர், புத்தகங்களில வாறது என்னவோ குறைவுதான்.

பின்ன அவயளும் தனிய ஒரு புத்தகம் வெளியிட முயற்சி செய்திச்சினம். "போர்க்களம்" எண்டு நினைக்கிறன். அதில பெரும்பாலும் களமுனைச் செய்திகள் ஆயுதங்கள் பற்றியும், படையணிகளின் செயற்பாடுகள் எண்டும் வந்திச்சு. பெரும்பாலும் எழுத்தாளர்கள் மட்டு அம்பாறைப் போராளியளே. அதையெல்லாம் செய்தவையள்ள ஏஞ்சல் எண்டொரு பிள்ளை முக்கியமா இருந்தாள். போராளியள தேடிப்போய் அவயளிட்ட ஆக்ககங்களை வாங்கி, அதை பதிப்பிக்கிறதில நல்ல கெட்டித்தனமான பிள்ளை. இந்த மட்டு அம்பாறையால தொகையாப் போராளியள் வரக்க முதலே இஞ்ச ஒரு அளவுக்கு மட்டு அம்பாறைப் போராளியள் நிண்டவைதான். அவையள்ள இவளும் ஒருத்தி. கொஞ்சக்காலம் இஞ்ச உள்ள ஊடகப்பகுதியள்ள வேலை செய்த பழக்கம் அவளுக்கிருந்தது.

அப்ப இப்ப யோசிச்சுப்பாருங்க, பள்ளிக்கூடம் தனிய பயிற்சியள் தனிய, பத்திரிகை தனிய, குடியிருப்புகள் தனிய, முகாம்கள் தனிய எழுச்சிப்பாடல்கள்தனிய, ஏன் இவைக்கெண்டு தனிய இசைக்குழுவே இருந்தது. முதல் ஊரில பாடும்மீன் இசைக்குழுவா இருந்தது. இஞ்ச வந்து தமிழீழ இசைக்குழுவா மாறிட்டுது.

**களத்தில மட்டக்களப்பு டீம் இறங்கினா சணலடிதான் எண்டதை அவை பல களங்களில நிரூபிச்சிருக்கினம்**

### தமிழ்க்கவி

இவைக்கு பாட்டெழுதிறதும் இவைதான். இதில ஆர் ஏசினாலும் பேசினாலும் ஒரு உண்மைய சொல்லத்தான் வேணும்.

இஞ்சால வெளியால வாற ஒலிநாடாக்களிலயோ பிந்தி வந்த சீடியளிலயோ புதுவையண்ணற்ற பாட்டுக்குத்தான் முதலிடம், அவற்றை எல்லாம்போட்டு இடமிருந்தாத்தான் மற்றவையட பாட்டப்போடலாம். பிறகு பிறகு மகளிர் அணி தனிய, என்ரீற்றி தனிய, புலிகளின் குரல் தனிய, எண்டு பாட்டடிக்கயுக்கதான் அவையளும் தங்கட தங்கட பாட்டுகளப்போட வசதியாப்போச்சுது. மற்ற மற்ற பாடகருக்கும் இசையமைப்பாளருகளுக்கும் வாய்ப்புகள் வந்துது.

**’எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்’**

மட்டக்களப்பு தமிழீழ இசைக்குழு நல்ல திறமான பாட்டுக்களை வெளியிட்டுது. அதோட விசேட நாளுகள்ள மேடைநிகழ்ச்சியளிலயும் சக்கைப்போடு போட்டுது. தமிழீழ இசைக்குழுவுக்கு கடலலைபோல திரண்ட கூட்டம் எண்டா வரலாறுகாணாத கூட்டம். இந்த மண்ணில பிறந்த, திறமையிருந்தும் இஞ்ச உள்ளவையள் கழிச்சு வைச்சிருந்த பாடகியளும் பாடகர்மாரும் தமிழீழ இசைக்குழுவில சேர்ந்து பாட முடிஞ்சிது. உலகத்துக்கு அப்பிடி அறிமுகமான பாட்டுக்காரர் சமாதான காலத்துக்க வெளிநாடெல்லாம் போய்ப்பாடினவைதான். களத்தில மட்டக்களப்பு டீம் இறங்கினா சணலடிதான் எண்டதை அவை பல களங்களில நிரூபிச்சிருக்கினம். அவையட கோசமும் என்னண்டா, "எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்" எண்டதுதான். அதைப்பத்தி நாங்கள் விரிவாப்பாக்க வேணும்.

பின்ன மட்டுக்களப்பால வந்தவைய சந்தைக்க கடைத்தெருவில கண்டாத்தான். மற்றப்படி வேற வேற துறையள்ள பயிற்சி எடுக்கவெண்டு சில போராளியள் கலந்திருந்தாலும், அவயளின்ர குடும்பங்கள் பெரும்பாலும் மட்டக்களப்பிலயோ வேற இடங்களிலயோ இருக்கும். அவையள் அங்க உள்ள பொறுப்பாளர்களால பிள்ளையளப்பாக்க வன்னிக்கு அனுப்பினா வருவினம். வந்தா ரெண்டு நாளோ ஒரு கிழமையோ, சிலநேரம் களத்திலயெண்டா... ஒருமாதம் நிண்டெண்டாலும் பாத்துத்தானே போகவேணும்.

வாற பெற்றாரை தங்க வைச்சு சாப்பாடு தண்ணிவெந்நீ குடுத்து பாக்க ஒரு இடம், பெற்றார் இல்லம் ஒண்டு முள்ளியவளைக்கு பின்காட்டோரம் அதை நாவக்காடெண்டு சொல்லுறது. அங்க இருந்துது. அதுக்கு பொறுப்பாளரா இருந்து, வாற பெற்றோரரை ஒரு குறையுமில்லாம பாத்தபெடியனுக்கு என்ன ஒரு இருவது வயசிருக்கும் எண்டு நினைக்கிறன். ரெண்டு காலும் இல்லை. அழகெண்டா அழகு அவ்வளவு வடிவான பெடியன்.

(தொடரும்)

## கொக்குவில் வீரமாகாளி அம்மன் சடங்கு

மட்டு நகருக்கு வட திசையில் அமைந்திருக்கும் கொக்குவில் கிராமத்தின் ஆலை விருட்ச நிழலிலே எழுந்தருளி, அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் மட்டக்களப்பு கொக்குவில் அருள் மிகு ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய வருடாந்த மகா உற்சவ விழா நிகழும் விளம்பி வருடம் 21.06.2018 வியாழக்கிழமை வயிரவர் சடங்குடன் ஆரம்பமாகி ஏழு தினங்கள் தொடர் சடங்குகள் நடைபெற்று 28.06.2018 தீ மிதிப்பு மற்றும் ஏனைய வைபவங்களோடு இனிது நிறைவடையும்.

### சடங்கு நிகழ்வுகள்

21.06.2018 1ம் நாள் வைரவர் சடங்கு திருக்கதவு திறத்தல்
22.06.2018 2ம் நாள் பாற்குட பவனியும் அம்மன் எழுந்திருப்பும்
23.06.2018 3ம் நாள் அம்மன் ஊர்வலச் சடங்கு
24.06.2018 4ம் நாள் அலங்கார சடங்கு
25.06.2018 5ம் நாள் கும்பச் சடங்கு
26.06.2018 6ம் நாள் கல்யாணச் சடங்கு
27.06.2018 7ம் நாள் பள்ளயச் சடங்கு



## கிழக்கில் மட்டக்களப்பு மாவட்ட கடற்கரை கபடி அணி தேசியமட்டத்திற்கு தெரிவு

கிழக்குமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட 2018ம் ஆண்டிற்கான மாகாணமட்ட கடற்கரை கபடி விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் காரைதீவு கடற்கரையில் சிறப்பாக இடம்பெற்றது.

இதில் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தி ஆண் பெண் அணியினர் கலந்து கொண்டனர்.





**காரைதீவு நிருபர் சகா**

இதில் மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த ஆண் மற்றும் பெண் கடற்கரை கபடி அணியினர் இறுதி போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.



# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## மருதூர்க்கனி (1942 – 2004) நினைவுகள்

### முருகபூபதி – அவுஸ்திரேலியா

1960களில் ஈழத்தில் அலையடித்த கவித்துவ வெள்ளத்தின் கிழக்கிலங்கை ஊற்றுக்களில் மருதூர்க்கனியும் ஒருவர். "மருதூர்க்கனியின் கவித்துவம் கற்பனைகளின் இரசனைக்கூடாரமாக அமையவில்லை. அது சமத்துவமான ஒரு சமூகத்தேடலுக்கான ஒரு ஆயுதமாக அமைந்தது" என்று சொல்கிறார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

"முற்போக்கு இலக்கிய சித்தாந்தத்தின் இலட்சியவாதத்தினால் ஈர்க்கப்பட்ட மருதூர்க்கனி தனது பிரதேசத்தில் தனது தெரிவித்த கருத்துக்களைத்தான் வாசகர்களிடம் பகிர்ந்துகொண்டேன்.

மருதூர்க்கனி தொழில் ரீதியாக ஒரு பாடசாலை ஆசிரியர். அத்துடன் கவிஞர். நாடகாசிரியர். சிறுகதை எழுத்தாளர், சமூக செயற்பாட்டாளர், அரசியல் இயக்கம் ஒன்றின் ஸ்தாபகத்தலைவர். இவ்வாறு பன்முகத்தோற்றம் மிக்க ஒருவர் இன்று எம்மத்தியில் இல்லை. எனினும் அவரது நினைவுகள் எம்முடன் இணைந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

அவரது இலக்கிய வாரிசுகள் இன்றும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அவரது குடும்ப வாரிசுகள் இன்றும் அவரது நினைவாக அவரது படைப்புகளை அச்சிலே பதிவுசெய்துகொண்டிருக்கிறார்கள். இந்தப்பலனை வரம் என்றும் சொல்லலாம். அவருடைய அன்புத்துணைவியாரும் பிள்ளைகளும் மருமக்களும் மருதூர்க்கனிக்கு கிட்டிய பெரும் பேறு.

மருதூர்க்கனி ஒரு மரதன் ஓட்டத்தை கிழக்கிலங்கையில் மருதமுனையில் அழகிய பால் வெண்ணிலவு சுடரும் கடற்கரையோரக்கிராமத்தில் தொடக்கிவைத்தார். அந்த மரதன் ஓட்டம் இந்தக் கடல் சூழ்ந்த கண்டம் அவுஸ்திரேலியா வரையில் வந்து தொடர்ந்தது. அந்தப்பாதையில் ஒரு மைல்கல்லில் நானும் இங்கே நின்றேன் என்பது எனக்குப்பெருமிதம்தான்.

ஆம்... மருதூர்க்கனியின் மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவை அவருடைய துணைவியாரும் குடும்ப வாரிசுகளும் மெல்பனில் ஒழுங்குசெய்தபொழுது அதற்கு தலைமைதாங்க என்னை அழைத்தார்கள்.

1983 ஆம் ஆண்டு தொடக்கத்தில் பாரதி நூற்றாண்டு விழா இலங்கையில் நாடளாவிய ரீதியில் நடந்தபொழுது எமது முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் அழைப்பை ஏற்று தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த மூத்த இலக்கிய ஆளுமை சிதம்பர ரகுநாதனுடன் கிழக்கிலங்கை பாரதி விழாக்களுக்கு சென்றிருந்தபொழுது எம்மை தமது மருதமுனை இல்லத்தில் தங்கவைத்து உபசரித்தவர் நண்பர் மருதூர்க்கனி. அப்பொழுது குழந்தையாக நான் கண்ட அவரது மகள் வஜ்னா தற்பொழுது அவுஸ்திரேலியா மெல்பனில் மருத்துவராக பணியாற்றுகிறார். அவரும் அவரது கணவர் ர.ீ. பீக்கும் இலக்கிய ஆர்வலர்கள். பல சமூகப்பணிகளில் ஈடுபடுபவர்கள்.

மருதூர்க்கனி இலங்கையின் மூத்த கவிஞர். எமக்கெல்லாம் மூத்தவர்.





மருதமுனைக்கிராமத்தில் தான் கண்ட ஏழை மக்களை நெசவாளிகளை - மீனவர்களை - பாய்பின்னிப்பிழைத்தாலும் சுயகௌரவத்துடன் வாழ்கின்ற பெண்களை தனது கதைகள் ஊடாக இனம் காட்டுகிறார். அவர்கள் பக்கம் நின்று குரல் கொடுக்கிறார்" என்று சொல்கிறார் பேராசிரியை திருமதி சித்திரலேகா மௌனகுரு.

"இளம் பருவத்திலிருந்தே நாடகப்பிரியர் மருதூர்க்கனி. மனித இயக்கத்தை அவரது கண்கள் நாடகமாகக் கண்டன. மனிதர்களின் குணாதிசயங்கள் - ஆளுமை - துலங்கித்தெரியும் குணப்பாங்கு - என்பனவற்றை இதனால் வெகு நுணுக்கமாக அவர் கவனிக்கலானார்" என்று எழுத்தாளர் செ. யோகநாதன் தெரிவித்துள்ளார்.


"மருதூர்க்கனி - காணும்தோறும் பேசும்தோறும் உள்நெக்க நின்று உருகும் மனிதனாக இலக்கிய உலகில் தன்னை இனங்காட்டி வந்தவர். இவரை அரசியலிருந்து பிரித்து கவிஞனாக மட்டும் காண முடியாது. இவர் ஒரு தேசிய அரசியற் கலாசாரத்தின் மூலவிசை" என்கிறார் வீரகேசரி - தினக்குரல் நாளேடுகளின் முன்னாள் பிரதம ஆசிரியர் ஆ.சிவநேசச்செல்வன்.

"புலவர்நாயகம் மருதூர்க்கனியின் கவித்துவத்தை உரைத்துப்பார்க்க எந்த ஓர் உரைகல்லும் தேவையில்லை. அவர் எப்போதோ அங்கீகரிக்கப்பட்டுவிட்டார். அவரே ஒரு கவிதைதான்" என்று எம். எச். எம். அஷ்ரப் சொல்லியிருக்கிறார்.

"மகா கவிகளான இக்பாலும் பாரதியும் காட்டிய பாதையிலே பயணம் மேற்கொள்ளவிழையும் மருதூர்க்கனி மானிட மேம்பாட்டுக்காகத் தன்னுடைய எழுத்தாற்றல் பயன்படும் என்ற வேட்கை மீதூரப்பெற்றவராகவும் காணப்படுகிறார்" - என்று பேராசிரியர் எஸ். தில்லைநாதன் பதிவு செய்கிறார்.

முஸ்லிம்கள் மத்தியில் முன் என்றும் இல்லாத அளவு இனத்துவ உணர்வு மேலோங்கி எழுந்தவேளையில் அதன் ஸ்தாபன வெளிப்பாடாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உதயமாகி இக்கட்சியின் தொடக்க காலத்திலிருந்தே அதனுடன் இணைந்து செயற்பட்டு - அதன் மூத்த துணைத்தலைவரானவர் மருதூர்க்கனி என்று குறிப்பிடுகிறார் பேராசிரியர் எம்.ஏ.நு.ஃ.மான்.

இங்கே நான் மருதூர்க்கனி பற்றி முக்கியமான ஏழு ஆளுமைகள்





ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பங்கேற்றவர்கள் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் மற்றும் மலையகத்தில் இருந்தும் ஆரோக்கியமாக பங்களித்தார்கள். கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு - ஆரையம்பதி - நீலாவணை - குருக்கள் மடம் - ஒலுவில் - களுவாஞ்சிக்குடி - காத்தான்குடி - ஓட்டமாவடி - கல்முனை - மருதமுனை - பாண்டிருப்பு முதலான பிரதேசங்களில் படைப்பாளிகளில் பெரும்பாலானவர்கள் கவிஞர்களாகத்தான் விளங்கினார்கள்.

மருதமுனையில் மருதூர்க்கொத்தன் - மருதூர்க்கனி உட்பட பல இலக்கியவாதிகளை சந்தித்து உரையாடும் பாக்கியம் 1983 இல் கிட்டியது.

அன்றைய கிழக்கிலங்கைப் பயணத்தில் நானும் எனக்கு இலக்கிய உலகில் ஒரு தந்தையாக விளங்கிய இளங்கீரன் மற்றும் என்னைப்பெற்ற தந்தை வழி உறவினரான தமிழகத்தின் மூத்த எழுத்தாளரும் பிரபல பாரதி இயல் ஆய்வாளருமான சிதம்பர ரகுநாதனும் கொழும்பிலிருந்து ஒருநாள் இரவு ரயிலில் கிழக்கு மாகாணத்துக்கு - மட்டக்களப்புக்கு பயணமானோம். மறுநாள் காலை மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் மருதூர்க்கனியும் மருதூர்க்கொத்தனும் பூமாலைகள் சகிதம் வந்து அங்கே காத்து நிற்கின்றனர்.

யாரோ பெரிய அரசியல் பிரமுகர் ரயிலில் வருகிறாராக்கும் என்ற ஆவலுடன் அங்கே மக்கள் குழுமியிருந்தார்கள். வந்தது இலக்கியவாதிகள்தான் என்பது அந்த மக்களுக்கு சற்று ஏமாற்றம்தான்.

இதனை நான் ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால் - மருதூர்க்கனியும் மருதூர்க்கொத்தனும் எவ்வளவு தூரம் இலக்கியத்தையும் இலக்கியவாதிகளையும் நேசித்தார்கள் என்பதை சுட்டிக்காண்பிப்பதற்காகத்தான்.

தமிழகத்திலிருந்து வருகை தந்த பேராசிரியர் ராமகிருஷ்ணன் -ராஜம் கிருஷ்ணன் - சிதம்பர ரகுநாதன் ஆகியோர் இலங்கையில் பல பாகங்களிலும் நடந்த பாரதி நூற்றாண்டு விழாக்களில் கலந்து கொண்டார்கள்.

நான் - இளங்கீரன் மற்றும் சிதம்பர ரகுநாதனுடன் கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு - அட்டாளைச்சேனை - கல்முனை நிகழ்ச்சிகளுக்கு சென்றேன். கிழக்கில் மருதூர்க்கனியும் மருதூர்க்கொத்தனும் அன்புமணியும்தான் நிகழ்ச்சிகளை பொறுப்பேற்று முன்னின்று நடத்தியவர்கள். இதுபற்றி ஏற்கனவே பல பத்திகளில் பதிவுசெய்துள்ளேன். மருதூர்க்கனியின் இல்லத்திற்கு அருகேயிருந்த கடற்கரையில் அந்த நிலா முற்றத்தில் இயற்கையின் விருந்தைப்பருகினோம்.

தொடர்பாடலின் சிறப்பு - வலிமை - ஆரோக்கியம் என்பன அன்று அவ்வாறு இருந்தமையினால்தான் நீண்ட இடைவெளியின் பின்னர் மெல்பனில் மருதூர்க்கனியின் நூல்களின் வெளியீட்டில் கலந்துகொள்வதற்கு சாத்தியமானது என்றும் கருதுகின்றேன். இலக்கியவாதிகளிடத்திலான தொடர்பாடல் காலம் கடந்தும் நீடிப்பதும் அபூர்வம்தான். பெரும்பாலும் இலக்கியத்தொடர்பயணத்தில் சிலர் இறங்கிவிடுவார்கள். சிலர் கழற்றிவிடப்பட்டுவிடுவார்கள்.

மருதூர்க்கனியின் மண்பூனைகளும் எலி பிடிக்கும் சிறுகதைத்தொகுதியும் அந்த மழை நாட்களுக்காக கவிதைத்தொகுதியும் ஏற்கனவே 2002 இல் அவரது அன்புத்துணைவியார் திருமதி கமிலா ஹனிபா அவர்களினால் இலங்கையில் வெளியிடப்பட்டிருக்கிறது. மேலும் மற்றுமொரு மருதூர்க்கனியின் நூல் 71 கவிதைகள் தொகுப்பு - மருதூர்க்கனி கவிதைகள் - சந்தனப்பெட்டகமும் கிலாபத் கப்பலும் என்ற குறுங்காவியங்கள் தொகுப்பும் - என்னை நீங்கள் மன்னிக்கவேண்டும் என்ற மற்றுமொரு குறுங்காவியத் தொகுப்பும் ( நான்கு நூல்கள்) அன்று வெளியிடப்பட்டன.

ஒரு அரசியல் இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும் அதன் ஊடாக தான் சார்ந்துள்ள சமூகத்திற்கு நன்மைகள் செய்வதற்காகவும் இணைந்த மருதூர்க்கனிக்கு அவ்வியக்கத்தில் கசப்பான அனுபவங்கள் ஏற்படும்பொழுது இயக்கத்தை கட்டி வளர்ப்பதிலும் பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துக்கொள்வதிலும் தீவிரமான கரிசனை இருக்கும்.

மருதூர்க்கனி தனது அரசியல் சகாக்களை அரவணைத்துச் செல்வதற்கு என்னை நீங்கள் மன்னிக்கவேண்டும் என்று சொல்லிச்சொல்லியே இயக்கத்தை தூய்மைப்படுத்துவதற்கு முயன்றார். இன்று இலங்கையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எத்தனை பிரிவுகளுடன் - பிளவுகளுடன் காட்சி அளிக்கிறது. இதற்காகவா அஷ்ர.ஃப் மற்றும் மருதூர்க்கனி அன்று அப்படிப்பாடுபட்டு உழைத்தார்கள்....?

இந்தக்கண்கொள்ளாக்காட்சிகளைக் காணாமலேயே அஷ்ரப்பும் மருதூர்க்கனியும் கண்களை மூடி முத்தி நிலை எய்திவிட்டார்கள். பாக்கியசாலிகள்?

( பயணங்கள் தொடரும்)

# மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்

# பிரிவினால் வாடல்



கணவன்-மனைவி, காதலன்-காதலி என்பவர்கள் ஏதேதோ காரணங்களால் சில வேளைகளில் பிரிந்திருக்கவேண்டி ஏற்பட்டுவிடுகிறது. அந்த நேரங்களில் தங்கள் பிரிவுத் துயரங்களை அவர்கள் வெளியிட்டபோது எழுந்த பாடல்கள் மிகவும் அருமையானவை. கவிநயம் மிக்கவை. இலக்கியச் செறிவு நிறைந்தவை. அத்தகைய பாடல்கள் சிலவற்றை இப்பகுதியில் காணலாம்.

காதலர்களுக்கிடையே ஏற்படுகின்ற பிரிவு இருவகையானது. கருத்தொருமித்த காதலர்கள் புறக்காரணிகளால் பிரிந்திருக்க நேரிடுவது ஒருவகை. இது துன்பத்திலும் இன்பத்தைத் தருவது. பழைய நிகழ்வுகளை நினைப்பதிலும், புதிய கனவுகளில் மிதப்பதிலும் அந்தப் பிரிவுக் காலத்தில் ஒருவகை இன்ப வேதனை இதயத்தினுள் பரவிக்கொண்டேயிருக்கும்.

அடுத்தவகையான பிரிவு, காதல் முறிந்துவிட்ட, அல்லது கருத்து வேறுபட்ட காதலர்களுக்கிடையேயானது. நிரந்தரமாகக்கூடியது. வேதனையைக் கொடுப்பது.

கடலே இரையாதே
கற்கிணறே பொங்காதே
நிலவே எறியாதே - என்ர
நீலவண்டார் வருமளவும்

இந்தப் பாடல் ஒரு பெண் தனது கணவன் வீடு வந்து சேரும் வரை இயற்கையின் இன்பம் தரக்கூடிய நிகழ்வுகள்கூட நடைபெறுவதை விரும்பாதவளாய் இயற்கையிடம் வேண்டுகோள் விடுப்பதுபோல உள்ளது. அதனால்தான், அவன் வீடுவந்து சேரும்வரை, வாடுகின்ற அவள் மனதில், இன்பத்தை நாடுகின்ற அந்த நினைவுகளை வெறுக்கின்றாள். அத்தோடு மட்டும் நின்றாளா? ஏன் என்று காரணத்தை விளக்கி அவள் மேலும் பாடுகின்றாள் இப்படி-

இரவிலே வீசும்
இளங்காற்றும் சந்திரனும்
அரவாத வாள்போல- இப்போ,
அறுக்குதே என் மனசை

தனது கணவன் தன்னருகே இருக்கும்போது எல்லையில்லா இன்பத்தைத் தந்த அந்த தென்றலும் நிலவும் இப்போது வாளினாலே அறுப்பதுபோலத் தன் மனதை அறுக்கின்றனவே. கூரிய வாள் என்றால் ஒரே தடவையில் அறுத்துவிடும். வலி குறைவாக இருக்கும். கூர்மையற்ற, தீட்டப்படாத வாள் என்றால் சித்திரவதை அல்லவா செய்யும்? அதுபோலத்தான் இப்போது அந்தத் தென்றலும், நிலவும் அவளைச் சித்திரவதை செய்கின்றன என்று கூறுகின்றாள்.

வெளியூர் சென்றவன் வருவதற்குத் தாமதமாவதால் அவளால் தாங்கமுடியவில்லை. வருடத்தில் ஒருமுறைதான் நெற்பயிர் செய்யப்படுகின்ற பூமியிலே, மழையை நம்பி வேளாண்மை செய்யும் விவசாயி, எப்போது மழைவருமோ என்றெண்ணி வானம் பார்த்துக் காத்திருப்பதைப்போல, தனது இரண்டு கண்களும் சோர்ந்துவிடுமளவிற்கு கணவனின் வரவுக்காகக் காத்திருக்கும் அவள் தன் உள்ளக்கிடக்கையைத் தோழியிடம் பாடலாக வெளிப்படுத்துகிறாள்-

ஒருபோக வேளாண்மைக்கு
உயர்வானைப் பார்ப்பதுபோல்
இருகண்ணும் சோர எந்தன்,
இராசாவைப் பார்த்திருக்கேன்

நீரின்றிக்காய்ந்து கிடக்கும் நிலம், மழை வந்தால் நனைந்து வளம் பெற்றுப் பயிர் செழிக்கும். அது போல அவன் வந்தால் அவள் மனம் குளிர்ந்து இன்பம் கொழிக்கும். எவ்வளவு அருமையான உவமானத்தோடு இந்தப்பாடல் அமைந்திருக்கிறது! மேலும் சொல்கிறாள்-

வருவார் வருவாரென்று
வழிபார்த்திருந்து
குறிபார்த்த நெல்லுக்
குடமும் பயிராச்சே

ஆம். குறிபார்ப்பதற்காக வீட்டினுள்ளே வைத்திருந்த தண்ணீர் நிரம்பிய குடத்தின் அடியிலே ஆதாரமாகப் பரப்பிப் போடப்பட்டிருந்த நெல்மணிகள் முளைத்துப் பயிராக வளர்ந்தும் விட்டன. ஆனால் அவனோ இன்னும் வரவில்லை.

வெள்ளி விடிவெள்ளி
வெள்ளாப்பில் மறையும் மட்டும்
சொன்ன கதையெல்லாம்
சொர்ப்பனமாய் மறந்தாரோ

இவ்வாறு அவள் கவலையோடு இருக்கும்போது, வீட்டுக் கொல்லைப் புறத்திலேயிருந்து காகம் ஒன்று கரைகிறது. காகம் அப்படிக் எத்தியெத்திக் கரைந்தால், வீட்டுக்கு யாரோ வரப்போகிறார்கள் என்று சொல்வார்கள். அவள் காகத்தைப்பார்த்துக் கேட்கிறாள்.-

காகம் இருந்து நீ
கால்கடுக்க ஏனழுதாய்
மன்னன் வரும் சேதியை நீ
மனங்குளிரச் சொல்லாமல்?

நேற்றும் இந்தக் காகம் இப்படித்தான் கரைந்தது. யாரயாரோவெல்லாம் வந்தார்கள். தன் கணவன் மட்டும் வரவில்லை. காகத்தின் மீது கோபம் வருகிறது அவளுக்கு. அதைத் துரத்துகிறாள்.

கத்தாதே காகம்
கரையாதே புன்காகம்
எத்தாதே காகம்
எறிஞ்சிடுவேன் கல்லாலே.

காகத்தின் மீது அவளுக்கு இப்படிக் கோபம் வருவதற்குக் வேறொரு காரணமும் இருக்கிறது. நேற்று காகம் கரைந்தவுடன் கணவன் வரப்போகின்றான் என்று அவள் எவ்வளவோ ஆயத்தங்கள் செய்திருந்தாள்.

கோழியொன்றைப் பிடித்து அடைத்து வைத்திருந்தாள். அவன் வந்து அதை உரித்துத் தருவான். பின்னர் அவன் குளிப்பதற்காக தண்ணீர் நிறைத்து வைத்திருந்தாள். அவன் குளித்துவிட்டு வருவதற்கிடையில் உரித்த கோழியைச் சமைத்து முடிக்கவேண்டுமே என்பதற்காக சமையலுக்கான இதர வேலைகளையெல்லாம் செய்து வைத்திருந்தாள். எல்லாம் வீணாகிவிட்டது. அவன் வரவேயில்லை. தன் ஆத்திரத்தைக் காக்கையைத் தவிர வேறு யாரிடம் காட்டமுடியும் ?

கோழி அடைச்சி வைச்சேன்
கொழியரிசி குத்திவைச்சேன்
தாழத் துலாத் தாழ்த்தி
தண்ணீர் நிறைச்சி வைச்சேன்
தேங்காய் துருவி வைச்சேன்
தேவைக்கு அரைச்சி வைச்சேன்
பாங்காய்ச் சமைப்பதற்குப்
பட்ட கஷ்டம் எவ்வளவோ.

இவ்வாறு கணவன்-மனைவியருக்கிடையேயான பிரிவுத்துயரை எடுத்தியம்பும் பாடல்கள் ஏராளமாக உள்ளன.

இனி, காதலர்களுக்கிடையே, மணம்முடிக்காத முறைமச்சான்-மச்சாள் உறவு உள்வர்களுக்கிடையே நிகழ்ந்த பிரிவுகளில் எழுந்த பாடல்களைக் கவனிப்போம்.

மச்சான் வீட்டுக்கு வந்தால் அவள் மனமெல்லாம் பூப்பூக்கும். ஒளிந்து நின்று அவனை ஓரக்கண்ணால் பார்ப்பதிலும், கனிந்த மொழியிலே அவனோடு கதைப்பதிலும் எத்தனை கோடி இன்பம் அவளுக்கு. வீட்டு முற்றத்திலே நின்று தன் சுற்றத்தோடு அவன் கதைத்துக்கொண்டிருக்கும்போது, அவன் கண்ணிலே தான் படவேண்டுமே என்பதற்காக ஏதோ ஒரு சாக்கிலே கிணற்றடிக்குச் செல்வாள், கோழிக் குஞ்சுகளைக் கூவியழைத்துத் தீனி போடுவாள், கழுவிய ஆடைகளைக் காயப் போடுவதுபோல வெளியிலே செல்வாள். அவன் வீட்டுக்கு வந்தபோது இப்படியெல்லாம் செய்யும் வண்ணம் மனதிலே மகிழ்ச்சி கூடியது. வீட்டைவிட்டுச் சென்றபோது சோகத்தில் மனம் வாடியது. அதனால் இப்படிப் பாடியது -

வாறனெண்டு வந்தால் இப்போ
வாசலெல்லாம் தங்க நிறம்
போறனெண்டு போனால் இப்போ
பூப்பூத்து மடிந்த விதம்
இந்தப் பாடல் இப்படியும் வழங்குகிறது-
வந்தாரெண்டா ஓரழகு
வாசலெல்லாம் தங்க நிறம்
போட்டுட்டுப் போனாரெண்டால்
பூப்பூத்து ஓய்ந்ததுபோல்

பெண்களின் முகத்தை நிலவுக்கு ஒப்பிடாத கவிஞர்களே இல்லை என்று சொல்லலாம். ஆனால் நாட்டுப்பாடலிலே ஓர் ஆணின் முகத்தை நிலவுக்கு ஒப்பிடுகிறாள் அவனது முறைப்பெண். அவன் வீதியிலே வரும்போது, வீட்டு வளவைச் சுற்றிவர மறைத்துக் கட்டியிருக்கும் வேலியில் ஏற்பட்ட சிதைவுகளால் வேலி ஆங்காங்கே உயர்ந்தும் தாழ்ந்தும் இருப்பதினாலும், வேலியில் நிற்கும் மரங்களின் இலைகுழைகளினாலும், அவனின் முகம் மறைவதும் தெரிவதுமாக - உயர்வதும் தாழ்வதுமாக இருக்கும். அது, நிலவு மெல்லமெல்ல மேலெழுந்து வருகின்றபோது அவ்வப்போது முகிலில் மறைவதும் வெளியில் தெரிவதுமாக இருக்குமே அதைப்போல அவளுக்கு இருக்கிறது. அந்த ஏக்கம் இப்படிப் பாடலாக வருகிறது-

**சட்டத்தரணி, பாடும் மீன்,**
**சு.ஸ்ரீகந்தராசா**

நெற்றிக்கு நேரே
நிலாக்கிளம்பி வாறதுபோல்
வேலிக்கு மேலால மச்சான்ர,
வெள்ளைமுகம் காண்பதெப்போ ?

சோளம் விதைக்கும்போது அவன் சொல்லிவிட்டுப் போயிருந்தான் அது பயிராக வளர்வதற்கு முன்னர் நான் உன் முன்னால் வந்து நிற்பேன் என்று. ஆனால் சோளம் வளர்ந்து பயிராகியும் விட்டது. அவன் வந்து சேரவேயில்லை. கவலை ஒருபுறமும், கோபம் மறுபுறமும் அவளை வருத்தினாலும் மச்சானைக் குறைசொல்ல மனமில்லாமல் தன் சோகத்தை இப்படிச் சொல்கிறாள்-

சோளன் விதைக்கக்குள்ள
சொல்லிற்றுப் போனதுபோல்
சோளன் பயிராச்சே மச்சான் நீ,
சொன்னகதை பொய்யாச்சே

அவனை வழிமேல் விழி வைத்துப் பார்த்திருந்து அவளது கண்களும் பூத்துப்போயின. விரைவில் வருவேன் என்று சொல்லிப் போனவன் இன்னும் வரவில்லை. அவர் வருவதை நீயும் காணவில்லையா என்று நிலாவிடம் கேட்கிறாள்.

பார்த்த கண்ணும் பூத்துப்
பகலும் ஒரு நிலாவாரே
வார்த்தை சொல்லிப் போன என்ர
வண்டு வரக் காண்கிலையோ


தொடர்ச்சி... (பக்கம் -23 )



# புத்தகங்கள் பற்றி உலகத்தலைவர்களும் அறிஞர்களும் சொன்ன கருத்து

ஒருகோடி கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, *ஒரு நூலகம் கட்டுவேன்* என்று பதிலளித்தாராம் மகாத்மா...

தனிமைத்தீவில் தள்ளப்பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்ட போது புத்தகங்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து விட்டு வருவேன் என்று பதிலளித்தாராம் *ஜவஹர்லால் நேரு*...



என் கல்லறையில் மறக்காமல் எழுதுங்கள் இங்கே ஒரு புத்தகப் புழு உறங்குகிற தென்றாராம் *பெட்ரண்ட் ரஸல்*...

மனிதனின் ஆகப் பெரிய கண்டுபிடிப்பு எது என்று வினவப்பட்டபோது சற்றும் யோசிக்காமல் புத்தகம் என பதிலளித்தார் *ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்*...

வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம் சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றாராம் *நெல்சன் மண்டேலா*...

பிறந்த நாளுக்கு என்ன வேண்டும் என கேட்டபோது புத்தகங்கள் வேண்டும் என சற்றும் தயக்கமின்றி *லெனின்* கூறிட குவிந்த புத்தகங்கள் பல லட்சம்...

ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக் கொள்ளும்போது வரும் முன் பணத்தில் முதல் நூறு டாலருக்கு புத்தகம் வாங்குவாராம் *சார்லிசாப்லின்*...

ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித்தரும் ஆகச் சிறந்த பரிசு ஒரு புத்தகம்தான் என்றார் *வின்ஸ்டன் சர்ச்சில்*...

பயங்கரமான போராட்ட ஆயுதங்கள் எவை என கேட்கப்பட்டபோது புத்தகங்கள்தான் என்றாராம் *மார்டின் லூதர்கிங்*...

தான் தூக்கிலிடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை வாசித்துக்கொண்டே இருந்தாராம் *பகத்சிங்*...
நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து

என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்.
*ஆபிரகாம் லிங்கன்*...

ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள்; அவனே எனது வழிகாட்டி
– *ஜூலியஸ் சீசர்*...

உலக வரைபடத்திலுள்ள மூலைமுடுக்குகளுக்கெல்லாம் போக விரும்புகிறாயா, ஒரு நூலகத்துக்குச் செல்..
– *டெஸ்கார்டஸ்*...

போதும் என்று நொந்துபோய், புதுவாழ்வைத் தேடுகிறீர்களா... ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்கு...
– *இங்கர்சால்*...

சில புத்தகங்களை சுவைப்போம்... சிலவற்றை அப்படியே விழுங்குவோம்... சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம்!
– *பிரான்சிஸ் பேக்கன்*...

புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே!
– *லெனின்*...

உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை!
– *ஆஸ்கார் வைல்ட்*...

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு!
– *சிக்மண்ட் ஃப்ராய்ட்*...

பழங்காலத்திய மகா புருஷர்களை நேரில் தரிசித்து, அவர்களுடன் உரையாட வேண்டுமா? நூலகத்துக்குப் போ...
– *மாசேதுங்*...

வாசிக்கும் பழக்கம் ஓர் மனிதனை முழு மனிதனாக மாற்றிவிடும் உலகில் வாழ்ந்து மறைந்த மாமனிதர்கள் பலரும் நூல்கள் வழியாகத் தான் வாழ்வின் வெளிச்சத்தை நோக்கி பயணித்தனர்.

# அரங்கம் பத்திரிகை பாராட்டு கடிதங்கள்

## கடிதம் –01



க. தருமரெத்தினம்.
மஞ்சந்தொடுவாய்
மட்டக்களப்பு.
கனம் ஐயா!

மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் அரங்கம் கண்டேன். ஆனந்தம் கொண்டேன். கடுகு சிறிது காரம் பெரிது. பத்திரிகை சிறிது பலாபலன் பெரிது. எனக்கு ஒரு குறை. இதுவரை வந்த பத்திரிகைகளில் இரண்டு பத்திரிகை பிரதிகள் மட்டுமே என்னால் பெற முடிந்தது. நான் அரங்கத்தின் இதுவரை வெளிவந்த 11 இதழ்களையும் வாசிக்க விரும்புவதால் அதனைப் பெற என்ன வழி?

தொடர் கட்டுரைகளையும் என்னால் முழுமை பெற வாசிக்க முடியாமை துரதிஷ்டமே. விடுபட்ட பத்திரிகைகளை பெற்றுக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டுமென்பதை தயவு செய்து எனக்கு அறியத்தந்தால் நான் குறிப்பிட்ட இடத்திற்கு நேரடியாக வந்து பெற்றுக்கொள்ள தயாராகவுள்ளேன். பாதுகாக்கப்படவேண்டிய அரிய கட்டுரைகளைக் கொண்ட அரங்கம் கிடைக்க ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

### பதில்

பழைய பத்திரிகை பிரதிகள் கிடைப்பது கடினந்தான். ஆனாலும் உங்களுக்கு அவற்றை கிடைக்கச் செய்கிறோம்.

ஏனைய நேயர்கள் பழைய பத்திரிகைகளை எமது அரங்கத்தின் இணைய தளத்தில் மின்னிதழாகப் பெற்றுக்கொள்ள முடியும். (http://www.arangamnews.com/)

பத்திரிகை குறித்த தங்கள் பாராட்டுகளுக்கு நன்றி.

## கடிதம் –02



இ. தேவராசா
வல்லியம்பிள்ளை வீதி,
தம்பிலுவில்.

அரங்கம் பத்திரிகைக்கு பாராட்டு

அரங்கம் பத்திரிகை ஒரு சிறந்த பத்திரிகை. அதில் வெளிவரும் செய்திகள் அனைத்தும் மிகச் சிறந்தவை. இலவச இதழாக வெள்ளி தோறும் வெளிவரும் அரங்கம் பத்திரிகைக்கு பாராட்டுக்கள். சுவாமி விவேகானந்தர் சொன்னார் “வீரமிக்க ஏதோ ஒரு காரியத்தைச் செய்“ என்று

அந்த வீரமிக்க காரியத்தை அரங்கம் பத்திரிகை செய்கிறது. பாராட்டி வாழ்த்துகிறேன். அரங்கம் பத்திரிகை மென்மேலும் சிறந்து வளர்ந்து வர இறைவனைப் பிரார்த்திக்கிறேன். மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் அரங்கம் மிகச்சிறந்த பத்திரிகை.

### பதில்

பத்திரிகை குறித்த தங்கள் பாராட்டுகளுக்கு நன்றி.

# கிழக்குப் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா



கிழக்குப் பல்கலைக் கழகத்தின் விஷேட பொது பட்டமளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை வந்தாறுமூலை வளாகத்திலுள்ள நல்லையா மண்டபத்தில் மூன்று அமர்வுகளாக நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக் கழக வேந்தர் வைத்திய கலாநிதி வேல்முருகு விவேகானந்தராஜா தலைமையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம், சித்த மருத்து கற்கைகள் பிரிவு, பிரயோக விஞ்ஞான பீடம், விவசாய பீடம், கலை கலாசார பீடம், வணிக முகாமைத்துவ பீடம், தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள் பீடம், சுவாமி விபுலானந்தா அழிகியற் கற்கை நிறுவகம் ஆகிய பிரிவுகளில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்த 376 பேருக்கு பட்டம் வழங்கப்பட்டது.



## குறுக்கெழுத்துப்போட்டி இல:–06

அரங்கம் இரா. தவராஜா.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | 3 | ■ | 4 |
| | ■ | ■ | 5 | | | |
| 6 | | 7 | | | ■ | |
| | ■ | 8 | | | ■ | ■ |
| ■ | 9 | | | | 10 | ■ |
| 11 | | ■ | ■ | ■ | | 12 |
| ■ | | ■ | ■ | 13 | | |

**இடமிருந்து வலம்:**

01. மட்டுநகர் விமர்சகர்களில் பேர் பெற்ற அமரர்.
05. அசுத்தம்.
06. வஞ்சனை.
08. வழி (குழம்பிக் கிடக்கிறது)
09. சூரியன் (குழம்பிக் கிடக்கிறது)
11. அடுக்குத் தொடர்.
12. முருகனின் ஆயுதம். (மாறிக் கிடக்கிறது)
13. வில்லனின் பெண்பால். (குழம்பிக் கிடக்கிறது)

**மேலிருந்து கீழ்:**

01. அகங்காரம்.
02. இராமரின் தந்தை.
03. முருகன். (குழம்பியுள்ளார்)
04. எய்தவனைத்தான் நோகவேண்டும், இதையல்ல.
07. அழிவு அல்லது சிறுமை. (குழம்பிக்கிடக்கிறது)
09. அழகு.
10. முச் செல்வங்களில் முதல் செல்வம்.
12. பாதுகாப்புக்காக இட்டுக் கொள்வது.

இதற்குரிய சரியான விடையை அரங்கம் செய்திக் கூப்பனில் நிரப்பி அஞ்சல் அட்டையில் ஒட்டி 14.06.2018க்கு முன்னர்
அரங்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.
அரங்கம் நிறுவனம்:
227 பார் வீதி, மட்டக்களப்பு.

சரியான விடையை எழுதி அனுப்புவர்களில் அதிஸ்டசாலிகள் மூவருக்கு தலா 100 ரூபாய் பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல:–01 இன் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 மு | 3 து | ■ | 4 ச | க | 5 தி |
| 6 ர | டி | ம் | 7 க | கா | ■ | தை |
| ங் | ■ | 8 பி | ட | ரி | ■ | ப் |
| 9 க | டை | க் | க | ■ | ■ | பு |
| ம் | ■ | 10 கை | ம் | 11 பெ | ண் | ■ |
| ■ | 12 கா | ■ | ■ | ரு | ■ | 13 லை |
| 14 ங் | து | க | ப் | மை | ப | த |

**சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலிகள் மூவர்:–**

01. த.குலசேகரம் (மட்டிக்களி)
02. க.புண்ணியநேசன் (காரைதீவு–05)
03. சி.பாலசுப்ரமணியம் (சின்ன உப்போடை)

-- இவர்களுக்குரிய பரிசுப் பணம் அனுப்பி வைக்கப்படும்.

-- இப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு அரங்கம் பத்திரிகையின் நன்றிகள்.

தொடர்ச்சி.

## ‘ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன் : தமிழரின் வாக்கும் கிடைக்கும்‘ - கோட்டாபய



ஒன்றிணைந்த எதிரணி உட்பட பலரது ஒத்துழைப்புக்களும் கிடைக்கும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை வடக்கில் போரில் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர்ந்த விவகாரம் தொடர்பாக கருத்து வெளியிட்ட கோட்டாபய ராஜபக்ச, வடக்கு மக்கள் தங்களது உறவுகளை நினைவுகூரவில்லை என்றும், இவ்வாறான செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கியிருக்கவே கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் நீங்கள் போட்டியிட்டால் தமிழ் மக்களின் வாக்குகளை உங்களால் பெறமுடியுமா என்று இதன்போது கேள்வி கேட்கப்பட்டது.
இதற்கு பதிலளித்த அவர், மஹிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டார். அதேபோல முஸ்லிம் மக்களுக்குள் கொண்டுசெல்லப்பட்ட பிழையான சிந்தனைகளால் அவர்களும் பின்வாங்கினார்கள். அதனை அவர்களை சந்தித்து, பல தருணங்களில் உணர்ந்துகொண்டதோடு, அதனை தெளிவுபடுத்தவும் முயற்சி செய்தேன். இந்நிலையில் எனக்கு தமிழ் பேசும் மக்களின் ஆதரவு கிடைக்கும் என்றும் கோட்டாபய ராஜபக்ச நம்பிக்கை வெளியிட்டார்.

## கடுக்கதை

### உள்ளக் குளிர்வு உயர்வைத் தரும்.

அதி நேர்த்தியான சிகையலங்கார நிலையத்திற்கு வரும் வாடிக்கையாளர்களை வடிவாக்க சிகையை வாரிவிடும் சீப்பும், முடியை வெட்டிவிடும் கத்தரிக்கோலும் கதைத்துக் கொண்டன.

நான் வாடிக்கையாளர்களின் முடியை அளவாக, அழகாக வெட்டி



விடுவதால்தான் அவர்கள் வடிவாக மாறுகிறார்கள் என்றது கத்தரிக்கோல்.



இதென்ன புதினம்! நான் அவர்களின் தலையை வாரி வாரி எந்த இடத்தைக் கூட்டவேண்டும், குறைக்க வேண்டுமென உனக்கு காட்டுவதால்தான்

நீ வெட்டி அழகுபடுத்துகிறாய் என்பதை மறந்திடாதே! என்றது சிரித்தபடி தன் முழுப் பல்லையும் காட்டியது சீப்பு.

உங்கள் இருவருக்குள்ளும் ஏன் வீண் விவாதம்? நீங்கள் எப்படித்தான் செயற்பட்டாலும் இறுதியில் வாடிக்கையாளர்கள் என்னைப் பார்த்துத்தான் தங்கள் அழகைப் பார்க்கிறார்கள், திருப்தி கொள்கிறார்கள், உள்ளம் குளிர்கிறார்கள் என்றது கடையில் நிலையாக இருந்த நிலைக் கண்ணாடி.

கத்தரிக்கோலும் சீப்பும் “கப்சிப்“ என்றாகிவிட்டன.



கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா

“உண்மையாய் உழைப்பவை தாழ்ந்தவையாகிறன

உருவங்களை காட்டுவது உயர்ந்த நிலையாகிறது“



### மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்

## பிரிவினால் வாடல்

தொடர்ச்சி...

தன்னை மலராகவும் தன் காதலனை அந்த மலரை நுகர்கின்ற வண்டாகவும் பாவனைசெய்து காதலி பாடுகின்ற இதுபோன்ற பாடல்கள் நிறையவே உள்ளன.
நாளாக நாளாக அவளுக்கு நம்பிக்கை தளர்கிறது. தன்னையறியாமல் தவறேதும் செய்துவிட்டோமோ? அவன் வரவு தாமதிப்பதற்கு அதுதான் காரணமோ என்று மானம் கலங்குகிறது. வாய் புலம்புகிறது.

பொன்னெழுத்துக் கோப்பையிலே
பொரிச்ச கறி திண்ட மச்சான்
என்னைவிட்டுப் பிரிய நான்
என்ன குற்றம் செய்தேனோ?

அவன் இப்படி நீண்ட நாட்களாக தன்னை நினைத்தும் பார்க்காமல் இருக்கலாமா? தான் சிறுமியாக இருந்தபோது ஓடிப்பிடித்து விளையாடி, உள்ளம் நெருங்கி உறவாடி, கூடிக்கதைகள் பல பேசி தன் கூச்சமெல்லாம் போக்கியவன், இப்போது

தன் கன்னிப் பருவத்தின்போது தன்னைக் கண்ணெடுத்தும் பாராமல் இருப்பதன் காரணமென்ன என்று ஓர் அப்பாவிபோலக் கேட்கிறாள்.

குஞ்சிப் பயிரிலே
கூச்சம் தெளிவிச்ச மச்சான்
கதிரு குடலையிலே
கைபறிய விட்டதென்ன

குஞ்சிப்பயிர் என்பது அவளது சிறுபராயத்துக்கும், கதிருகுடலை என்று கதிர்விடுகின்ற - காய்க்கின்றபருவத்திலுள்ள - பயிர் அவளின் கன்னிப்பருவத்திற்கும் எத்தனை அர்த்தங்களோடு உவமிக்கப்பட்டிருக்கிறது இந்தப்பாடலிலே!

பெண்கள் மட்டுமல்ல பிரிவினால் துயருறும் ஆண்களும் பாடிய பாடல்கள் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்களிலே ஏராளமாக உள்ளன.

சின்னஞ்சிறு வயதுமுதல் சேர்ந்து பழகி, பருவம் வந்தபின்னர் மணம்முடித்த முறைமச்சாளை தன் வேலை நிமிர்த்தமாகப் பிரிய நேரிட்ட ஒருத்தனின் ஓலம்போலல்லவா இது இருக்கிறது?

ஆசைக்கிளி வளர்த்து
அக்கரையில் கொண்டுவைத்துப்
பேசிப்பழகமுதல் அதை,
பிரிந்துவிட்டு வந்தேனே

அவளைக் கண்டு கன நாள் சென்றுவிட்டதால் இப்போதெல்லாம் சாப்பாடுகூட சரியாக்ச செமிப்பதாயில்லை அவனுக்கு.

கண்டுக்கிளியாரைக்
கண்டுகதை பேசாமல்
உண்ணுகிற சோறும்
உறங்கவில்லை இப்பொழுது
கண்டுக்கிளியைக்
கண்டுவெகு நாளானதினால்
உண்ணுகிற சோறு என்,
உடலிரே ஒட்டுதில்லை

இன்று, அவள் இல்லாமல் சாப்பாடு அவனுக்கு சமிக்கவில்லை. ஆனால் அன்று அவள் கொடுத்த சாப்பாடு இன்னும் மறக்கவில்லை.

அன்னப்பசுங்கிளியே நீ
ஆக்கிவைச்ச சோறுகறி
சூத்திரத்து நூல்போல
சுத்துதடி நாவினிலே

வயலிலே உழவுவேலை நடக்கிறது. கலப்பையினை இழுக்கும் காளைமாடு களைப்பினால் நடக்க மறுக்கிறது. அதை நடக்கவைத்து வயலை உழுவதற்கு அவன் படுகின்ற அவஸ்தை கொஞ்சநஞ்சமல்ல. அந்த நேரத்தில்கூட, அவித்த நெல்லைக் காயவைப்பதில் தனது மனைவி கஷ்டப்படுவாளே என்ற கவலைதான் அவனது நெஞ்சிலே எழுகிறது.

நடவாக் கிடாமாடும்
நானும் இந்தப் பாடுபட்டால்
காயாப் புழுங்கலும் என்,
கண்மணியும் என்னபாடோ ?

இதே வேளை வீட்டிலேயுள்ள அவள் மனமோ வெயிலிலே நின்று வேலைசெய்யும் கணவனை நினைத்து வெதும்புகிறது.

பொழுது கிளம்பிப்
பூமி இந்தச் சூடு சுட்டால்
தட்டாத் தரையில் அவர்
தங்கமேனி எப்படியோ

அவன் வெளியூர் சென்றிருந்ததால் ஒருவரையொருவர் காணாது தவித்துக்கொண்டிருந்த மச்சானும் மச்சாளும் நீண்டநாட்களுக்குப் பின்னர் முதன்முதலாகச் சந்திக்க நேரும்போது எப்படியிருக்கும்? மனது துடிக்கும். கண்கள் பனிக்கும். வார்த்தை வெடிக்கும். அந்த நிலையில் அவன் பாடும் பாடல் எப்படியிருக்கும்?

மூணுநாள் மட்டிலேயும்
மூலையிலே வந்து நின்று
மண்ணால் எறிஞ்சேன் உன்ர
மனசறிய வேண்டுமென்று

ஓ.. வந்து மூன்று நாட்களாகிவிட்டதா? தன்னைப்பார்க்க அவன் வந்திருந்தும் தன் கண்ணில் படவில்லையே என்று துக்கமும், அதற்காகவே அவனோடு ஒருவித கோபமும் வருகிறது அவளுக்கு. தன் துக்கத்தை நையாண்டியோடு வெளிப்படுத்துகிறாள்.

கல்லால் எறிஞ்சால் மச்சான்
காயம் வரும் என்று சொல்லி
மண்ணால் எறிஞ்சி மச்சான்
மச்சிமுறை கொண்டாடுறார்

அவனுக்கு அவளின் துக்கமும் தெரிகிறது. நக்கலும் புரிகிறது. இந்த இக்கட்டான நேரத்தில் சரணாகதியொன்றே சரியான வழி என்று இப்படிப் பாடுகிறான்-

மண்ணால் எறியவில்லை மச்சி என்னை
மாறாக எண்ணாதே
மருதாணிதானும் மச்சி உன்
மலர்மேனி தாங்காதே

அவ்வளவு மென்மையானவள் நீ என்று சொல்லி அவள் மனதைக் குளிரவைத்து மேலும் சொல்கிறான்-

பூவையரே மச்சி
பொரிச்சரிசி நிறத்தாளே உந்தன்
சிரிச்ச முகம் காணாமல்
தயங்கித் தவித்தேனே

இப்படி அவன் சொன்னதும் இமயத்தின் உச்சியிலிருந்து தடாலென்று அடிவாரத்திலே விழுந்ததுபோல எல்லாம் மறந்தாள். அவனது அன்பிலே நனைந்தாள். பாடல் புனைந்தாள். நளினத்தோடு அவளது பாடல் பிறக்கிறது.

நன்றாகச் சொன்னீர்கள்
நான் பட்ட கயிற்றமெல்லாம்
ஒன்றா இரண்டா நான்
உங்களுக்குச் சொல்லிவிட

இப்படிச் சொல்லும்போது அவள் கண்கள் கலங்குகின்றன. கண்ணீர்த் துளிகள் விழுவோமா இருப்போமா என்று தளம்புகின்றன. அவனது கைகளோ அவளை அணைப்போமா, கண்ணீரைத் துடைப்போமா என்று தயங்குகின்றன. இனியும் அவளை இப்படிக் கலங்க விடலாமா ? அதனால், சம்மத்ததைச் சொல்லிவிடு. தாலிகட்டப் பெண்கேட்டுத் தூது அனுப்புகிறேன் என்று ஆறுதல் வார்த்தை கூறுகிறான்.

காசி தரட்டோ மச்சி
கதைச்சிருக்க நான் வரட்டோ
தூது வரக்காட்டிடட்டோ - இப்போ
சொல்கிளியே வாய்திறந்து

திடீரென்று இப்படிக் கேட்டதும் அவள் திகைத்துவிட்டாள். அவனைக் கவலைப்படுத்திவிட்டோமே என்று பதைத்துவிட்டாள். அதனால் பதிலொன்றை உடனே இப்படி விட்டாள்.

கலங்காத மச்சான்
காசுபணம் என்ன செய்யும்



குலைபோட்ட வாழைமரம்
கூடுமெண்டாச் சம்மதந்தான்

குலைபோட்ட வாழைமரம் - அதாவது - பலபிள்ளைகளைப் பெற்ற தனது தாய் சரியென்று சொல்லிவிட்டால் தனக்குச் சம்மதந்தான் என்று சொல்லி இவ்வளவு நேரமும் அவனை உபசரிக்காமலே இருந்துவிட்டோமேயென்று உடனேயே சாப்பிட அழைக்கிறாள்.

பாலால் அரிசரித்துப்
பன்னீரால் உலை வாத்துவைத்து
நெய்யால் கறி சமைத்தேன்
என்ர நேசக்கிளி சாப்பிடுங்கோ

இப்போது சோகம் மறைந்து சுமுக நிலை திரும்பிவிட்டதல்லவா? எனவே வழமையான நையாண்டியுடன் அவன் பதிலாகப் பாடுகின்றான்.

வாழைக்காய் மந்தம்
வழுதிலய்காய் சிறு கிரந்தி
கீரையோ வாதம் என்ர
கிளிமொழிக்கு என்ன கறி?

அதற்குப் பதிலாக அவள் என்னென்ன சாப்பாடு இருக்கிறது என்று சொல்லி, கடைசியில் கிரந்தி என்று அவன் சொன்ன வழுதிலங்காய் (கத்தரிக்காய்) சுண்டலும் இருக்கிறது என்று நையாண்டிக்கு நையாண்டியாகச் சொல்கிறாள்.

அரிசி சமைச்சிருக்கு
ஆட்டிறைச்சி ஆக்கிருக்கு
வடிவாய்ப் பொரிச்சிருக்கு
வழுதிலங்காய் சுண்டிருக்கு

சாப்பிட்டு முடிந்ததும் முற்றத்தில் அமர்ந்து பேசிக்கொண்டு இருக்கிறார்கள். மற்றவர்களும் வீட்டிலே இருப்பதால் இடவெளிவிட்டுச் சற்றுத் தள்ளித்தள்ளியே அமர்ந்திருக்கிறார்கள்.

அளவான நிலவு, இதமான தென்றல், அழகான மச்சாள் பக்கத்தில், தனியாக அவனோடு முற்றத்தில்.. .. ஒரு விதமான உணர்வு புதுவிதமாக எழுந்தது அவன் நெஞ்சத்தில்!

குறுக்கால் பிளந்த
கொவ்வைப் பழமொன்றை
நறுக்கென்று கடித்துண்ண
நான் கனவு கண்டேனே

கனவிலே அவளை முத்தமிட்டதாகக்கூறி, அப்போதைய தன் ஆசையை, தேவையை, இப்படி நாகரிகமாக, நாசூக்காகக் கூறுகின்றான்.

சட்டென்று அவள் பதில் கூறுகிறாள். காலம் வரட்டும் அப்போதுதான் உன் கைக்கு எட்டுவேன் என்பதுபோல-

மச்சானே மாம்பழமே
மாமிபெத்த ஓவியமே
எட்டாத பழத்திற்கு நீ
கொட்டாவி விட்டதென்ன?

இவ்வாறு பகிடியாகப் பாடிவிட்டு அவள் உடனே கிளுக் என்று சிரித்துவிடுகிறாள் - அடக்கமுடியாமல். அந்தச் சிரிப்பை அவள் பச்சைக்கொடி காட்டுகிறாள் என்றெண்ணி அருகேவா என்று அழைக்கிறான். எப்படி?

அக்கரையில் கொக்கே
அணில்கோதா மாம்பழமே
இக்கரைக்கு வந்தியெண்டா
ஒரு இனித்தகனி நான் தருவேன்

முற்றத்திலே இருவரும் ஒருவரோடொருவர் கதைக்கும் தூரத்தில்தான் இருக்கிறார்கள். அதுவே அவனுக்கு அதிக தூரம்போல இருக்கிறது. அதனால்தான் அக்கரையில் இருக்கிறாய் என்று அவள் இருக்கும் தூரத்தை அதிகப்படுத்திக் காட்டுகிறான். அவள் தன்னோடு நெருங்கி அமரவில்லையே என்று குத்திக்காட்டுவது அதன் நோக்கம்.

ஆசை அவளுக்கும் இருக்கிறது. ஆனால் பண்பாடு தடுக்கிறது. தாலி ஏறும் வரை தள்ளியே பழகுவதுதானே பண்பாடும் பாதுகாப்பும்? அதனால்,


ஓருசாண் மெத்தையில
ஒண்ணரைச்சாண் பலகையில
தள்ளிப்படு மச்சான்
ஒரு சொல்லுக்கிடம் வையாமல்

என்றுசொல்லி, வெளியே திண்ணையிலே கட்டில் இருக்கிறது உங்களுக்கு. தப்பாக மற்றவர்கள் கதைக்க இடந்தராமல் தள்ளியே இருப்போம் என்று முற்றுப்புள்ளி வைத்தாள் அவனது ஆசைக்கு - தற்காலிகமாக.


ஒவ்வொரு தருணத்தையும்
விழாக்காலமாக மாற்றுங்கள் ...
LAC
Little Asia
WELLAWATTE / PETTAH
317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06. | T: +94 11 250 4470, 250 6098
| F: +94 11 2506934 E: info@littleasia.lk | www.littleasia.lk | skype: little.asia.emporium
73, Main Street, Colombo 11. | T: +94 11 2391592, 2391593 | F: +94 11 2391745
E: info@littleasiasilk.com | www.littleasiasilk.com | Skype: little.asia.silk


NIRUTHA
HOTEL
NIRUTHA
Main Road, Kommathurai, Chenkalady, Sri Lanka.
Tel: +94652054444 Fax:+94652054092
Hotline: +94779990910 UK Hotline: +447850927964
Email: hotelnirutha@yahoo.com
Visit: www.hotelnirutha.com
Front desk staffed 24 / 7


PUSHPA CONSTRUCTION
Pushpa Home Designer & Builder
கட்டிட நிர்மான சேவைகள் ஒரே கூரையின் கீழ் (All Services are under the one roof)
23,Pumping Station Road,
Palameenmadu,Batticaloa
077 990 1403


Manufacturers & Sellers of
All Kind of Gem & Jewellery
SUN GEM & JEWELLERY (pvt) Ltd.
Gold Centre, Shop No. 84, 180, N H M Abdhul Carder Mw, Colombo 11, Sri Lanka.
Tel : +94 11 2330664, +94 11 2330663 Fax : +94 11 2322204 Email : sungempvt@gmail.com